இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 183 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 01 – செவ்வாய்க்கிழமை 13 பிப்ரவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 183 : Thiruvalluvar Year - 2055 - Maasi 01 - Tuesday 13 February 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு - செழுமைக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு

# மகத்தான தமிழ்க் கனவை நிறைவேற்றுவோம்!

## பேரவைத் தலைவர் படித்த ஆளுநர் உரையில் உறுதிபடப் பிரகடனம்!



சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் நேற்று (12.02.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் அவர்களின் உரையின் தமிழாக்கத்தை வாசித்தார்.

**சென்னை, பிப். 13 -**

**“மக்களின் நல்வாழ்வு, செழுமைக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு மகத்தான தமிழ்க் கனவை நிறைவேற்றுவோம்” என்று சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த ஆளுநர் உரையில் உறுதிபடப் பிரகடனப்படுத்தியுள்ளார்.**

**பேரவைத் தலைவர் படித்த ஆளுநர் உரை வருமாறு:**

2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில் எனது உரையை நிகழ்த்துவதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு, இப்புத்தாண்டில் நமது மாநிலத்தில் மகிழ்ச்சியும், வளமும், நலமும் தழைத்தோங்க எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்த இந்த அரசின் உயர்ந்த நோக்கங்களை, காலத்தை வென்ற ஐயன் திருவள்ளுவரின் குறள் ஒன்றைக் குறிப்பிட்டு, எனது உரையை தொடங்க விரும்புகின்றேன்.

**பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து**

(குறள் 738)

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு.

கடந்த பத்தாண்டுகளில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் ஆற்றல் மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. நாட்டின் நிலப்பரப்பில் 4 சதவீதத்தையும், மக்கள் தொகையில் 6 சதவீதத்தையும் மட்டுமே கொண்டுள்ள நமது மாநிலம், இந்தியாவின் பொருளாதாரத்தில் 9 சதவீதத்திற்கும் அதிகமான பங்கினை அளிக்கிறது. 2022-23ஆம் ஆண்டில், 7.24 சதவீத நிலையான தேசிய வளர்ச்சி வீதத்தை விஞ்சி, நமது மாநிலத்தின் பொருளாதாரம் 8.19 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே வேளையில், சராசரி பணவீக்கத்தைப் பொறுத்தவரை, 2022-23 ஆம் ஆண்டில் நாட்டின் 6.65 சதவீத பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் பணவீக்கம் 5.97 சதவீதமாக உள்ளது. நாட்டைவிட தமிழ்நாடு வேகமாக வளர்ச்சியடைவதோடு, அதே காலகட்டத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் நமது மாநிலம் திறம்படச் செயல்பட்டு வருவதை இது மெய்ப்பிக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், இந்த அரசின் அயராத முயற்சியின் விளைவாக, குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியினை தமிழ்நாடு கண்டுள்ளது. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றத்தினால், 2021-22ஆம் ஆண்டில் நான்காம் இடத்திலிருந்த நமது மாநிலம், 2022-23 ஆம் ஆண்டில் நாட்டிலேயே முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. நிதி ஆயோக்கின் 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டின்படி, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களை விஞ்சி, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

வலுவான பொருளாதாரம், சமூக இணக்கத் தன்மை மற்றும் மகத்தான மக்களாட்சி ஆகியவையே, நமது மாநிலம் தொடர்ந்து நாட்டிலேயே அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் முதல் முகவரியாகத் திகழ்வதற்கு வழிவகுக்கின்றன. கடந்த ஜனவரி 7 மற்றும் 8ஆம் தேதிகளில் சென்னையில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட **உலக முதலீட்டாளர்கள் மாநாடு** இதற்கு ஒரு சான்றாகும். தமிழ்நாட்டின் தலைசிறந்த தொழில் சூழலமைப்பையும் அதன் எதிர்காலத்திற்கேற்ற வகையிலான மனிதவளத்தையும் உலகிற்குப் பறைசாற்றும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது. முப்பதிற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து புகழ் பெற்ற அறிஞர்கள், முன்னணி நிறுவனங்க ளின் மூத்த நிர்வாகிகள், கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்ற இந்நிகழ்வு தமிழ்நாட்டை உலகளவில் தலைமை நிலைக்கு உயர்த்துவதற்கு உகந்த தளமாக அமைந்தது.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, 14.54 இலட்சம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், முன் எப்போதும் இல்லாத அளவிலான, மொத்தம் 6.64 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் செய்வதற்கு, சாதனை படைக்கும் வகையில் நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இம்முதலீடுகள், மாநிலத்தின் முன்னேற்றப் பாதையை வடிவமைத்து, உயர்நிலை பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும். மேலும், இந்நிகழ்வில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **1 டிரில்லியன் டாலர் தமிழ்நாடு பொருளாதாரம்** குறித்த தொலைநோக்கு ஆவணத்தை வெளியிட்டார். இந்த உயரிய இலக்கை அடைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நமது அரசு மேற்கொண்டுவருகிறது.

> **“மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் நாட்டிலேயே முதல் மாநிலம்!**
>
> மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றத்தினால், 2021-22ஆம் ஆண்டில் நான்காம் இடத்திலிருந்த நமது மாநிலம், 2022-23 ஆம் ஆண்டில் நாட்டிலேயே முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. நிதி ஆயோக்கின் 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டின்படி, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களை விஞ்சி, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.”

### தமிழ்நாடு நாட்டின் முன்னணி விளையாட்டு மையமாக நிலைநிறுத்தம்!

தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்துவதற்கு இந்த அரசு இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், நம் மாநிலத்தை நாட்டின் முன்னணி விளையாட்டு மையமாகவும் நிலைநிறுத்தியுள்ளது. சர்வதேச செஸ் ஒலிம்பியாட் மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் போன்ற மகத்தான விளையாட்டு நிகழ்வு களை சிறப்பாக நடத்தியதன் மூலம், அந்த நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது. 6-வது **கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்**, தமிழ்நாட்டில் முதன் முறையாக ஜனவரி, 19, 2024 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் பிரமாண்டமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. 13 நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில், 26 விளையாட்டுப் பிரிவுகளில் நாடு முழுவதிலுமிருந்து 5,600 இளம் விளையாட்டு வீரர்கள் தேசிய அரங்கில் தங்களின் திறனை வெளிப்படுத்தினர். இம்முறை தமிழ்நாடு 38 தங்கம், 21 வெள்ளி மற்றும் 39 வெண்கலம் என மொத்தம் 98 பதக்கங்களைப் பெற்று, இந்தியாவிலேயே இரண்டாமிடம் பிடித்து சாதனை படைத்தது. இந்த நிகழ்வுகளும், நவீன விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க அரசால் வடிவமைக்கப்பட்ட பெருந்திட்டங்களும், திறமையான விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க உகந்த சூழலை உருவாக்குவதோடு, உலகளாவிய விளையாட்டு அரங்கில் நமது மாநிலத்தை ஒரு முன்னணி மாநிலமாக நிலைநிறுத்துவதற்கும் வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

### மாநிலம் சந்தித்த பல பேரழிவுகள்!

நமது மாநிலம், கடந்த சில ஆண்டுகளில் பல பேரழிவுகளைச் சந்தித்தபோதிலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றம் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க சாதனையை அடைந்துள்ளது என்பது பாராட்டத்தக்கது. சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் எதிர்கொண்ட மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் வரலாறு காணாத மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளால் மாநிலம் அடுத்தடுத்து இரண்டு பெரும் இயற்கைப் பேரிடர்களைச் சந்தித்தது.

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 44 மணி நேரம் வரலாறு காணாத அளவில் தொடர்ந்து பெருமழை பெய்தது. வெள்ள நிவாரண நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள முழு அரசு இயந்திரமும் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டு, நிவாரணப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டது. திறமையான திட்டமிடல், மற்றும் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்தின் நீர் மேலாண்மை போன்றவற்றால் மனித உயிரிழப்புகள் மற்றும் சொத்து இழப்புகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், பலத்த மழையால் அதிகளவில் வெள்ளம் ஏற்பட்டதால், இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் உடைமைகள் மற்றும் வாழ்வாதாரத்தை இழக்க நேரிட்டது. அரசால் மேற்கொள்ளப்பட்ட துரித நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளின் விளைவாக பெரும்பாலான பகுதிகள் ஒரு சில நாட்களிலேயே இயல்புநிலைக்குத் திரும்பின. மிக்ஜாம் புயலின் பாதிப்பில் இருந்து நமது மாநிலம் மீள்வதற்கு முன்னரே, தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகியவை வரலாறு காணாத கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கணிசமான அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டு, உடைமைகளும் சேதமடைந்தன.

### மக்களின் துயர் நீக்கும் பொருட்டு நிவாரண உதவிகள்!

மக்களின் துயர் நீக்கும் பொருட்டு, முதலமைச்சர் அவர்கள், 1,487 கோடி ரூபாய் செலவில், சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பேரிடரால் பாதிக்கப்பட்ட 24.25 இலட்சம் குடும்பங்களுக்கு தலா 6,000 ரூபாய் ரொக்கம் உள்ளிட்ட பல நிவாரண உதவிகளை அறிவித்தார். மேலும், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பெரிதும் சேதமடைந்த பகுதிகளில், பாதிக்கப்பட்ட 6.63 இலட்சம் குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக தலா 6,000 ரூபாயும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் சேதமடைந்த பகுதிகளிலுள்ள, பாதிக்கப்பட்ட சுமார் 14.31 இலட்சம் குடும்பங்களுக்கு, தலா 1,000 ரூபாயும், 541 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என அறிவித்தார்.

மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் வரலாறு காணாத எதிர்பாரா மழைப்பொழிவினால் மாநிலத்தின் பொதுச் சொத்துகள் மற்றும் கட்டமைப்புகளுக்கு பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே, தற்காலிக மற்றும் நிரந்தர மறுசீரமைப்புப் பணிகளுக்காக

**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**

## தொழில் முதலீட்டில் உலகளவில் தலைமை நிலைக்கு உயர்த்த உகந்த தளம் தமிழ்நாடு!


இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 13-02-2024

# போராட்டம் நடத்தும் முதலமைச்சர்கள் - 2

முதலமைச்சராக இருந்த போது மாண்புமிகு மோடி அவர்கள் என்ன சொன்னார்கள்?

“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும்போது கேட்டவர்தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். அதைத்தான் இன்று தமிழ்நாடு - கேரள - கர்நாடக - மேற்கு வங்க - பஞ்சாப் - டெல்லி முதலமைச்சர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு மோடி அவர்கள் அப்போது குஜராத் முதலமைச்சராக இருந்தார். **“உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைக் குஜராத் மாநில பெண் ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருக்கிறார். பெண்களுக்கு எதிரியாகப் பெண் ஆளுநரே இருக்கிறார். ஒரு பெண்மணி குஜராத்தின் ஆளுநராக இருந்தும், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனது நமது துரதிருஷ்டமே”** - என்று 2013 ஏப்ரல் 8ம் தேதி. டெல்லியில் நடந்த இந்தியத் தொழிலக சம்மேளனத்தின் (FICCI) கூட்டத்தில் பேசினார் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி. அதைத்தான் இன்று தமிழ்நாடு - கேரள - கர்நாடக- மேற்கு வங்க - பஞ்சாப் - டெல்லி முதலமைச்சர்கள் சொல்கிறார்கள்.

மாநிலங்களிடம் இருக்கும் நிதி வளத்தை பறித்துச் சென்று விட்டு நிதியும் தருவது இல்லை. கடன் வாங்கவும் விடுவது இல்லை. இவ்வளவுதான் வாங்க வேண்டும் என்று தடை போட்டு பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தானும் தர மாட்டேன், அடுத்தவரையும் தர விட மாட்டேன் என்பதுதான் இந்த வஞ்சக எண்ணம் ஆகும்.

**“மாநிலங்களின் கொள்கை முன்னுரிமைகளின்படி வளங்களைத் திரட்டுவதற்கும், முக்கியமான வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கும் உள்ள திறனை முடக்குவதையே ஒன்றிய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது” என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குற்றம் சாட்டுவது இதனால்தான். “கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது” என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.**

ஒன்றிய அரசின் திட்டமான, சென்னை மெட்ரோ இரயில் 2 ஆம் கட்ட திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் வேண்டுமென்றே கால தாமதம் செய்ததால், இத்திட்டத்திற்கான மொத்த கடனான 33,594 கோடி ரூபாய் முழுவதும், மாநிலத்தின் நிகரக் கடன் உச்சவரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளது.

★ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது. இழப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது.

**கடந்த ஐந்து நிதி ஆண்டுகளில் (2018-23) வரை எத்தகைய மோசடியை பா.ஜ.க. அரசு செய்து வருகிறது என்பதை இந்த புள்ளிவிபரம் காட்டும்.**

**ஒரு ரூபாயை தமிழ்நாட்டில் இருந்து பெற்றால் அதில் இருந்து 29 பைசாவைத் தான் திரும்பத் தருகிறது பா.ஜ.க. ஆனால் உத்தரப்பிரதேசத்தில் இருந்து ஒரு ரூபாய் பெற்றால் 2 ரூபாய் 73 பைசா தருகிறது பா.ஜ.க. அரசு. உத்தரப்பிரதேசத்துக்கு ஏன் தருகிறீர்கள் என்று நாம் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கும் ஏன் அதைப் போல தர மறுக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறோம்.**

**பா.ஜ.க. தமிழ்நாட்டில் 26 பைசா அளவுக்குத் தான் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?**

கர்நாடகாவுக்கு 16 பைசாவும், தெலங்கானாவுக்கு 40 பைசாவும், கேரளாவுக்கு 62 பைசாவும், ஆந்திராவுக்கு 50 பைசாவும்தான் தரப்படுகிறது என்றால் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சனை அல்லவா இது? பணமாக வாங்கி பைசாவாக தருவது ஏன் என்று கேட்கக் கூடாதா?

பிரதமரின் வீடு கட்டும் திட்டம் என்று அதற்குப் பெயர். அந்தத் திட்டத்தில் கட்டப்படும் வீட்டுக்கு ஒன்றிய அரசு தருவது 1.50 லட்சம் ரூபாய் மட்டும்தான். இதில் மாநில அரசு தருவது 7.50 லட்சம் ரூபாய். ஆனால் இதற்குப் பெயர் மட்டும் பிரதமரின் வீடு கட்டும் திட்டம் ஆகும்.

**இரண்டு மாபெரும் பேரிடர்களை சந்தித்தது தமிழ்நாடு. ரூ.37 ஆயிரம் கோடி நிதி கேட்டோம். இதுவரை வழங்கப்படவில்லை. ‘காலில் முள் குத்தினால் கை உடனே எடுக்கும்’ என்று சொன்ன பிரதமர், ஏன் எடுக்க வரவில்லை? காலே உடைந்து கிடக்கிறதே தமிழ்நாட்டில். ‘நாடு என்பது மனித உடல்தான்’ என்றால் பிரதமருக்கு தமிழ்நாட்டு மக்கள் வெள்ளத்தில் மிதந்தபோது ஏன் துடிக்கவில்லை? உடனே ஏன் வரவில்லை?**




சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நேற்று (12.02.2024) நடைபெற்ற விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்த 977 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் இயக்குநர் மரு.ஆர்.இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# 22 ஆம் தேதி வரை சட்டமன்றக் கூட்டத் தொடர்!

## 19 ஆம் தேதி நிதி நிலை அறிக்கை தாக்கல்!

சென்னை, பிப். 13 - தமிழ்நாடு சட்டப் பேரவை கூட்டத் தொடர் பிப். 22 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. 19 ஆம் தேதி 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப் படுகிறது.

மறுநாள் 20 ஆம் தேதி நடப்பு நிதியாண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை தாக்கலாகிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நேற்று ஆளுநர் உரையுடன் தொடங்கியது. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அவரால் ஒப்புதல் தரப் பட்ட ஆளுநர் உரையின் முதல் பக்கத்தை மட்டும் படித்துவிட்டு தொடர்ந்து படிக்காமல் அமர்ந்து விட்டார்.

அதைத் தொடர்ந்து, ஆளுநரின் அச்சடிக்கப் பட்ட உரையின் தமிழாக்கத்தை பேரவைத் தலைவர் மு.அப்பாவு படித்தார்.

அவர் படித்து முடித்தவுடன் ஆளுநர் அவையை விட்டு எழுந்து சென்றுவிட்டார். தேசிய கீதம் இசைக்கும் முன் ஆளுநர் கடந்த ஆண்டைப் போலவே அவையை விட்டு வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் அவை முன்னவர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், அச்சடிக்கப் பட்ட ஆளுநர் உரையின் ஆங்கிலம் மற்றும் தமிழ் முழுவதுமாக அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டும் என்று குறிப்பிட்டு தீர்மானம் கொண்டு வந்தார்.

**துரைமுருகன் தீர்மானம்!**

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பேசுகையில்,

பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த ஆண்டிற்கான முதல் கூட்டத் தொடரின் தொடக்கமாக சட்டமன்றப் பேரவை மரபுகளின் படி ஆளுநர் அவர்களின் உரை நிகழ்ந்துள்ளது. ஆளுநர் அவர்கள் தனது உரையினை வாசித்த பின்னர், பேரவைத் தலைவராகிய தாங்களும் அரசு தயாரித்த உரையின் தமிழாக்கத்தினை அவையில் வாசித்தீர்கள். இது தொடர்பாக சட்டப் பேரவை விதி 17 ஐ தளர்த்தி, பின்வரும் தீர்மானத்தினை இப்பேரவையில் முன்மொழிகின்றேன்.

“2024 ஆம் ஆண்டுக்கான இந்த முதல் கூட்டத்தொடரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரை இந்த மன்றத்திற்கு வழங்கப்பட்டபடியே அவைக்குறிப்பில் பதிவேற்றம் செய்திட வேண்டும்” என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்று குறிப்பிட்டார்.

பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் அத் தீர்மானம் ஏற்கப்பட்டதாக பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து நேற்றைய பேரவைக் கூட்டம் முடிவுற்றது.

தொடர்ந்து பேரவைத் தலைவர் அறையில் அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற அலுவலாய்வுக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

அதில் மேற்கொண்ட முடிவின்படி வருகிற 22 ஆம் தேதி வரை பேரவைக் கூட்டம் நடத்துவது என்றும், 19 ஆம் தேதி நிதி வரவு, செலவு அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும், 20 ஆம் தேதி வேளாண்மை நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப் படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

13 மற்றும் 14 ஆம் தேதிகளில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும் என்றும், 15 ஆம் தேதி பதிலுரை நடைபெறுகிறது.

16,17 , 18 தேதிகளில் விடுமுறை. 22 ஆம் தேதி நிதி நிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் விவாதத்திற்கு பதிலுரை அளிக்கப்படுகிறது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் பொன்குமார் புதல்வி மணவிழா!

### அமைச்சர் பெருமக்கள் - அனைத்துக் கட்சித்தலைவர்கள் வாழ்த்துகின்றனர்!



சென்னை, பிப்.13 தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சியின் நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு அரசின் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவருமான பொன்குமார் - திருமதி மைதிலி பொன்குமார் ஆகியோரின் புதல்வி செல்வி கே. திவ்யாவுக்கும், சென்னை மாங்காடு பி.கிருஷ்ணன் - திருமதி. கே.கீதா ஆகியோரின் புதல்வர் செல்வன் கே.ரஞ்சித்குமாருக்கும் மணவிழா 15.2.2024 வியாழன் காலை 9 மணியளவில், சென்னை - நீலாங்கரையிலுள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இந்த மணவிழாவினை தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 14.2.2024 புதன் மாலை 6 மணியளவில் நீலாங்கரை, ஆர்.கே.கன்வென்சன் சென்டரில் நடைபெறுகிறது.

இம்மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நிர்வாகிகள், தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர்கள், மத்திய சங்க நிர்வாகிகள், ஆன்றோர், சான்றோர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பொறியாளர் எல்.நந்தகுமார், என்.லட்சுமி, சி. காளிமுத்து, கே.கமலா, சி.டில்லிபாபு, டி.சுமதி, ஆர்.செந்தில்நாதன், எஸ். விஜி, எல்.தேவராசன், டி.மாலதி, எம்.பார்த்தசாரதி, பி.மாலதி, என்.லட்சுமிநாராயணன், டாக்டர் என்.ராதா, கோ.பழனி, பி.நிர்மலா உள்ளிட்டோர் வரவேற்கின்றனர்.

நிறைவில் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் பொன்குமார், திருமதி மைதிலி பொன்குமார், கே. வினோத்குமார், திருமதி. ரேவதி வினோத் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்**
**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக, எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்னிலையில் குறிஞ்சி இல்லத்தில் வருகிற 14 மற்றும் 15–ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வுக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | மண்டலம் | நேரம் |
|---|---|---|
| 14.02.2024 புதன்கிழமை | 1 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 2 | மாலை 6.00 – 8.00 மணி |
| 15.02.2024 வியாழக்கிழமை | 3 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 4 | மாலை 6.00 – 8.00 மணி |

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 10–02–2024.

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் முதல் முகவரியாக திகழ்கிறது தமிழ்நாடு !

## பேரவைத் தலைவர் படித்த ஆளுநர் உரை ... முதல் பக்கத் தொடர்ச்சி

தென் மாவட்டங்களுக்கு 18,214 கோடி ரூபாயும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 19,692 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இப்பேரழிவின் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசிடம் வழங்கப்பட்ட இரண்டு விரிவான அறிக்கைகளின் அடிப்படையிலும் ஒன்றிய அரசு அலுவலர் குழுவின் நேரடி ஆய்வின் அடிப்படையில் தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக ஒன்றிய அரசு நிதி வழங்கும் என்று நம்புகிறோம்.

இயற்கைப் பேரிடர்களைத் திறம்படக் கையாண்ட இந்த அரசிற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்வரும் மாதங்களில் நமது மாநிலமும் அதன் பொருளாதாரமும், இந்த பாதிப்புகளிலிருந்து வலிமையுடன் மீண்டெழும் என்று உறுதியாக நம்புகிறேன்.

### சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறையை தொடர்ந்திடுக!

இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பெரும் நிதிச்சுமை நிலவும் நிலையில், சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலங்களின் நிதி ஆதாரங்களைத் திரட்டும் திறனும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரங்களை விட்டுக்கொடுக்க ஒப்புக் கொண்டபோது, சரக்கு மற்றும் சேவை வரி முறையின் முந்தைய காலத்திற்கு இணையான வருவாய் எட்டப்படும் வரை மாநிலங்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கப்படும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஒன்றிய அரசு 30.06.2022 அன்று சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறையை நிறுத்தியதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசுக்கு ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறையை ஒன்றிய அரசு தொடர்ந்திட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிதி நெருக்கடிக்கு இடையே, சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டப் பணிகளுக்கு தனது பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்திருந்த ஒன்றிய அரசு தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இத்திட்டத்தில் ஒன்றிய அரசும் நமது அரசும் 50:50 என்ற விகிதத்தில் சமபங்களிப்பு இருக்கும் என்ற அடிப்படையில் 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம், 2021-22 ஆம் ஆண்டின் ஒன்றிய வரவுசெலவுத் திட்ட உரையில் ஒன்றிய நிதியமைச்சரால் அறிவிக்கப்பட்டு, ஒன்றிய உள்துறை அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆனால், 17.08.2021 அன்று திட்ட முதலீட்டு வாரியம் (PIB) ஒப்புதல் அளித்தும் இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கருத்துரு நிலுவையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இதே காலகட்டத்தில் பிற மாநிலங்களின் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது மேலும் வருத்தத்தை அளிக்கின்றது. இந்த நியாயமற்ற அணுகுமுறையின் விளைவாக, இரண்டாம் கட்டத்திற்கான முழுச் செலவினமும் மாநில அரசால் அதன் வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இதனால், மாநில நிதிநிலையில் கடுமையான நெருக்கடி ஏற்படுகிறது. எனவே, ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான ஒப்புதலை விரைவில் அளிக்குமாறு வலியுறுத்துகிறோம்.

### மக்களின் குறைகளைக் களைந்திட ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

இத்தகைய சவால்களுக்கு இடையேயும் மக்களின் குறைகளை உடனுக்குடன் களைந்திடும் திறன்மிகு நிர்வாகத்தை வழங்கிட இந்த அரசு உறுதியாக உள்ளது. **முதல்வரின் முகவரி’** என்ற துறையின் கீழ், இதுவரை, மொத்தம் 20.31 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, தகுதிகளின் அடிப்படையில் 19.69 இலட்சம் மனுக்களுக்கு வெற்றிகரமாகத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. அரசு நிருவாகத்தையும் பொதுமக்களையும் மேலும் இணைக்கும் பொருட்டு, இந்த அரசு, **‘மக்களுடன் முதல்வர்’** என்ற மற்றொரு முன்னோடித் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் பெயருக்கேற்ப, தமிழ்நாட்டு மக்களின் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உடன் பயணிப்பார் என்ற நம்பிக்கையை இந்த முன்னோடித் திட்டம் விதைத்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து மாவட்டங்களிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் புறநகரைச் சுற்றியுள்ள (periurban) ஊராட்சிகளில், **30** நாட்களுக்குள் சேவைகளை வழங்கி, மனுக்கள் மீது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள, 2,058 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பொதுமக்களோடு நேரடித் தொடர்பில் உள்ள 13 அரசுத் துறைகள் வழங்கும் சேவைகள் மீது இந்த முகாம்கள் கவனம் செலுத்துகின்றன. இதுவரை பெறப்பட்ட 2.67 இலட்சம் மனுக்களில், 240 இலட்சம் மனுக்களுக்கு மனநிறைவுடன் தீர்வு காணப்பட்டுள்ளது.

சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு மற்றும் மத நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு மாநில அரசு உலக முன்னுரிமை வழங்குவதினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களால் தமிழ்நாடு அமைதியான மாநிலமாகக் கருதப்படுகிறது. இது, அண்மையில் நடந்து முடிந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்களைத் தடுப்பதில் இந்த அரசு சமரசமற்ற அணுகுமுறையைக் கடைபிடித்து வருகிறது. மேலும், சமுதாயக் கண்காணிப்பு, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்காணிப்பு மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

**மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட திட்டப் பணி! ஒப்புதல் வழங்குக!**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கருத்துரு நிலுவையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இதே காலகட்டத்தில் பிற மாநிலங்களின் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது மேலும் வருத்தத்தை அளிக்கின்றது. இந்த நியாயமற்ற அணுகுமுறையின் விளைவாக, இரண்டாம் கட்டத்திற்கான முழுச் செலவினமும் மாநில அரசால் அதன் வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து மேற் கொள்ளப்படுகிறது. இதனால், மாநில நிதிநிலையில் கடுமையான நெருக்கடி ஏற்படுகிறது. எனவே, ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான ஒப்புதலை விரைவில் அளிக்குமாறு வலியுறுத்துகிறோம்.**

### பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூகநீதி மற்றும் சமத்துவம் ஆகிய கொள்கைகளின் அடிப்படையிலான திராவிட மாடல் ஆட்சி முறையைப் பின்பற்றுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. பெண்களின் முழுமையான ஆற்றலையும் திறமைகளையும் செம்மையாகப் பயன்படுத்தும்போது மட்டுமே சமூகத்தில் உண்மையான முன்னேற்றம் சாத்தியமாகும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த நோக்கத்துடன், இந்த அரசு தனது முதன்மைத் திட்டமான ‘**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத்**’ தொடங்கி, 115கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் மாதந்தோறும் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கி, தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டியுள்ளது. தமிழ்நாட்டின் பெரும் தலைவர்களுக்குப் புகழ் சேர்க்கும் வகையில், பேரறிஞர் அண்ணா அவர்களின்பிறந்தநாள்மற்றும்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாளன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட இப்பெருந்தலைவர்களின் அயராத முயற்சிகளைத் தொடர்ந்திடும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டம், மாநிலத்தில் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெருமளவில் ஊக்கமளிக்கும்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு கல்வி முக்கியம் என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, உயர்கல்வியில் மாணவியர் சேர்க்கையை உயர்த்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த இலக்கினை நோக்கி, அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, பின்னர் உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கிடும் வகையில், ‘**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டம்**’ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்புக் கல்வியாண்டில், இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 2.73 இலட்சம் மாணவிகள் பயனடைகின்றனர். இம்முயற்சியின் விளைவாக, நடப்புக் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்று, கல்லூரிகளில் சேரும் மாணவியரின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரண நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றிப் பயணிக்கும் மிகவும் சிறப்பு வாய்ந்த ‘**விடியல் பயணத் திட்டத்தைச்**’ செயல்படுத்துவதில் இந்த அரசு, நமது நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது. இதன் விளைவாக, பேருந்துப் பயணங்களில் பெண்களின் பங்கு 40 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்ந்து, பெண்கள் எளிதாகப் பயணம் செய்யவும், முன்னேறிடவும் வழிபிறந்துள்ளது.

### சுய உதவிக் குழுக்களுக்கு 30,000 கோடி வங்கிக் கடன்!

1989 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சுயஉதவிக் குழு திட்டம், இன்று நாடு முழுவதும் மாபெரும் இயக்கமாகத் தழைத்துள்ளது. பொருளாதாரத்தில் தன்னிறைவும் சமூகத்தில் உரிய அதிகாரமும் பெற்ற மகளிர் சமூகத்தை உருவாக்கும் வகையில், சுயஉதவிக் குழுக்களை விரிவுபடுத்தி மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த அரசு தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது. 2023-24 ஆம் ஆண்டில், இதுவரை 3.20 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு 27,539 புதிய சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு 30,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்கிட அரசால் உயர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, சுயஉதவிக் குழுக்களுக்கு 24,926 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கு முழுமையாக எய்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நமது அரசால் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத்திட்டங்களால்தான் தமிழ்நாடு நம் நாட்டிற்கே முன்மாதிரியாகத் திகழ்கிறது. இன்று உலகளவில் கொண்டாடப்படும் மதிய உணவுத் திட்டம், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சென்னை மாநகராட்சியால் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும். 1962 ஆம் ஆண்டில் தொலைநோக்குப் பார்வை கொண்ட முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1982ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டு, 1989ம் ஆண்டு மதிய உணவில் முட்டையை அறிமுகப்படுத்தி முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மேலும் மேம்படுத்தப்பட்டது.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

நாட்டிலேயே பல முன்னோடி நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நம் மாநிலத்தின் மாபெரும் மரபின் தொடர்ச்சியாக, இந்த அரசின் முன்னோடித் திட்டமான ‘**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத்**’ தொடங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் பெயரை இந்திய வரலாற்றில் மீண்டும் ஒரு முறைபொறித்துள்ளார். இந்தியத்திருநாட்டிற்கே முன்மாதிரியாக விளங்கும் இத்திட்டத்தை தெலுங்கானா மாநிலம் பின்பற்றத் தொடங்கியுள்ளது. முதல் ஆறு மாத காலத்திற்கு 1,543 பள்ளிகளில் நடத்தப்பட்ட முதற்கட்ட சோதனைக்குப் பிறகு, இத்திட்டம் மாநிலத்தில் உள்ள 30,992 அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 16.85 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு காலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தான உணவைஇத்திட்டம் வழங்குகிறது. இதன் மூலம் அவர்களது ஊட்டச்சத்து உயர்வது மட்டுமன்றி, மாணவர்களின் வருகைப் பதிவும், கற்றல் விளைவுகளும் மேம்பட்டுள்ளன. மேலும், இலட்சக்கணக்கான உழைக்கும் பெண்கள் மற்றும் தாய்மார்களின் சுமைகளை இந்த அரசு பகிர்ந்து கொள்வதால், இத்திட்டம் பெண்களின் சமூக மேம்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளது.

### ஆதி திராவிடருக்கான செயல் மேம்பாட்டுத் திட்டம்!

தந்தை பெரியாரின் இலட்சியங்களைப் பின்பற்றி, அனைத்து குடிமக்களின் கண்ணியத்தையும், குறிப்பாக விளிம்புநிலை மக்களின் கண்ணியத்தைக் காத்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. விளிம்புநிலைச் சமூகங்களை மேம்படுத்துவது அரசின் தார்மீகக் கடமை மட்டும் அல்ல, மாறாக மக்களின் உரிமை என்று இந்த அரசு நம்புகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, **திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தமிழ்நாடு மேம்பாட்டுச் செயல் திட்டம்**2024 எனும் சட்ட முன்வடிவை நடப்புக் கூட்டத் தொடரின் போது அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளிலுள்ள, ஆதி திராவிடர் குடியிருப்புகளில் முழுமையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக **அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தை** இந்த அரசு தொடங்கியுள்ளது. குடிநீர் வழங்கல், மின்வசதி, குடியிருப்புகளுக்கு சாலை வசதி, பூங்காக்கள் மற்றும் நூலகங்கள் உள்ளிட்ட பொதுப் பயன்பாட்டு வசதிகள் போன்ற 1,769 பணிகளுக்காக, 2023-24 ஆம் நிதியாண்டில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்!

மானியத்துடன் கூடிய கடனுதவி வாயிலாக, ஆதி திராவிடர் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக **‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’** என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில், 755 பயனாளிகளுக்கு 84 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவிடும் வகையில், விடுதிகளில் **மாதாந்திர உணவுக் கட்டணத்தை பள்ளி மாணவர்களுக்கு 1,000 ரூபாயிலிருந்து 1,400 ரூபாயாகவும் கல்லூரி மாணவர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் அரசு உயர்த்தியுள்ளது.** இதன் மூலம், மாநிலத்தில் 1.71 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

**உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கிடும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்புக் கல்வியாண்டில், இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 2.73 இலட்சம் மாணவிகள் பயனடைகின்றனர்.**

### சமூக நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அரசு உறுதி!

யாதும் ஊரே யாவரும் கேளிர்’
- கணியன் பூங்குன்றனார்

சங்ககாலத் தமிழர் கடைப்பிடித்த உலக உடன்பிறப்பு நேயத்தை எடுத்துரைக்கும் இந்த மகத்தான வரிகள்தான் இந்த அரசை வழிநடத்திச் செல்கின்றன. வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது நாட்டின் உன்னதமான கொள்கைகள் தற்போது கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் வேளையில், தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கத்தைப் பேணி பாதுகாப்பதில் நமது அரசு உறுதியாக உள்ளது. சிறுபான்மையினர் மற்றும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுடன் என்றும் நாம் துணை நிற்போம். அந்த வகையில் ஒன்றிய அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் ஒரு போதும் நடைமுறைப்படுத்த அனுமதிப்பதில்லை என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் பலன்கள் தகுதியானவர்களைச் சென்றடைவதன் மூலமாகவே, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கிட இயலும். இந்த அடிப்படையிலேயே, 2021 ஆம் ஆண்டில் நடைபெற்றிருக்க வேண்டிய தேசிய பத்தாண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு அடுத்து மேற்கொள்ளப்படும்போது சாதி வாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பையும் ஒருங்கிணைத்து நடத்திடுமாறு பிரதமர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். நம்பகத்தன்மை வாய்ந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, உரிய கொள்கை முடிவுகளை எடுத்திட இந்த முயற்சி பெரும் உதவியாக இருக்கும் என்பதால் இக்கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்படும் என்றும் இந்த அரசு நம்புகிறது.

### மாற்றுத் திறனாளிகளுக்கு மாத உதவித் தொகை உயர்வு!

சமத்துவ மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உறுதிசெய்திடும் நோக்கத்தின் ஒரு பகுதியாக, **கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாத உதவித்தொகையை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும், மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலி ருந்து 1,500 ரூபாயாகவும் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.** தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தில், மருத்துவ உதவி, விபத்தால் ஏற்படும் மரணத்திற்கான இழப்பீடு போன்ற உதவிகளும் நடப்பாண்டில் இருமடங்காக உயர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய முயற்சிகள் மூலம் 10.11 இலட்சம் மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

குறைந்த வருவாய் ஈட்டுவோர், தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இயலாத நபர்கள், குறிப்பாக, முதியோர்கள், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்களின் நலன் காக்க, அரசு பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவர்களுக்கான **மாத ஓய்வூதியத்தை 2023 ஆம் ஆண்டில், 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக** உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், 845 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் இருந்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் தீர்வுகாணப்பட்டதன் பயனாக, 74,073 தகுதியுடைய பயனாளிகள் புதிதாக சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

### குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டம்!

விவசாயிகளின் நலன் மற்றும் வேளாண் வளர்ச்சி மேம்பட பல முன்னோடித் திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது 76 கோடி ரூபாய் தொகுப்புத் செலவில் குறுவை சிறப்பு திட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, நடப்பாண்டில் குறுவை சாகுபடிப் பரப்பு, முன்னெப்போதும் இல்லாத அளவில் 5.59 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. முழுமையான வேளாண் வளர்ச்சியை எய்திடத் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்திட, இந்த ஆண்டில் 190 கோடி ரூபாய் செலவில் 2,504 கிராம ஊராட்சிகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சாகுபடிச் செலவைக் குறைத்து விவசாயிகளின் வருவாயை உயர்த்தும் முயற்சியாக, ஆண்டில் மேலும் 50,000 புதிய 202324 ஆம் வேளாண் மின் இணைப்புகள் இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, மொத்தமாக 2 இலட்சம் புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பால்உற்பத்தியாளர்களின் வருவாயை உயர்த்தும்நோக்கத்துடன், **விவசாயிகளால் வழங்கப்படும் பசும்பால் மற்றும் எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் ஊக்கத் தொகையாக** இந்த அரசு அறிவித்துள்ளது. குறுகிய காலத்திலேயே பால் கொள்முதல் விலையை 6 ரூபாய் உயர்த்தியுள்ளது வரலாற்றில் இதுவே

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# விவசாயிகளின் வருவாயை உயர்த்த 50,000 புதிய வேளாண் மின் இணைப்புகள் !

# குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஒருபோதும் நடைமுறைப் படுத்த மாட்டோம்!

## பேரவைத் தலைவர் படித்த ஆளுநர் உரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

## பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதில் திறம்படச் செயல்படும் தமிழ்நாடு!

முதல்முறை ஆகும். அரசின் இந்த முயற்சிகள், நுகர்வோரின் நலனை எவ்விதத்திலும் பாதிக்காமல் மாநிலத்தில் உள்ள 3.87 இலட்சத்திற்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு பயனளித்துள்ளன.

**மேகதாது அணை கட்டுவதை தடுக்க நடவடிக்கை!**

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட இந்த அரசு உறுதியாக உள்ளது. இப்பிரச்சினைகளில் நமது மாநில விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம், நதிநீர்ப் பங்கீட்டிற்கான அறிவியல்ரீதியான கணக்கீட்டை உருவாக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவதோடு, காவிரியில் மேகதாது அணை கட்டுவதை தடுக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்போம்.

மீனவர்களின் நலனில் இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. மேலும், மாநிலத்தின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் நமது மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டில், இலங்கை கடற்படையினர் 243 மீனவர்களை அவர்களின் மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்தனர். இந்த அரசின் இடைவிடாத முயற்சியால், இதுவரை 242 மீனவர்களும், 1 மீன்பிடிப் படகும் விடுவிக்கப்பட்டு தாயகம் திரும்பினர். இருப்பினும், கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 88 மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். தூதரக அளவிலான வழிமுறைகளைப்பின்பற்றி மீதமுள்ள மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

மாநிலத்தின் பல்லுயிர் வளத்தைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இந்த நோக்கத்தோடு, மாநில விலங்கின் வாழ்விடத்தைப் பாதுகாக்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **'நீலகிரி வரையாடு திட்டம்'** தொடங்கப்பட்டது. மேலும், முதலமைச்சர் அவர்களால் தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் சட்டவிரோத கடத்தலைத் தடுக்கும் வகையில் **தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டு மையம்** ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது நமது மாநிலத்தின் வனவியல் பாதுகாப்பு வரலாற்றில் ஒரு புதிய மைல்கல் ஆகும். **'மீண்டும் மஞ்சப்பை', 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்'** மற்றும் சுற்றுச்சூழல் வீராங்கனைகள்' ஆகிய நமது அரசின் மூன்று முன்னோடி முயற்சிகளும், ஒன்றிய சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வன அமைச்சகத்தால் சிறப்பான நடைமுறைகளாக அங்கீகரிக்கப்பட்டு, அண்மையில், துபாயில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் (CoP28) காட்சிப்படுத்தப்பட்டு உலகளவிலான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

**சாதிவாரியான கணக்கெடுப்பு!**

**தேசிய பத்தாண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு அடுத்து மேற்கொள்ளப்படும்போது சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பையும் ஒருங்கிணைத்து நடத்திடுமாறு பிரதமர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். நம்பகத்தன்மை வாய்ந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, உரிய கொள்கை முடிவுகளை எடுத்திட இந்த முயற்சி பெரும் உதவியாக இருக்கும் என்பதால் இக்கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்படும் என்றும் இந்த அரசு நம்புகிறது.**

**கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை!**

நமது மாநிலத்தின் சுகாதார நிறுவனங்களின் வியத்தகு சாதனைகளால், மருத்துவச் சுற்றுலாவில் நாட்டிலேயே முதன்மையான இடமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்காக மருத்துவக் கட்டமைப்பின் தரத்தை மேலும் மேம்படுத்துவதில் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, 15 மாத காலத்திற்குள்ளாகவே கிண்டியில் 1,000 படுக்கைகள் கொண்ட **கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை** 240 கோடி ரூபாய் செலவில் அரசு கட்டமைத்து செயல்பாட்டிற்கு கொண்டுவந்து சாதனை புரிந்துள்ளது.

தொற்றா நோய்களின் பரவலைத் தடுக்கும் நோக்கத்துடன், மக்கள் வீட்டில் இருந்தபடியே கட்டணமில்லா மருத்துவ சேவையைப் பெற்றுப் பயனடையும் வகையில், இந்த அரசால் தொடங்கப்பட்ட **'மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்'** மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 1.07 கோடி நபர்கள் பயனடைந்துள்ளனர்.

நாட்டிலேயே முன்னோடி முயற்சியாக, விபத்து நடந்த முதல் 48 மணி நேரத்திற்குள் அனைவருக்கும் கட்டணமில்லா, அவசர சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்திட இந்த அரசு **'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48'** திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், மதிப்புமிக்க எண்ணற்ற உயிர்கள் காக்கப்பட்டு இதுவரை, 2.17 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.

மாணவர்களிடையே கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்கென **'இல்லம் தேடிக் கல்வி'** மற்றும் அடிப்படை எழுத்தறிவை மேம்படுத்த, **'எண்ணும் எழுத்தும்'** போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. குறிப்பாக, இல்லம் தேடிக் கல்வி திட்டம், தன்னார்வலர்கள் மூலம் 1.65 இலட்சம் மையங்களில் செயல்படுத்தப்பட்டு, மாநிலத்தில் 24.86 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

**மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!**

குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் வகையில், 2 இலட்சம் சதுர அடியில், 6 மாடிக் கட்டடத்தில் 4 இலட்சம் புத்தகங்களைக் கொண்ட அதிநவீன **கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை**, மதுரையில் சுமார் 218 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு அமைத்துள்ளது. கலைக் கூடம், பல்நோக்கு அரங்கம், குழந்தைகளுக்கான சிறப்பு அரங்கம், மாநாட்டுக் கூடம் என அனைத்து நவீன வசதிகளுடன் செயல்படும் இந்நூலகம் தென் மாவட்ட மக்களுக்கு பெரும் பயனளித்து வருகிறது.

உயர்கல்வி நிறுவனங்களை **"உயர்சிறப்பு மையங்களாக"** தரம் உயர்த்துவதில் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. தொழில் துறைக்குத் தேவையான திறன்மிகு பணியாளர்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், நவீன அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்கும் இது வழிவகுக்கிறது. தொழில்துறை 4.0 தரநிலையை எய்துவதற்காக, தொழில்துறை அமைப்பு களுடன் இணைந்து, 3,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் 2,877 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் (ITI) பாடத்திட்டங்களையும் கட்டமைப்புகளையும் மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

**கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 88 மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். தூதரக அளவிலான வழிமுறைகளைப் பின்பற்றி மீதமுள்ள மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.**

**தொழில் சார்ந்த திறன்களை மேம்படுத்த 'நான் முதல்வன்' திட்டம்!**

10 இலட்சம் இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த திறன்களை வழங்கிடும் உயரிய நோக்கத்துடன் தொலைநோக்குப் பார்வை கொண்ட **நான் முதல்வன்** திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார். 2022-23ஆம் ஆண்டிலேயே, எதிர்பார்ப்புகளைத் தாண்டி, இத்திட்டம் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, இலக்கைத் தாண்டியது. 2023-24 ஆம் ஆண்டில், இத்திட்டம் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் 14 இலட்சம் மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு, 1.84 இலட்சம் விண்ணப்பதாரர்களில் 1.19 இலட்சம் மாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றதன் வாயிலாக இத்திட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

மாநிலத்தில் வேலைவாய்ப்பைப் பெருக்கிட, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆற்றிடும் மகத்தான பங்கினை இந்த அரசு உணர்ந்துள்ளது. கோவிட் தொற்று காலத்திற்குப் பிறகு, இந்தத் துறைக்கு மிக முக்கியமான கடன் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், **தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தை இந்த அரசு** அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இதுவரை, 4,679 கோடி ரூபாய் மொத்தக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது 203 சதவீதம் அதிகமாகும்.

**'ஸ்டார்ட் அப் இந்தியா' - தர வரிசையில் சிறந்த செயலாற்றும் மாநிலமாகத் தேர்வு!**

புத்தொழில்களையும், புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பையும் வளர்ப்பதற்காக எடுக்கப்பட்ட இந்த அரசின் அயராத முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், **ஸ்டார்ட் அப் இந்தியா 2022 தரவரிசையில் நம் மாநிலம் "சிறந்த செயலாற்றும் மாநிலமாகத்"** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டில் நம் மாநிலம் கடைசி இடத்தில் வகைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இந்தச் சாதனை நம் மாநிலத்தின் செயல்திறனில் ஒரு மாபெரும் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

இது, தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி, வளர்ந்து வரும் துறைக்கான ஆதார நிதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதி மற்றும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை உள்ளிட்ட இந்த அரசின் முன்முயற்சிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் எனலாம்.

பல்வேறு துறைகளில் பணியாற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக பல முயற்சிகளை அரசு எடுத்துள்ளது. குறிப்பாக, **'தமிழ்நாடு இணையவழி தற்சார்புத் (GIG workers) தொழிலாளர்கள் நலவாரியத்தை'** தொடங்கியுள்ளது. உணவு விநியோகம், வாடகைப் பயணம் போன்ற இணையவழி அடிப்படையிலான ஒருங்கிணைப்புத் தளங்கள் மூலமாகப் பணியாற்றும் 1 இலட்சத்திற்கும் அதிகமான அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலனை இந்த வாரியம் பாதுகாக்கும்.

**ஊரகப் பகுதிகளில் தரமான கட்டமைப்பு வசதிகள்!**

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பரவலாக வளர்ந்தால்தான் மாநிலத்தின் வளர்ச்சி நிலைக்கத்தக்கதாக இருக்கும் என்று இவ்வரசு நம்புகிறது. எனவே, ஊரகப் பகுதிகளில் தரமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு **'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'** II மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 202324 ஆம் ஆண்டில், இதன் கீழ், 2,504 கிராம ஊராட்சிகளில் 1,149 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை வழங்குவதற்காக, ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ், 18,228 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இப்பணிகளின் கீழ் இதுவரை, ஊரகப் பகுதிகளில் 1 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் சாலை அரசு இணைப்புகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்திட **'முதலவரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தை'** அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அரசின் தொடர் முயற்சியால், 202122 ஆம் ஆண்டு முதல், மொத்தம் 6,742 கோடி ரூபாய் செலவில், 11,655 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், முக்கியமான / பெரிய ஊராட்சி சாலைகளை இதர மாவட்டச் சாலைகளுக்கு இணையாகக் கொண்டு வர, 2,787 கி.மீ. நீள சாலைகளை 3,056 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

**உலகத்தமிழர்களுக்கும், தாய்த் தமிழகத்திற்கும் இடையேயான தொப்புள்கொடி உறவைப் பேணிப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு முழு நிதியுதவியுடன் கூடிய பண்பாட்டுச் சுற்றுலா அனுபவத்தை வழங்குவதற்காக இந்த அரசு அண்மையில் 'வேர்களைத் தேடி' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.**

மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் இதர முக்கியச் சாலைகளை மேம்படுத்துவதற்காக, நடப்பாண்டில் **விரிவான சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் 3,059 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளை 4,861 கோடி ரூபாய் செலவிலும், 187 பாலங்கள் கட்டுமானப் பணிகளை 553 கோடி ரூபாய் செலவிலும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

**நகர்ப்புறச் சாலை மேம்பாட்டுத் திட்டம்!**

பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் நகர்ப்புற மக்களின் அதிகரித்து வரும் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப, உள்ளாட்சி அமைப்புகள் அளித்திடும் சேவைகளின் தரத்தை தொடர்ந்து விரிவுபடுத்தி மேம்படுத்துவதும் இந்த அரசின் முக்கியக் கடமையாகும். 2021 ஆம் ஆண்டு முதல், 145 கோடி பயனாளிகளுக்கு 21,156 கோடி ரூபாய் செலவில் 261 குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு அரசு அனுமதித்துள்ளது. மேலும் 13 மாநகராட்சிகள், 12 நகராட்சிகளுக்கான 47 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்காக, 71.67 இலட்சம் பயனாளிகள் பயன்பெறும் வகையில், 10,314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சாலைகளின் தரத்தை உயர்த்தவும், மேம்படுத்தவும், **'நகர்ப்புறச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்'** கீழ், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 19,766 சாலைப் பணிகளுக்காக 1,564 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு திருக்கோவில்களின் சொத்துகள் மற்றும் நிலங்களைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இதுவரை, கோயில்கள் மற்றும் அறநிலையங்களுக்குச் சொந்தமான 5,579 கோடி ரூபாய் மதிப்புள்ள 6,071 ஏக்கர் நிலங்களை இந்த அரசு ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்துள்ளது. மேலும், இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, மொத்தம் 1,290 கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குகள் செய்யப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயில்களைப் பழமை மாறாமல் புதுப்பித்துப் பாதுகாப்பதற்கான பணிகள் 294 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

தமிழ் என்பது மொழி மட்டுமல்ல, நம்மை ஒன்றிணைத்து நமது வாழ்வை செம்மைப்படுத்தும் உயிர்நாடி, நமது பழமையின் பெருமை, தற்காலத்தின் சிறப்பு மற்றும் எதிர்கால வளத்தின் ஊற்றாகும். உலகத்தமிழர்களுக்கும், தாய்த் தமிழகத்திற்கும் இடையேயான தொப்புள்கொடி உறவைப் பேணிப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு முழு நிதியுதவியுடன் கூடிய பண்பாட்டுச் சுற்றுலா அனுபவத்தை வழங்குவதற்காக இந்த அரசு அண்மையில் **'வேர்களைத் தேடி'** திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் வளமான வரலாறு, பண்பாடு மற்றும் கட்டடக் கலை ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், உலக நாடுகளில் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதர்களாக' மாற்றுவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மகத்தான தமிழ்க் கனவை நனவாக்க உறுதி!**

இந்த அரசு பதவியேற்றது முதல், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மட்டுமன்றி, அவர்களின் எதிர்பார்ப்புகளையும் தாண்டி அவர்களது தேவைகளையும் நிறைவு செய்துள்ளோம். இந்தக் குறுகிய காலத்தில் நாங்கள் நிறைவேற்றிய சாதனைகள் மற்றும் நாங்கள் ஒன்றாக அடைந்த முன்னேற்றம் குறித்து இன்று இந்த மக்கள் மன்றத்தின் முன் பெருமிதத்தோடு நிற்கிறோம். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு மற்றும் செழுமைக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதோடு, மகத்தான தமிழ்க் கனவை நனவாக்க உறுதியாக உள்ளோம். இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, சமூகநீதி, மத நல்லிணக்கம், பகுத்தறிவு சிந்தனை மற்றும் மக்களாட்சியின் மாண்புகள் போன்றவற்றிற்கு நாட்டிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு தொடர்ந்து திகழும் வகையில் இந்த நம்பிக்கை வரும் காலங்களிலும் நிலைக்கும் என நம்புகிறேன்.

மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு மகாகவி பாரதியாரின் காலத்தை வென்ற கவிதை வரிகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**வாழிய செந்தமிழ்!**

**வாழ்க நற்றமிழர்!**

**வாழிய பாரத மணித்திருநாடு!**

இவ்வாறு ஆளுநரின் உரையை சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வாசித்தார்.

# இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழும் தமிழ்நாடு!

### இரண்டாவது முறை அரசியல் சட்டமீறலில் ஈடுபட்டுள்ளார்! அரசியல் சட்டத்தை -

# ஜனநாயக மரபுகளை மீறிய ஆளுநரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, பிப். 13-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி சட்ட மீறல், ஜனநாயக மரபு மீறலைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார். இன்றும் அதே அத்துமீறலை செய்துள்ளார்; இவரை பதவி நீக்கம் செய்வதே ஒரே தீர்வு என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி, தமிழ்நாடு அரசின் ஓர் அங்கம்தான்; தனியே அவரது சிந்தனையோ, செயலாக்கமோ

கொள்கைப்பூர்வமான அதன் முடிவுகளில் வேறு விதமாகவோ இருக்க முடியாது இருக்கக் கூடாது என்பதை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 162 ஆவது பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

இவர் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி பதவி ஏற்கும்முன் பிரமாணம் எடுத்துள்ள நிலையில், அவர் இரண்டு வகையில் மரபுகளையும், சட்டங்களையும் மீறி அதீதமாக இன்று சட்டப்பேரவையில் நடந்து கொண்டிருக்கின்றார். இன்று (12.2.2024) 2024 ஆம் ஆண்டின் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்து, இரண்டாவது முறையாக மரபு மீறி, அரசியல் அநாகரிகத்தை அரங்கேற்றியுள்ளார். சட்டமன்றத்தையும் அவமதித்து, அரசமைப்புச் சட்ட நெறிகளையும் மீறியுள்ளார். அவையிலிருந்து வெளியேறியது அவமதிப்பதாகும். இவ்விரண்டு குற்றங்களை யும் இழைத்துள்ளது வன்மையான கண்டனத்திற்குரியது.

அப்பதவி வகிக்க, சற்றும் தகுதியவற்றவராகவே தன்னைக் காட்டிக் கொண்டுள்ளார்.

அவர் ஒரு சில மணித்துளிகளே உரையைப் படித்துவிட்டு, உட்கார்ந்துவிட்டதோடு, அவர் படிக்க வேண்டிய எஞ்சிய பகுதிகளை வேண்டுமென்றே திட்டமிட்டுப் புறக்கணித்திருக்கிறார். தனது சொந்தக் கருத்துகளைக் கூற எந்த உரிமையும் அவருக்குக் கிடையாது.

'தேசிய கீதம்' என்பது நிகழ்வின் இறுதியில்தான் பாடப்படும். நிகழ்ச்சித் தொடக்கத்தில் மொழி வாழ்த்து இசைப்பது வழமை.

பிறகு ஏன் அவர் உரையைத் தொடர்ந்து படிக்கவில்லை?

அரசின் சாதனைகள் கொள்கைப் பிரகட னங்களை உரையாகச் சொல்வதுதான் சட்டப்படி, மரபுப்படி அவரது கடமையும், பொறுப்பும் ஆகும்!

அதில் அவர் மாறுபடுவாரேயானால், முன்கூட்டியே அவர் அந்த உரையை அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்த வரைவினை அவர் ஏற்க மறுத்து, திருத்தும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதியிருக்கவேண்டும்; அல்லது பேசியிருக்க வேண்டும்.

அப்படி மறுக்க அவருக்கு உரிமையே இல்லை அரசமைப்புச் சட்டப்படி; காரணம், எந்த மாநிலத்திலும் ஆளுநர் உரை என்பது அவரது சொந்த விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தயாரிக்கப்படுவதல்ல.

'தேசிய கீதம்' பாடுவது இறுதியில்தான் என்பது சட்டமன்ற மரபு. அதனை சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள்தெளிவுபடுத்தியுள்ளார்கள்!

ஆளுநர் வெளிநடப்புச் செய்தும், தேசிய கீதத்தை இசைக்கும் முன்பே வெளிநடப்புச் செய்ததும், கூடுதலாக அவர் படிக்கவேண்டிய உரையை, அவரே மறுத்துப் பேச சபையில் அவருக்கு அரசமைப்புச் சட்டத்தின்படியோ, சபை மரபுப்படியோ உரிமையே இல்லாத நிலையில், அவையை விட்டு வெளியேறியது திட்ட மிட்ட ஜனநாயக மரபை மீறிய குற்றச்செயல். இவரை உடனடியாக பதவி நீக்கம் ('டிஸ்மிஸ்') செய்ய முன்வந்தால்தான் ஒன்றிய அரசு ஜனநாயகத்தை உண்மையிலேயே மதிப்பதாகும்!

தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பு மேலும் கூர்மைப் படுத்தப்பட வேண்டும்.

தனக்குத் தனி விளம்பரம் தேடிடவே, இந்த உரை வாசிப்பினையும் பயன்படுத்தியுள்ளார் இந்த ஆளுநர் என்பதும் அகிலம் அறியும் செய்தியாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டு மக்களின் வெறுப்புக்கு ஆளாகிறார்!

# ஆளுநர் பதவிக்கு ஒரு அவமானச் சின்னம் ஆர்.என்.ரவி!

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி கண்டனம்!



சென்னை, பிப். 13-

தமிழ்நாட்டு மக்களின் வெறுப்புக்கும் கசப்பிற்கும் ஆளாகி, தமது பதவிக்கே ஒரு அவமானச் சின்னமாக திகழ்கிறார் ஆளுநர் ஆர். என்.ரவி என்று மாநில காங்கிரஸ் தலைவர் கே. எஸ்.அழகிரி கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழக சட்டப்பேரவையில் இந்த நடப்பாண்டின் முதல் கூட்டத் தொடர் ஆளுநர் உரையோடு தொடங்க வேண்டும் என்ற மரபின் அடிப்படையில், ஆளுநர் ஆர்.என். ரவி அழைக்கப்பட்டிருந்தார். ஆளுநர் உரையும், அவருக்கு முன்கூட்டியே வழங்கப்பட்டு ஒப்புதலும் பெறப்பட்டது. ஆனால், உரையாற்றுவதற்கு சட்டப் பேரவைக்கு வந்த அவர், தமது உரைக்குப் பிறகு தேசிய கீதம் இசைப்பதற்கு முன்பாகவே வெளிநடப்பு செய்தது மிகுந்த கண்டனத்திற்குரியது. சட்டப்பேரவைக்கு அவரை அழைத்து வரும் போது தேசியகீதம் இசை வடிவில் ஒலிபரப்பப்பட்டு, முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடக்கத்தில் முறைப்படி தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. உரை முடிந்து இறுதியில் தான் தேசியகீதம் பாடப்படும். அந்த மரபுக்கு மாறாக, தமிழக ஆளுநர் நடந்து கொண்டது தேசிய கீதத்தையே அவமதிக்கிற செயலாகும்.

தமிழக ஆளுநரை பொறுத்தவரை நியமிக்கப் பட்டது முதற்கொண்டு, அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமாகவும், தமிழக நலன்களுக்கு எதிராகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தி.மு.க. ஆட்சிக்கு எதிராக பல நிகழ்ச்சிகளை ஆளுநர் மாளிகையில் நடத்திக் கொண்டு, சர்ச்சைக்குரிய கருத்துகளையும் வெளியிட்டு வருகிறார். மகாத்மா காந்தியில் தொடங்கி எவரையும் அவர் விட்டு வைக்கவில்லை. அவரது நடவடிக்கைகளை பார்க்கிற போது, ஆளுநர் பதவிக்கே ஒரு அவமானச் சின்னமாக திகழ்கிறார்.

ஆளுநர் மாளிகையிலிருந்து அவர் என்றைக்கு வெளியேறுகிறாரோ அந்த நாள் தான் தமிழகத்தின் நன் நாளாகக் கருதப்பட வேண்டும். அந்த அளவிற்கு தமிழக மக்களின் வெறுப்புக்கும், கசப்புக்கும் ஆளாகியிருக்கிற ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு பாடம் கற்பிக்கிற வகையில், தமிழகத்தில் பா.ஜ.க.வை மக்கள் வெறுப்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஏதோவொரு வகையில் ஆளுநரின் நடவடிக்கைகளினால் ஏற்படுகிற எதிர்ப்பில் தமிழக பா.ஜ.க. கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி வருகிறது.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் ஆளுநர் மீது தமிழக மக்களுக்கு கடும் வெறுப்புதான் அதிகரித்து வருகிறது. எனவே, தமிழக ஆளுநரின் அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கைகளை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஆளுநர் ஆர்.என். ரவியின்

# மரபு மீறிய நடவடிக்கை; கடும் கண்டனத்திற்கு உரியது!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை!



சென்னை, பிப். 13 -

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவியின் மரபு மீறிய சட்டப் பேரவை நடவடிக்கை கடும் கண்டனத் திற்குரியது என்று ம. தி.முக.. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.இரவி அவர்கள் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தொடங்கியபோது தமிழ்நாடு அரசு தயாரித்த உரையை முழுமையாக வாசிக்காமல் அதில் இடம்பெற்றிருந்த தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் உள்ளிட்ட பெயர்களை தவிர்த்தார்.

மேலும் திராவிட மாடல் ஆட்சி, சமூக நீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், மத நல்லிணக்கம், பெண்ணுரிமை ஆகிய கொள்கைகள் இன்றைய அரசின் அடித்தளமாக அமைந்துள்ளன என்ற பத்தியை உரையில் இருந்து நீக்கிவிட்டு படித்தார். சட்டப்பேரவையில் நாட்டுப்பண் இசைக்கும் போதே அநாகரிகமாக அவையில் இருந்து எழுந்து வெளியேறினார். அதைப் போலவே இந்த ஆண்டு இன்றைய கூட்டத்தொடர் இன்று தொடங்கியபோதும், சட்டப் பேரவையின் மரபுக்கு எதிராக தேசியக் கீதத்தை தொடக்கத்திலேயே இசைக்க வேண்டும் என்ற காரணம் கூறி ஆளுநர் உரையை வாசிக்காமல் முழுமையாக புறக்கணித்து வெளியேறியது கடும் கண்டனத்திற்கு உரியதாகும். சட்டப்பேரவை நிகழ்வு தொடங்கும்போது தமிழ்த் தாய் வாழ்த்தும், நிறைவடையும்போது நாட்டுப்பண் இசைக்கப்படுவதும்தான் தமிழக சட்டப்பேரவையின் நீண்டகால மரபு ஆகும். ஆனால் ஆளுநர் அதனை மாற்றக்கோரியது திட்டமிட்ட சதியாகும்.

பின்னர் ஆளுநர் உரையை சட்டப்பேரவைத் தலைவர் வாசித்து அவைக்குறிப்பேட்டில் இடம்பெற செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆளுநர் ஆர்.என்.இரவி தொடர்ச்சியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக அரசியல் சட்ட நெறிமுறைகளை மீறி தொடர்ந்து செயல்பட்டு வருவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

இவ்வாறு தமது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

---

### சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மூலம்

# ஆளுநர் ஆர்.என்.இரவியை வெளியேற்ற வேண்டும்!

## தமிழ்நாடு அரசுக்கு - விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் வேண்டுகோள்!



சென்னை, பிப். 13 -

சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனத் தலைவர் தொல்.திருமா வளவன் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

அரசியலமைப்புச் சட்ட மரபுகளுக்கு மாறாகவும், தமிழ்நாட்டு மக்களை அவமதிக்கும் வகையிலும் இன்று சட்டப் பேரவையில் நடந்து கொண்டுள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

திட்டமிட்டே மாநில அரசோடு முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தி அரசியல் அரங்கில் அவ்வப்போது தேவையற்ற பரபரப்பை உண்டாக்கும் ஆளுநர், தனது பொறுப்பையும் பொறுப்புக்குரிய மாண்பையும் மறந்து ஒரு கட்சியின் பிரதிநிதியைப் போலவே செயல்பட்டு வருகிறார். எனவே, அவர் ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதோடு தமிழ்நாட்டிலிருந்தும் வெளியேற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

மாநில அரசு தயாரித்துக் கொடுக்கப்படும் உரையைப் படிப்பதென்பது ஆளுநருக்கு அரசியலமைப்புச் சட்டம் விதித்துள்ள கடமையாகும். அதை இன்று ஆர்.என்.ரவி அவர்கள் நிராகரித்துள்ளார். இது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசை மட்டுமின்றி, அவர் இந்தப் பதவியை வகிப்பதற்குக் காரணமான அரசியலமைப்புச் சட்டத்தையும் அவமதிப்பதாகும். அரசியலமைப்புச் சட்டப்படி விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்யாமல் தொடர்ந்து இவ்வாறு அதை அவமதித்து வரும் ஆர்.என். ரவி அவர்கள் எந்த அடிப்படையில் ஆளுநர் பதவியில் நீடிக்கிறார் என்ற கேள்வி எழுகிறது. அவர் ஆளுநர் பதவி வகிப்பதற்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் குடிமகனாக இருப்பதற்கும்கூடத் தகுதியற்றவர் என்பதையே அவரது செயல்கள் காட்டுகின்றன.

ஆர்.என்.ரவி அவர்கள், தமிழ்நாடு அரசுக்கு எதிராகப் பொதுவெளியில் தொடர்ந்து உண்மைக்கு மாறான தகவல்களைப் பரப்பி வருகிறார். சாதியின் அடிப்படையிலும், மதத்தின் அடிப்படையிலும் மக்களைப் பிளவு படுத்தும் வகையில் பிரிவினையைத் தூண்டும் கருத்துக்களைத் தொடர்ந்து கூறி வருகிறார். அதன் மூலம் இங்கே சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கிறார் . அவர் வகிக்கும் ஆளுநர் பதவியை இப்படியான சட்ட விரோதச் செயல்களுக்குக் கவசமாகப் பயன்படுத்துவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இத்தகைய போக்குள்ள அவர் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருப்பதே தமிழ்நாட்டு மக்களுக்குக் கேடாக முடியும். எனவே, அவரைத் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு உரிய சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்குத் தொல்லை தருவதற்கும், தமக்குப் பிடிக்காத கட்சிகளை உடைப்பதற்கும், மாநிலத்தில் நிலையற்ற தன்மையை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசால் ஆளுநர் பயன்படுத்தப்படுகிறார். மாநில அரசுகளைக் கலைப்பதற்கு ஆளுநரைத் தான் ஒன்றிய அரசு பயன்படுத்துகிறது. மாநில அரசுகள் இயற்றுகிற சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை முடக்குகிற வேலையில் ஆளுநர்கள் ஈடுபடுவதைப் பார்க்கிறோம்.

மாநில அரசுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையில் ஆளுநர் என்ற பதவி எந்தவிதத்திலும் தேவையாக இல்லை. எனவே ஆளுநர் பதவியை ஒழிக்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநில அரசுகளும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன.

'இந்தியா கூட்டணி ஆட்சி அமைத்ததும் ஆளுநர் பதவி ஒழிக்கப்படும்' என்ற வாக்குறுதியை தேர்தல் வாக்குறுதியாக வழங்க வேண்டும் என 'வெல்லும் சனநாயகம்' மாநாட்டில் நிறைவேற்றப் பட்டத் தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# ஆளுநர் ரவியை ஒன்றிய அரசு திரும்பப் பெறுக!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தல்!



சென்னை, பிப். 13 -

மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாடு சட்டப்பேரவையின் ஆளுநர் உரையுடன் கூடும் 2024ன் முதல் கூட்டத் தொடரில் மாநில அரசின் கொள்கை குறிப்பை படிக்க மறுத்து, அரசியல் உள்நோக்கத்துடன் வெளிநடப்பு செய்துள்ள ஆளுநர் ஆர்.என். ரவியின் நடவடிக்கையினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆளுநர் உரை என்பது ஆளுநரின் தனிப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு அல்ல. அவரின் சொந்தக் கருத்துக்களை கூற சட்டப்பேரவை இடமும் அல்ல. ஆளுநர் ஆர். என். ரவி, தேசியகீதத்தை முதலில் பாட வேண்டுமென்று ஏற்கனவே கோரிக்கை விடுத்ததாகவும், அதற்கு தீர்வு இல்லை என்றும், உரையில் தெரிவிக்கப் பட்டுள்ள கருத்துக்களுடன் முரண்படுகிறேன் என்றும் கூறி கேரள ஆளுநர் பாணியில் 2 நிமிடங்களில் உரையை முடித்துக் கொண்டார்.

இந்நிலையில் பேரவை தலைவர், ஆளுநர் உரையை தமிழில் முழுவதும் வாசித்து நிறைவு செய்து விட்டு, தேசிய கீதம் இசைப்பது தொடர்பாக ஆளுநர் ரவிக்கு ஏற்கனவே கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பதில் அளிக்கும் போது, ஆளுநர் ரவி கிஞ்சிற்றும் நாகரீகம் இல்லாமல், கடந்த ஆண்டைப் போலவே, தேசிய கீதம் இசைக்கும் முன்பே வெளியேறிச் சென்றது அரசியல் சாசனத்தை மீறிய செயலாகும். இதன் மூலம் தமிழக சட்டமன்றத்தையும் தமிழக மக்களையும் ஆளுநர் அவமதித்துள்ளார். இது கடும் கண்டனத்திற்குரியது. தேசிய கீதத்தை ஆளுநர் அவமரியாதை செய்தார் என்பதும் தெளிவாக வெளிப்பட்டது.

தமிழகத்தின் மாண்பையும், சட்டமன்றத்தின் மரபையும் நிலைநிறுத்தும் வகையில் அமைச்சரவை தயாரித்த முழு உரையும் அவைக்குறிப்பில் ஏற்றப்படும் என்று உடனடியாக அவை முன்னவர் நடவடிக்கை மேற்கொண்டது ஆளுநருக்கு அளிக்கப்பட்ட தகுந்த பதிலடியாக அமைந்தது.

அரசமைப்பு சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டிய ஆளுநர், ஆர்.எஸ்.எஸ்.சின் தொண்டராக செயல்படுவதை வாடிக்கையாக வைத்துள்ளார். தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கைக் கடைபிடிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது. ஆளுநரின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும், தமிழக விரோதப் போக்கிற்கும் எதிராக தமிழக மக்களும், ஜனநாயக சக்திகளும் தங்களது வலுவான கண்டன குரலை எழுப்பிட வேண்டுமென சிபிஐ (எம்) வலியுறுத்துகிறது.

இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

---

### திருத்தணி தொகுதி பள்ளிப்பட்டு ஒன்றியத்தில்

# ரூ.1 கோடியே 21 லட்சம் மதிப்பில் பல்வேறு திட்ட பணிகள்!

## திருத்தணி எஸ் சந்திரன் எம். எல். ஏ. துவக்கி வைத்தார்

திருவள்ளூர் பிப் 13

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியங்களில் பொது மக்கள் பல்வேறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் பள்ளிப்பட்டு ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 1 கோடியே 20 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டம் பணிகள் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரன் துவக்கி வைத்தார்

பள்ளிப்பட்டு ஒன்றியம் கொத்த குப்பம் ஊராட்சியில் உள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 33 ரூபாய் லட்சத்தில் புதிதாக பள்ளி கட்டிடம் அடிக்கல்

அத்திமஞ்சேரி பேட்டையில் நாடாளுமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து 12 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய கலையரங்க கட்டிடம் அமைக்கும் பணி,

கர்லபாக்கம் ஊராட்சியில் திருத்தணி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 15 லட்சத்தி 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிட கட்ட பணி

கர்லபாக்கம் ஊராட்சியில் 32 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டுமான பணி

தாங்கல் காலனியில் 28 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கூடுதல் வகுப்பறை கொண்ட புதிய பள்ளி கட்டிடம் திறப்பு விழா உள்ளிட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ் சந்திரன் எம். எல்.ஏ. கலந்து கொண்டு கட்டிடங்கள் கட்டுவதற்கான பணிகளை துவக்கி வைத்து பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதில் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் பிடி சந்திரன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஒன்றிய குழு துணை தலைவர் பொன்சு பாரதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, திருமலை லோகநாதன் கதிரவன் கோவர்தன், மோகன், குமரேசன், சிவக்குமார், வி.வி.மணி, சுப்பிரமணியம் , தேவராஜன், சுரேஷ் , செல்வம் , ரகுவரால் மற்றும்கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதி கள் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

---

### சென்னை பள்ளிகளின்

# ஆசிரியர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள்!

## மேயர் ஆர்.பிரியா வழங்கினார்!

சென்னை, பிப்.13

ஆசிரியர் தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற சென்னை பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு மேயர் திருமதி ஆர். பிரியா, நேற்று (12.02.2024) சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

ஆசிரியர் தின விழாவினை முன்னிட்டு 2023-2024-ஆம் கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கான இலக்கியம் சார்ந்த போட்டிகளில் பேச்சு. கட்டுரை, பாட்டு மற்றும் தனித்திறன் ஆகிய பிரிவுகளில் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு மற்றும் உருது மொழிகளில் தனித்தனியே நடத்தப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகள் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஒரு பிரிவாகவும், உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மற்றொரு பிரிவாகவும் நடத்தப்பட்டது.

மேலும், வயது வரம்பு அடிப்படையில் 45 வயதிற்குக் கீழ், 45 வயதில் இருந்து 55 வயதிற்குள், 55ற்கு மேல் என 3 பிரிவாக ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், பூப்பந்து, கைப்பந்ததாட்டம் மற்றும் வளையம் எறிதல் ஆகிய போட்டிகள் தனித்தனியே நடத்தப்பட்டது.

உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 100 மீட்டர் ஓட்டப் பந்தயமும், குண்டு எறிதல் போட்டியும் நடத்தப்பட்டது. இலக்கியம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் 24 பிரிவுகளில் நடத்தப்பட்டதில் வெற்றி பெற்ற 283 ஆசிரியர்களுக்கு மொத்தம் 478 பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் மேயர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர்ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), இராயபுரம் மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் கி.மதிவாணன், ப.சுப்பிரமணி, கல்வி அலுவலர் திருமதி வசந்தி உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### 'எந்தவொரு தந்தையும் எதிர்கொள்ள இயலாத துயரம்!'

# முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப்.13 -

முன்னாள் மேயர் சைதை துரைசாமியின் மகன் வெற்றி துரைசாமி உயிரிழுந்த செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் "எந்தவொரு தந்தையும் எதிர்கொள்ள இயலாத துயரம் என்றும்", மகனை இழந்து தவிக்கும் சகோதரர் சைதை துரைசாமி அவர்களுக்கு இத்துயர் மிகு நேரத்தில் தனது இதயப்பூர்வமான ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இமாச்சல பிரதேசத்தில் நடந்த கார் விபத்தில் சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் சைதை துரைசாமி அவர்களின் மகன் வெற்றி துரைசாமி உயிரிழுந்து, அவரது உடல்கண்டெடுக்கப்பட்டது குறித்த செய்தியைப் பார்த்து அதிர்ச்சியும் மிகுந்த வேதனையும் அடைந்தேன்.

எந்தவொரு தந்தையும் எதிர்கொள்ளக்கூடாத, எதிர்கொள்ள இயலாத துயரம் இது. உயிருக்கு உயிரான மகனை இழந்து தவிக்கும் சகோதரர் சைதை துரைசாமி அவர்களுக்கு இத்துயர்மிகு நேரத்தில் எனது இதயபூர்வமான ஆறுதலையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



ஈரோடு அந்தியூர் பெரிய ஏரியில் சுற்றுலா துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் படகு குழாம் அமைக்கும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மகளிர் ஆணைய உறுப்பினர் கீதா நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ஏழை பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் கலந்து கொண்டு 336 ஏழை பெண்களுக்கு ரூ.1.43 கோடி மதிப்பில் திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில், மாவட்ட சமூக நல அலுவலர் (பொறுப்பு) க.மோகனா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் 694 சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த

# 6,305 பயனாளிகளுக்கு ரூ.36.219 கோடியில் வங்கிக் கடனுதவி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், பிப்,13-

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்களின் சார்பில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று ஈரோடு மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் - இந்நிகழ்வு பெரம்பலூர் மாவட்டத்தில் தந்தை ஹேன்ஸ் ரோவர் மேல்நிலைப்பள்ளி கூட்ட அரங்கில் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டதை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் க.கற்பகம் ஆகியோர் பார்வையிட்டு பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 694 சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 6,305 பயனாளிகளுக்கு ரூ.36.219 கோடி மதிப்பிலான வங்கிக்கடனுதவி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சுய உதவிக் குழு இயக்கத்தை, மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்புத்தன்மை மூலம், பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே, முதல் முறையாக, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன், வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு, மகளிர் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அமைவதற்கு, மகளிரைக் கொண்டு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகள் ஏற்படுத்தி, சுய உதவிக்குழு இயக்கத்தை வலுப்படுத்தி வருகிறது. தற்போது நலிவுற்றோரை ஒருங்கிணைத்து, சிறப்புக் குழுக்களும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களை கொண்ட தனிக்குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் இன்று (08.02.2024) நடைபெற்ற விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த, சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வாழ்வாதார மேம்பாடு அடைவதற்காக, வங்கிக்கடன்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் என 37,305 குழுக்களை சார்ந்த 3,00,563 உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூ.2504.18 கோடி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், 53 மாற்றுத்திறனாளி சுய உதவி குழுக்களை சார்ந்த 56 மாற்றுத்திறனாளிகளுக்கு, "மதி எக்ஸ்பிரஸ்" என்ற பெயரில், தலா ரூ.3.60 மதிப்புள்ள 56 மின்கலன் வாகனங்களையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும், அனைத்து மாவட்ட தலைநகர்களிலும், இந்த நிகழ்ச்சி நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதனடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் தந்தை ஹேன்ஸ் ரோவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் இன்று (08.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்கள் கலந்து கொண்டு, 693 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 6,305 உறுப்பினர்களுக்கு 35.719 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கி கடன் உதவிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சுய உதவி குழுக்களை சார்ந்த இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.6.40 லட்சம் மதிப்பிலான "மதி எக்ஸ்பிரஸ்" மின்கல வாகனங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து மகளிர் முன்னேற்றத்திற்கு எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். பெண் குழந்தைகளின் உயர்கல்வி மேம்பட அரசுப்பள்ளிகளில் பயின்று கல்லூரி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் வழங்கும் விடியல் பயணம் திட்டம், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் என பெண்கள் சுயமரியாதையுடன் சமுதாயத்தில் வாழ்வதற்கு தொடர்ந்து திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

மேலும், மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள மகளிர் சுய தொழில் தொடங்குவதற்கு கல்விக் கடனுதவி, அரசு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பல திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அரசாக, பெண்களுக்கான பாதுகாப்பு அரணாக விளங்கும் அரசாக, பெண்கள் சுயமரியாதையுடன் வாழ அவர்களுக்கான திட்டங்களை வழங்கும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு திகழ்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள் கண்காட்சியை போக்குவரத்துத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளில், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார், நகர்மன்றத் தலைவர் அம்பிகா இராஜேந்திரன், பெரம்பலூர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் அ.அருணாசலம், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவலர்கள் மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் டி.சி.பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் கிழக்கு பகுதி மாவட்டப் பிரதிநிதி பி.எஸ்.சைலஸ் மகள்

# பி.எஸ்.பொய்யாமொழி - சி.எஸ்.ராஜ்குமார் திருமண விழா!

## தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வாழ்த்து!

சென்னை, பிப். 13-

சென்னை வடகிழக்கு மாவட்டம்திருவொற்றியூர் கிழக்கு பகுதி மாவட்டப் பிரதிநிதியும், தளபதியார் வாசகர் வட்டம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினருமான பி.எஸ். சைலஸ், எஸ்.சுகந்தி இணையரின் மூத்த மகள் பி.எஸ்.பொய்யாமொழி - சி.எஸ்.ராஜ்குமார் இவர்களின் திருமண உறுதி ஏற்பு விழா காலடிப்பேட்டை சாத்தாங்காடு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தனலக்ஷ்மி பார்டி ஹாலில் நடைபெற்றது.

இவ்விழாவில் கழக தலைமை நிலையச் செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், திருவொற்றியூர் சட்டப்பேரவை உறுப்பினரும் சட்டமன்ற மனுக்கள் பெறும் குழு உறுப்பினரும், மாநில மீனவர் அணி துணைத் தலைவருமான கே.பி. சங்கர், தென்னிந்தியத் திருச்சபை சென்னை பேராயர் டாக்டர் வி.தேவசகாயம், திருப்பணி ஆயர்கள் எஸ். தினகரன், ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

இவ்விழாவில் தலைமைக் கழக வழக்கறிஞர் மாமன்ற உறுப்பினர் வீ. கவி கணேசன், வட்டச் செயலாளர்கள், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் க.வீ.சத்தீஷ்குமார், ஏகா. கார்த்திகேயன், பகுதி அவைத் தலைவர் ஆர்.சி. ஆசைத்தம்பி, பகுதி துணைச் செயலாளர்கள் எம்.வி.குமார், கே.பிரபாவதி, மாவட்டப் பிரதிநிதிகள் ஒய்.நந்திவர்மன், கே.கார்த்திகேயன், ஜெ.பி.சந்தானகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் மணலி மகேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், கு.தமிழ்மணி, நி.நித்யா தாசன், பா.பாலஉமாபதி, கவிஞர் த.மகிழன், ச.விஜய ராகவன், எஸ்.பாக்கியமணி, எம்.எஸ்.பொன்ராஜ், வ.மோகன், இரா. கணேசன், க.ரவிச்சந்திரன், ஏ.பி.நாகராஜ், ராஜேஸ்வரி சங்கர், பா.சரவணகுமார், எம்.சந்திரசேகர், எம்.ஆர். விஜயகுமார், தாங்கல் பாரதி, காங்கிரஸ் பிரமுகர்கள் பி.விமல்தாஸ், வாழப்பாடி செந்தில், நிருபர் கி. மணிவாசகம், வி.டி.எஸ். இன்பநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வுக்கூட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத்தலைவர், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் தலைமையில் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் சேவூர் எஸ்.இராமச்சந்திரன், இ.பரந்தாமன், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம் ஆகியோர் வழங்கினர். இதில் திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், திருப்பூர் சார் ஆட்சியர் செல்வி சௌம்யா ஆனந்த், மாவட்ட வன அலுவர் தேவேந்திரகுமார் மீனா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளர் பா.சுப்பிரமணியம், துணைச் செயலாளர் சு.பாலகிருஷ்ணன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### வருகிற நாடாளுமன்றத் தேர்தலில்

# தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறுவது உறுதி!

## அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், பிப்13-

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி அமோக வெற்றி பெறுவதுடன் எதிர்த்து நிற்கின்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழப்பது உறுதி என்றும் டெபாசிட் இழக்கின்ற பட்டியலில் பிரதமர் மோடியும் ஒருவர் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் மயிலம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் உறுதிபட தெரிவித்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மயிலம் தெற்கு ஒன்றிய திமுக செயல் வீரர்கள் கூட்டம் மயிலத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் சுப்பிரமணி தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் பாலசுந்தரம், இந்திரா சுரேஷ், ஆறுமுகம் ,விஜயன் ,சசிகுமார், கோபாலகிருஷ்ணன், மனோன்மணி முருகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளரும், மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினருமான வழக்கறிஞர் சேதுநாதன்அனைவரையும் வரவேற்றார்.



கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான செஞ்சி கே.எஸ். மஸ்தான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போதுஅமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

பிரதமர் நரேந்திர மோடி பேசுகிறார் உலகத்திலேயே இந்தியாவை முதல் இடமாக இந்தியாவை உருவாக்க போகிறேன் என்று. டில்லியிலே மக்கள் மாத்திவிட்டார்கள். அவருடைய லட்சணம் முகமூடியை கிழிக்கிறார்கள். மாநகராட்சி தேர்தலில் டெல்லியிலே பி.ஜே.பி. வர முடியவில்லை. காங்கிரஸூம், ஆம் ஆத்மி கட்சியும் அங்கு போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்ற காரணத்தினால்பிரதமர் மோடி அவர்கள் ஒரு பிரதமராக இருந்து கொண்டு மாநகராட்சியில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த மேயரை தேர்ந்தெடுக்கக் கூடிய தேர்தலில் உங்களுடைய கட்சிக்கு ஆதரவு இல்லை என்பதற்காக அந்தத் தேர்தலை ஒத்தி வைத்தீர்களே அது தான் ஜனநாயகமா? முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இந்தியாவில் உள்ள அனைத்து கட்சிகளையும் ஒன்று சேர்த்து விட்டார் என்பதற்காக பிரதமர்மோடிக்கு ஜுரம் வந்துவிட்டது.

விரைவில் பிரதமர் மோடியின் நாட்கள் எண்ணப்படுகிறது வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்குவாக்காளர்கள் மாபெரும் ஆதரவு தர இருக்கிறார்கள்.

திமுக கூட்டணி அமோக வெற்றி பெறுவதுடன் எதிர்த்து நிற்கின்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழப்பது உறுதி என்றும் டெபாசிட் இழக்கின்ற பட்டியலில் பிரதமர் மோடியும் ஒருவர் என அமைச்சர் செஞ்சி மஸ்தான் உறுதிபட தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் அ.ம.மு.க பொதுச் செயலாளர் இந்தியா கூட்டணியில் தேர்தல் நேரத்தில் கடைசியாக ஸ்டாலின் மட்டுமே இருப்பார் என்ற பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்தியா கூட்டணியில் ஸ்டாலின் மட்டும் தான் இருப்பதாக டிடிவி தினகரன் அறிவு சிந்தனையில் அவரே சொல்கிறார். இந்தியா கூட்டணிக்கு ஸ்டாலின் தான் தலைமை ஏற்கப் போகிறார் என்பதை அவர் சொல்லியிருக்கிறார்.

ஜனநாயகத்தை யார் இழிவு படுத்தினாலும், ஜனநாயகத்தை யார் படுகொலை செய்தாலும், இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், இதற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் இருந்த காலகட்டத்தில் ஜனநாயகத்தை படுகொலை செய்த காரணத்தினால் எமர்ஜென்சியை கொண்டு வந்த காரணத்தினால் இந்தியாவில் வல்லமை படைத்த இந்திரா காந்தி அவர்களும், சஞ்சய் காந்தி அவர்களும் படு தோல்வியை அடைந்தார்கள். அப்பொழுது கலைஞர் அவர்கள் தலைமையில் இருந்த கூட்டணி தான் இந்தியாவை ஆளத் தொடங்கியது. அதே நிலை தான் இன்றைக்கு மோடிக்கும் வரும் என்பதை அந்த நம்பிக்கையோடு கூறிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கஞ்சா புழக்கம் அதிகமாக உள்ளதாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, அவர் சொன்ன தகவலின் பெயரில் உடனடியாக ஆய்வு செய்து காவல்துறை நடவடிக்கை எடுக்கும் என்பது உறுதி என காவல்துறையினரும் சொல்லி உள்ளார்கள். அவர் தகவல் எது சொன்னாலும் அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டு உடனடியாக பரிசீலனை செய்யும் பரிசீலனை செய்யும் என்பதுதான் ஜனநாயக ரீதியாக மக்களாட்சி நடத்துகின்ற மக்கள் முதல்வர் தளபதியின் கடமை என தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், மாவட்ட துணை செயலாளர் அருணகிரி, பொதுக்குழு உறுப்பினர் ரவி, ஒன்றிய துணை சேர்மன் புனித ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர் மகேஸ்வரி குமரேசன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் அன்சாரி, ரகுபதி, செந்தில்குமார், சுப்பிரமணியன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார் நன்றி கூறினார்.

# பழக்கடை ஜெயராமன் நினைவுநாள்!

## பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை வேண்டுகோள்!

சென்னை, பிப். 13-

மறைந்த பழக்கடை கி. ஜெயரான் அவர்களின் நினைவு நாளையொட்டி தியாயராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., மேற்குப் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

மறைந்த மாவீரர் பழக்கடை கி.ஜெயராமன் அவர்களின் 40 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வருகின்ற 14.2.2024 புதன்கிழமை காலை 9 மணி அளவில் தியாகராயர் நகர் கண்ணமாபேட்டை இடுகாட்டில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதற்கு தியாகராய நகர் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், மாவட்ட பிரதிநிதிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள்அனைவரையும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர்,தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!

நாமக்கல் பிப் 13

இது குறித்து நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை 14.02.2024 (புதன் கிழமை) அன்று திருச்செங்கோடு, வேலூர் ரோடு, மாவட்டக் கழக அலுவலகத்தில் தளபதியார் அரங்கில் காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர், துணை தலைவர், நகர்மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள், சார்பு அணி தலைவர்கள், அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டத்தில் மார்ச் 01 ல் பிறந்தநாள் காணும் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, வருகின்ற 16.02.2024 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலின் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்' பரப்புரைக் கூட்டம் தொடர்பாக, கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. என தெரிவித்துள்ளார்.

## சென்னை – சென்னை புறநகர் பகுதிகளில் வாழும்

# 2 லட்சம் குடும்பங்களின் நீண்ட நாள் பட்டா பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பீர்!

## அமைச்சர்கள், அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, பிப்.13-**

**பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று 12.02.2024 நடை பெற்றது.**



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (12.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு செயலாளர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள வீட்டுமனை களுக்கு பட்டாக்கள் வழங்குவது குறித்து விவாதிப்பதற்காக முதலமைச்சர் அவர் களின் அறிவுறுத்தலின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை – சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 12.02.2024 அன்று தலைமைச்செயலகத்தில் உயர்நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

வருவாய் மற்றும் பிற துறைகளில் உள்ள நிலங்களை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் திட்டங்கள் நடைபெறும் இடங்களில், நிலஉரிமை மாற்றம் செய்வது குறித்தும், பயனாளிகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவது, பட்டாக்கள் வழங்குவது மற்றும் சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

### ஆக்கப்பூர்வமான கருத்துகள்!

மேலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதிகளில் உள்ள நில உரிமை மற்றும் வாழ்விட உரிமைதொடர்பானபிரச்சனைகளை குறித்து எடுத்துரைத்தனர். இது குறித்து அமைச்சர் பெருமக்கள் தங்களது ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துரைத் தனர்.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“சென்னை எனும் பழமையான நகரம், நமது பெருமைகளில் ஒன்றாக உள்ளது. உலகின் மிகச் சிறந்த நகரமாகவும் உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து இன்று கிட்டத்தட்ட ஒரு கோடி மக்களுக்குமேல் வாழக்கூடிய ஒரு மிகப்பெரிய மாநகரமாக நம் சென்னை மாநகரம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இதே வளாகத்தில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட முதல் கோட்டை. இந்தக் கோட்டைதான், இப்போது நம் தலைமைச் செயலகமாக இயங்கி வருகின்றது. இங்கு அனைத்துத் துறைகளும் இயங்குவதற்குப் போதுமான இடம் இல்லாததால்தான், நாம் தற்போது இந்தக் கூட்டத்தைக்கூட நடத்திக் கொண்டிருக்கக்கூடிய `நாமக்கல் கவிஞர் மாளிகை’ முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் கூடுதலாகக் கட்டப்பட்ட இடம்.

### நீதிக்கட்சி காலத்தில் திட்டங்கள்!

இப்படி ஒவ்வொரு காலகட்டத்திலும் சென்னை நகரம் தேவைக்கேற்ப புதிய குடியிருப்புகளாலும் கட்டுமானங்களாலும் விரி வடைந்து வந்து கொண்டிருக்கிறது. மக்களுக்கு நில உரிமை தரப்பட வேண்டும். அவர்களுக்கு என்று சொந்த வீடு இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றுதான் நீதிக் கட்சிக் காலத்திலேயே பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இன்றைய தியாகராயர் நகர் என்பது நீதிக் கட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட பகுதி. அதுதான் குடியிருப்புக்காக வடிவமைக்கப்பட்ட, சென்னையின் முதல் லேஅவுட் என்றுகூட சொல்லலாம்.

அனைத்தையும் சமூக நீதி கண்கொண்டு பார்த்து ஆட்சி செய்த கலைஞர் அவர்கள் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்காகக் கொண்டு வந்ததுதான் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்.

`சென்னை மக்கள் எவரும் குடிசையில் இருக்கக்கூடாது, அவர்களுக்கென்று சொந்தமாக ஒரு நிரந்தர வீடு இருக்க வேண்டும்’ என்று கலைஞரின் முற்போக்குச் சிந்தனையால் `குடிசை மாற்று வாரியம்’ மூலம் சென்னை நகரம் முழுவதும் பல குடியிருப்புகள் கட்டப்பட்டு மக்கள் அங்கே குடியேற்றப்பட்டனர்.

`குடிசைகள் இல்லாத மாநகரம்’ என்ற லட்சியத்துடன் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை அமைத்த கலைஞர் அவர்கள், குடிசைகள் இல்லாத கிராமங்களை அமைக்க கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தையும் தொடங்கினார். இப்படி மக்களின் வாழ்விட உரிமையை உறுதிசெய்ய கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலம் முழுவதும் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்தார்.

### முதல்வரின் தொலைநோக்குப் பார்வை!

பெரியார், அண்ணா, கலைஞர் அவர்களின் மொத்த உருவமாக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களின் வசிப்பிடம் தொடர்பான பிரச்சினை களைத் தொலைநோக்குப் பார்வையுடன் பல திட்டங்களையும் தீட்டி வருகின்றார்கள்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு என்பதை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் எனப் பெயர் மாற்றி, மக்களுக்கு மேம்பட்ட வாழ்விடத்தை அமைத்துத் தர தொடர்ந்து புதிய திட்டங்களை அமைத்து வருகின்றார்.

நம்முடைய அரசு அமைந்த பிறகு, ஏற்கெனவே வீடு கட்டிக் குடியிருக்கும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 2 லட்சம் ‘இபட்டா’க்களை நாம் வழங்கி இருக்கின்றோம். இவை தவிர, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விளிம்பு நிலை மக்களின் குடும்பங்களுக்கு, காலி மனைப் பட்டா வழங்கியுள்ளது நம்முடைய திராவிட மாடல் அரசு.

நத்தம் நிலப் பட்டாக்கள் கணினியில் ஏறாமல் இருந்தன. 300 வருவாய் வட்டங்களில் இந்த நத்தம் பட்டா இருக்கின்றது. கிட்டத்தட்ட ஒரு கோடியே 40 லட்சம் பட்டாக்கள். இவற்றில் 121 வருவாய் வட்டங்களின் இணைய வழியில் பட்டா மாறுதலை நாம் செய்து முடித்துள்ளோம். மீதியுள்ள வருவாய் வட்டங்களில் உள்ள நத்தம் பட்டாக்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் இணையத்தில் ஏற்றி முடிக்கப்படும். இப்படி நம்முடைய கழக அரசு மக்களுடைய வாழ்விட உரிமையை உறுதி செய்யத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

ஆனால் தொடர்ந்து வேகமாக நடைபெறும் குடியேற்றங்கள், நாம் முன்னெடுக்கும் திட்டங்களை அடுத்தடுத்து வருகின்ற அரசு, முறையாக எடுத்துச் செல்லாததால் சென்னையில் சில இடங்களில் பட்டா வாங்கும் நடைமுறையில் சில குழப்பங்கள் நிலவுகின்றன.

வீட்டு வசதி வாரியத்திலிருந்து விற்பனைப் பத்திரம் பெற்றும் சிலருக்கு நில உரிமை மாறாமல், அரசின் பெயரிலேயே அந்த நிலம் இருப்பதாக, பட்டாவில் காட்டுகின்றது என்று பரவலாக ஒரு புகார் வந்து கொண்டிருக்கிறது.

ஆலந்தூர், மதுரவாயல், சோழிங்கநல்லூர், மாதவரம் எனப் புறநகரங்கள் சென்னையுடன் இணைக்கப்பட்ட இந்தப் பகுதிகளுக்கு ‘டவுன் செட்டில்மென்ட்’ எனப்படும் நகர நில அளவுத் திட்டம் நடந்து கொண்டுள்ளது.

இதில் மூன்று லட்சத்து 20 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை ஒரு லட்சத்து 80 ஆயிரம்தான் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. மீதமுள்ள பட்டாக்கள் விரைவில் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசினுடைய நோக்கம்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும்கட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களின் வாழ்விட உரிமையை உறுதி செய்திட வேண்டும் என்பதில் மிகுந்த முனைப்பு டன் செயல்பட்டு வருகிறது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

### மக்கள் பிரதிநிதிகள் – அரசு அதிகாரிகள் ஆலோசனை!

இது போன்ற பட்டா பிரச்சினையால், சென்னை மற்றும் சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் சுமார் 2 இலட்சம் குடும்பங்கள் நிரந்தரத் தீர்வு கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றார்கள். இது வருவாய்த்துறை, வீட்டுவசதித் துறை, நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மாநகராட்சி, பொதுப் பணித்துறை, கால்நடைத் துறை எனப் பல துறைகள் தொடர்புடையதாக இருப்பதால், இதை ஒரு சிறப்புத் திட்டமாகக் கருதி சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அரசு அதிகாரியுடன் கலந்து ஆலோசனை செய்து அறிக்கையாகத் தயார் செய்து தரும்படி முதலமைச்சர் அவர்கள் நம்மிடத்தில் அறிவுறுத்தினார்கள். அதன் பிறகுதான் இந்தக் கூட்டம் இன்றைக்கு இவ்வளவு சிறப்பாக நடந்து முடிந்திருக்கின் றது.

ஏற்கெனவே சென்னையில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் உங்களின் தொகுதி சார்ந்த, பட்டா சார்ந்த கோரிக்கைகளை இங்கே தெரிவித்திருக்கிறீர்கள். இவை அனைத்தும் அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

ஆலோசனைக் கூட்டம் நிச்சயம் 2 லட்சம் குடும்பங்களின் நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வைக்கப்படும் தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைப் பெற்று இந்த 2 லட்சம் குடும்பங்களுக்கும் நில உரிமையும், வாழ்விட உரிமையும் உறுதி செய்யும் வகையில் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியை அளித்து,

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக உள்ள 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க, நில நிர்வாக ஆணையர் (சி.எல்.ஏ) தலைமையில் ஒரு கமிட்டி சென்ற அக்டோபர் மாதத்தில் அமைக்கப்பட்டது. இந்த கமிட்டி சிறப்புக் கவனம் செலுத்தி இந்தக் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கைகள் எடுக்க, வீட்டு வசதித்துறைச் செயலாளர் மற்றும் சி.எல்.ஏ அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பட்டா தொடர்பாக மக்களுடைய கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் கேட்கும் தகவல்களை காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், நம் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் அவர்கள் இந்தப் பணி முன்னேற்றம் குறித்து, வாரம் ஒரு முறை ஆய்வு செய்து எனக்கு அறிக்கை வழங்கும் படியும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் அனைவருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் வளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேல்மலையனூர் தாலுகாவிற்கு உட்பட்ட 512 பயனாளிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் உள்ளனர்.



விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்க மைதானம் அருகில் அருங்காட்சியகங்கள் துறை சார்பில் புதிய அருங்காட்சியக கட்டடம் ரூ .6.8 கோடி மதிப்பில் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார் .

## இந்திய இராணுவத்தில்

# செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறதா?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 13 -

இந்திய இராணுவத்துடன் இணைந்து செயல்படும் ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம், இந்திய இராணுவத்தில் செயற்கை நுண்ணறிவுத் (AI) தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறதா என நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார். அதன் விவரங்கள் பின்வருமாறு:

தொழில்நுட்பத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் அதீத கவனம் செலுத்தி வரும் ஒன்றிய அரசு, இந்திய இராணுவத்துடன் இணைந்து அவர்கள் தயாரிக்கும் அதிநவீன இராணுவ தரத்திலான மென்பொருளை உருவாக்குவதிலும் ஒத்துழைப்பு தருகிறதா என்றும், அவ்வாறெனில் அதன் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார். விவரங்களைத்

ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் முடிவெடுக்கும் அமைப்புக் கருவிகள் மற்றும் முன்கணிப்பு பகுப்பாய்வுகளை தயாரிப்பதில், இந்திய இராணுவத்துடன் இணைந்து செயல்படுகிறதா என்றும் அவ்வாறெனில் போர்க்களத்தில் இந்தக் கருவிகள் எதன் அடிப்படையில் தன் நுண்ணறிவு மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் என்பது குறித்த விரிவான தகவலை தெரிவிக்க வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார்.

பாதுகாப்பு செயல்பாட்டு மையம் 2.0 எனும் திட்டத்தின் மூலம் இந்திய இராணுவ செயல்பாடுகளில் ஒருங்கிணைக்கப்படும் இணைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கருவிகளின் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனவும், டிஜிட்டல் தளங்களில் பெருகிவரும் பல்வேறு அச்சுறுத்தல்களை இந்தப் பாதுகாப்பு செயல்பாட்டு மையம் எந்த வகையில் நிவர்த்தி செய்யும் எனவும் கேள்வி எழுப்பினார்.

இராணுவத் தொலைத் தொடர்பு பொறியியல் கல்லூரி செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மையமாக செயல்படுகிறதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசானது, உள்நாட்டுத் தொழில்நுட்பத்திற்கான தீர்வுகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமைகளை மேம்படுத்துகிறதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

# சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை!

சென்னை, பிப். 13 -

அரசு, அரசு உதவி பெறும்; கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கு இலவச கல்வித்திட்டத்தின் கீழ் எவ்வித நிபந்தனையுமின்றி கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

முதுகலை, பாலிடெக்னிக், தொழிற்படிப்பு போன்ற பிற படிப்புகளுக்கு பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2,50,000/க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

நடப்பாண்டில் புதியது மாணாக்கர்கள் https://ssp.tn.gov.in என்ற இணையதள முகவரியில் student loginஇல் சென்று ஆதார் எண் அளித்து ekyc verification செய்ய வேண்டும்.

கல்வி உதவித்தொகை இணையதளம் (scholarship portal) புதியதிற்கு (Fresh) 01.02.2024 முதல் செயல்பாட்டில் உள்ளது. புதியதிற்கான விண்ணப்பங்கள் மாணாக்கர்கள் 29.02.2024 க்குள் இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு தங்கள் கல்லூரியில் உள்ள கல்வி உதவித் தொகை உதவியாளரையோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தையோ அணுகவும்.

மேற்படி கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த தகுதியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவிகள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்கள்.

### விவசாயிகள் பேரணி எதிரொலி:

## டெல்லி முழுவதும் ஒரு மாதத்திற்கு தடை!

புதுடெல்லி, பிப். 13 -

டெல்லிக்குள் டிராக்டர்கள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது. விதியை மீறும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள் என டெல்லி போலீஸ் கமிஷனர் எச்சரிக்கை. விவசாய விளைபொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதாய விலையை உறுதியை செய்வதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லியில் நாளை பேரணி நடத்த இருப்பதாக விவசாய சங்கங்கள் அறிவித்தன. 200 விவசாய சங்கங்கள் பேரணியில் கலந்த கொள்ள அழைப்பு விடுத்த நிலையில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் டெல்லியில் கூட வாய்ப்புள்ளது.

இதனால் டெல்லி மாநில எல்லைகள் மூடப்பட்டுள்ளன. பல்வேறு தடுப்புகள் கொண்டு எல்லைகள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன.

நாளை பேரணி நடைபெறும் நிலையில், இன்றே எல்லை பகுதிகளுக்கு விவசாயிகள் வரத்தொடங்கியுள்ளனர். இதனால் டெல்லி அரசு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. அடுத்த மாதம் 12ந்தேதி வரை பொது இடங்களில் அதிகமானோர் கூட தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வினர் சமூகத்தில் வெறுப்புணர்வைப் பரப்புகின்றனர்!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

ராய்ப்பூர், பிப். 13 -

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையை காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி மேற்கொண்டுள்ளார்.

மணிப்பூரில் கடந்த மாதம் ராகுல் காந்தியின் இந்த யாத்திரை தொடங்கியது. அசாம், மேகாலயா, மேற்குவங்கம், பீகார், ஜார்கண்ட், ஒடிசா மாநிலத்தை கடந்து தற்போது சத்தீஸ்கரில் ராகுல் காந்தி நியாய யாத்திரை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) மற்றும் பாரதிய ஜனதா கட்சியைச் (பா.ஜ.க). சேர்ந்தவர்கள் சமூகத்தில் வெறுப்பை பரப்புவதாக ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார். இரண்டு நாள் இடைவெளிக்குப் பிறகு, சத்தீஸ்கர் மாநிலம் ராய்கரில் இருந்து ராகுல் காந்தி மீண்டும் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையைத் தொடங்கினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், “மதங்கள், மொழிகளை பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வினர் மாநிலங்களை ஒன்றுக்கொன்று சண்டையிட செய்கிறார்கள். வெறுப்பால் வெறுப்பை விரட்ட முடியாது, அன்பால் மட்டுமே முடியும்.

இன்றைய காலகட்டத்தில் நாடு முழுவதும் வெறுப்புணர்வு பரவி வருகிறது. நீங்கள் தமிழ், பெங்காலி, உருது பேசுகிறீர்கள் அதனால்தான் உங்களை எங்களுக்குப் பிடிக்க வில்லை.

நீங்கள் காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அதனால் எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

இது நாட்டை பலவீனப் படுத்துகிறது. பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வெறுப்புணர்வை பரப்புகின்றனர். வரவிருக்கும் தலைமுறைக்கு அன்பு நிறைந்த தேசத்தை கட்டியெழுப்புவதே இந்த யாத்திரையின் நோக்கம்” என்று ராகுல் காந்தி கூறினார்.

## திருவள்ளூர் மாவட்டம் - காக்களூரில் ரூ. 67.50 லட்சம் மதிப்பில்

# கலைஞர் நூற்றாண்டு நினைவு புதிய கிளை நூலக கட்டிடம்!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ -ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ திறந்து வைத்தனர்

திருவள்ளூர், பிப். 13: -

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், காக்களூரில் புதிய நூலக கட்டிடம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு திமுக பொதுக்குழு உறுப்பினரும், ஒன்றிய கவுன்சிலருமான த.எத்திராஜ் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில் அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 27.50 லட்சமும், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கு.ஜெயக்குமார் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 லட்சமும் ஒதுக்கீடு செய்தனர். மேலும் மாவட்ட நூலக நிதியிலிருந்து ரூ. 20 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மொத்தம் ரூ. 67.50 லட்சம் மதிப்பில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு புதிய கிளை நூலக கட்டிடம் கட்டுமான பணி நிறைவடைந்து திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் திமுக பொதுக்குழு உறுப்பினரும், ஒன்றிய கவுன்சிலருமான த.எத்திராஜ் அனைவரையும் வரவேற்றார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் விஜய் ஆனந்த், மாவட்ட நூலக அலுவலர் திருஞான சம்பந்தம், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய திமுக செயலாளர் ஆர். ஜெயசீலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த விழாவில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்எல்ஏ, பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, திருவள்ளூர் தொகுதி எம்பி கே.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு புதிய கிளை நூலக கட்டிடத்தை திறந்து வைத்தனர்.விழாவில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கவுன்சிலர் டி.தென்னவன், திமுக நிர்வாகிகள் தங்கவேலு, சொக்கலிங்கம், சாமுண்டீஸ்வரி சண்முகம், ராமச்சந்திரன், தண்ணீர்குளம் தயாளன், த.சுகுமார், சௌந்தரராஜன், தியாகராஜன், வழக்கறிஞர் வினோத், பிரபு, சங்கர், சரவணன், வேலுதம்பி, ராஜி, கார்த்திக், மணிகண்டன், மிராசா, பாலாஜி, ராஜேஷ், முருகன், சூரிய பிரபு, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### ஆதி திராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 16.02.2024 - வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. மார்ச் -1, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா;

2. 27.02.2024 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் - குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18,
நாள்: 12.02.2024

**ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்ஏ.,**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் இரா. அருணகிரி
### பிப்ரவரி 13 (2005)



நாமக்கல் நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும் பின்னர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இரு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.


நாமக்கல் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், நாமக்கல் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைப்புக்குழு துணைத் தலைவராகவும், மாநில கூட்டுறவு இணையத்தின் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

சட்டநகல் எரிப்பு, ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.மலையாளம்
### பிப்ரவரி 13 (2000)



கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

திருச்சி, மணப்பாறை நகரக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பொறுப்புகள் வகித்தவர்.

தியாகேசர் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்ககத் தலைவராக பொறுப்பு வகித்து, தொழிலாளர் நலத்திற்கென பாடுபட்டவர்.

மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## அதானி மீது காட்டும் அளவுக்கு

# தமிழ்நாட்டு மீனவர்கள் மீது மோடி அக்கறை காட்டாதது ஏன்?

## இராமேஸ்வரத்தில் பல்லாயிரவர் திரண்ட மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஆர்.எஸ்.பாரதி கேள்வி!

இராமேஸ்வரம், பிப். 13 -

**“அதானி மீது காட்டும் அக்கறையை தமிழ்நாட்டு மீனவர்கள் மீது பிரதமர் மோடி காட்டாதது ஏன்?” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி இராமேஸ்வரத்தில் பல்லாயிரவர் திரண்ட மீனவர் ஆர்ப்பாட்டத்தில் பேசும்போது கேள்வி எழுப்பினார்.**

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசைக்கண்டித்து 11.02.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் இராமேஸ்வரத்தில், கழக மீனவரணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஒருங்கிணைப்பில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராம லிங்கம் எம்.எல்.ஏ. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் மாநில மீனவரணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., துணைச் செயலாளர்கள் வீ.பி. பொன்னரசு, தூத்துக்குடி புளோரன்ஸ், பி.ஜெயப்பிரகாஷ், தம்பிதுரை உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆற்றிய உரை வருமாறு :

தமிழ்நாட்டின் முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், தொடர்ந்து இலங்கை அரசால் பல்வேறு துன்பங்கள் ஏற்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் பட்டியல் நீண்டு கொண்டு போனாலும், கடந்த 8ஆம் தேதி அன்று இந்த பகுதியில் இருக்கும் 19 பேர் கைது செய்யப்பட்டு படகுகள் எல்லாம் கைப்பற்றப்பட்டவுடன், உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்களை தளபதி அவர்கள் தொடர்பு கொண்டு, பாராளுமன்றத்தில் இந்த பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் தி.மு.க.வின் சார்பில் ஒன்றிய அரசை உடனடியாக கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று கூறி கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்தால், நேற்றைய தினம் மோடி அரசு அதற்கெல்லாம் வேலை இல்லை; கொடுக்க முடியாது என்று மறுத்து இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் இவர்கள் நடத்திய அந்த நாடகத்திற்கு இராமர் கோயில் விவகாரத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை பேசிக் கொண்டு இந்தியா முழுவதும் மக்களை திசை திருப்பும் வகையில் மோடி அரசு செயல்பட்டு இருக்கிறது.

### மோடி என்ன செய்தார்?

எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல, 2014ஆம் ஆண்டு இதே மோடி இதே பகுதியில் வந்து என்ன சொன்னார்? பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவன்கூட இலங்கை அரசால் கைது செய்யப்பட மாட்டான் என்று சொன்னாரா? இல்லையா? இதை ஊரில் சொல்லிவிட்டுத்தானே போனார். இதை சொல்லித்தானே பி.ஜே.பி. ஓட்டுக் கேட்டது. 10 வருடத்திற்கு பின்னால் இன்றைக்கு என்ன நிலைமை? மோடியின் ஆட்சியில் மட்டும் 3076 மீனவர்கள் இதுவரையில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மோடி அவர்களே... இலங்கை அரசின்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? குறிப்பாக, இந்த ஒரு வருடத்திற்கு முன்னால் 243 பேர் பல்லாயிரக் கணக்கான மக்கள் பாதிக்கும் வகையில் பல படகுகள் கைப்பற்றப்பட்டன. ஒரு வார்த்தையாவது மோடி பேசினாரா?

அதே நேரத்தில் வேறு யாருக்காவது உத்தரப் பிரதேசத்தில் இருப்பவனுக்கோ, குஜராத்தில் இருப்பவர்களுக்கோ ஏதேனும் ஏற்பட்டால் கண்ணீர் வடிக்கிற மோடி அவர்களே... இந்த ராமேஸ்வரத்தில் 10 நாட்களுக்கு முன்னால் வேஷம் போட்டு விட்டுப் போனீர்கள். கோயிலைச் சுற்றிவிட்டு வந்தால், இந்த மக்கள் ஏமாந்து விடுவார்களா?

அதுமட்டுமல்ல, நிர்மலா சீதாராமன் சொல்கிறார், இந்த அரசாங்கம் - தி.மு.க. இந்துக்களுக்கு விரோதி என்று. நான் மோடிக்குச் சொல்வேன்; நிர்மலா சீதாராமனுக்கும் சொல்வேன்; இந்துக்கள் வாழ்கிற; இந்துக்களின் புனித ஸ்தலமாக இருக்கிற இந்த இராமேஸ்வரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முத்துராமலிங்கம்தான் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டி ருக்கிறார். எனவே இந்த தொகுதியில் இருக்கிறவர்கள், இந்த திருத்தலம் இருக்கின்ற இடத்திலே தி.மு.க.விற்குதான் ஓட்டு என்று இந்து மக்களே முடிவெடுத்திருக்கிறார்கள் என்றால் இதைவிட பதிலை நிர்மலா சீதாராமனுக்கு சொல்ல விரும்பவில்லை.

ஏன் பக்கத்தில் இருக்கும் தூத்துக்குடி, அதில் இருக்கும் திருச்செந்தூர், அங்கு இருக்கின்ற முருகன் கோயில் தமிழ்நாட்டிலேயே பிரசித்திபெற்ற அறுபடை வீடுகளில் ஒன்று. அந்த திருச்செந்தூர் தொகுதியிலும் எங்கள் அனிதா இராதாகிருஷ்ணன்தான் உதயசூரியனில் வெற்றி பெற்றிருக்கிறார். இப்படி பட்டியலே போட்டுக் கொண்டு போகலாம்.

### தமிழ்நாட்டைப் பற்றிக் கவலைப்படாத மோடி!

நாங்கள் கேட்பதெல்லாம், எங்களுக்கு ஒரு இழுக்கு ஏற்பட்டிருக்கி



றது. இலங்கையிலே தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மீனவ தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சியில் உடனடியாக, காங்கிரஸ் ஆட்சி என்று சொன்னால் அதற்கு காரணம் இங்கே தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு குரல் கொடுத்தால் உடனடியாக அன்றைக்கு பயந்தார்கள். கேட்டு செய்து முடித்தார்கள்.

ஆனால் இந்த மோடி தமிழ்நாட்டைப் பற்றி கவலைப்படவில்லை. தமிழன் எவன் செத்தால் எனக்கென்ன? இன்னும் 10 பேர் செத்தாலும் அதைப்பற்றி எனக்கு கவலை அல்ல என்று ஆணவத்தோடும், அகம்பாவத்தோடும் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்.

### இலங்கையின் நிலை என்ன?

இதே இலங்கை அரசோடு மோடிக்கு என்னென்ன தொடர்பு இருக்கிறது என்று எங்களுக்கு தெரியாதா? நான் கேட்கிறேன், எங்களை சுடுகிறான்? 2017இல் பிரிட்டோ என்ற மீனவ நண்பனை இலங்கை அரசு சுட்டுக் கொன்றது. அதற்கு பிறகுதான், மோடி அரசு , இலங்கை அரசு எங்களுக்கு செய்த பாவம்; தமிழனுக்கு செய்த துரோகம்தான். இன்றைக்கு இலங்கை பிச்சைக்கார நாடாக ஆகிவிட்டது. எங்களை தொட்டால் அவன் கெட்டு விடுவான். எந்த தமிழனை தொட்டாலும், எவன் தமிழனை தொட்டாலும் அவன் கெட்டு விடுவான் என்பதற்கு எடுத்துக்காட்டு இலங்கை. அப்படித்தான் தமிழர்களை எல்லாம் துன்பப்படுத்தினார்கள்; வேதனைப்படுத்தினார்கள்; மீனவர்களை எல்லாம் பிடித்து போட்டார்கள். இன்றைக்கு இலங்கை என்ன ஆனது? பிச்சை எடுக்கிறது. பொருளாதாரம் சீரழிந்து. பணம் இல்லை. தெருத்தெருவாக இராமேஸ்வரத்தில் கோயிலுக்கு முன்னால் பிச்சை எடுக்கின்றவனை போல, இலங்கை அரசு உள்ளது!

### மீனவர்களைப் பற்றி கவலைப்படாத மோடி!

நம்மை சுடுகிறவனுக்கு; நம்மை கொல்லுகின்றவனுக்கு இந்த மோடி 34,000 கோடி ரூபாய் கொடுத்து உதவி செய்கிறார். ஆனால் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நமக்கு இங்கிருக்கும் மீனவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கு கேட்டால், இல்லை என்று மறுக்கிறார். ஆனால் இலங்கைக்கு; நம்மை கொல்பவனுக்கு; நம்மை சாகடிப்பவனுக்கு 34,000 கோடி ரூபாய் கொடுத்து இந்திய அரசு நீயும், நானும் தரும் வரிப்பணத்தில் கொடுத்து உதவுகிறார் என்று சொன்னால், அது நியாயம் தானா? தி.மு.க.வின் சார்பில் எழுப்பப்படும் குரலுக்கு எந்த பதிலையும் மோடியால் தர முடியவில்லை.

ஆனால் அதே நேரத்தில் நம்முடைய தலைவர்; தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் உடனடியாக இந்த மீனவ நண்பர்களுக்கு எல்லாம் செய்திட வேண்டும் என்பதற்காக இதே மண்டபத்தில் இராமநாதபுரம் மண்டபத்தில் மீனவர் அமைப்பின் மாநாட்டை 2023 ஆகஸ்டில் கூட்டி இதுவரையில் கௌதம் அவர்கள் சொல்லிக் காட்டியதுபோல, முன்னர் இந்த மாநாடு எல்லாம் கூட்டவில்லை. ஆனால் மீனவர்கள் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஆனால் ரொம்ப நாளைக்கு யாரையும் ஏமாற்ற முடியாது என்பதற்கு இந்த கூட்டமே ஒரு எடுத்துக்காட்டு. திராவிட முன்னேற்ற கழகத்தின் பக்கம் வந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு உண்மையிலேயே மீனவ நண்பர்கள் என்று சொன்னால் அந்தப் பட்டத்திற்கு உரியவர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் தவிர வேறு யாரும் கிடையாது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இங்கு மாநாட்டை கூட்டி நீங்கள் வைத்த கோரிக்கையை, மேடையிலேயே 10 கோரிக்கை அறிவித்தார். நமக்கு 936 கோடியே 88 லட்சம், ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாயை உங்களுக்கு காசு அள்ளிக் கொடுத்த வள்ளல்தான் இன்றைய முதல மைச்சராக இருக்கும் நம்முடைய தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இன்றைக்கு கேட்டால்கூட 8ஆம் தேதி 19 பேரை பிடித்து விட்டார்கள் என்றவுடன் உடனடியாக 9ஆம் தேதி முத்துராமலிங்கத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உடனடியாக ஆர்ப்பாட்டத்தை நடத்துங்கள் என்று. எனக்கே தெரியாது. நானே இந்த போராட்டத்தில் தலைமை தாங்குவேன் என்று எனக்கு தெரியாது. இங்கிருக்கும் முன்னாள் செயற்குழு உறுப்பினர் நண்பர் குணசேகரன்தான் என்னிடத்தில் தொடர்பு கொண்டு தலைமை அறிவித்திருக்கிறது. 9ஆம் தேதி இரவு சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லி, அதற்கு பின்னால் என்னை தலைமை தாங்க வேண்டும் என்று தலைமை கழகத்தில் இருந்து சொன்னார்கள்.

### பா.ஜ.க.வுக்கு ஜீரோ தான்!

ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், ஒரே நாளில் அறிவித்தவுடன் இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டத்தைக் கூட்டி ஏன் என்று சொன்னால் இன்றைக்கு 11ஆம் தேதி, மோடி இன்னும் என்னென்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை. அவருக்கு தேர்தல் கணிப்பு தமிழ்நாடு பற்றி வந்துவிட்டது. தேர்தல் கணிப்பு என்ன தெரியுமா? தமிழ்நாட்டில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெறப் போகிறது. பி.ஜே.பி.க்கு ‘0’ என்று சொல்லுகிறார்கள். அதனால் நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. இந்த குரலை எழுப்புவதற்கு காரணம், ரிஜிஸ்டர் செய்வதற்குத்தான்.

### மோடிக்கு எதிர்ப்பு அலை!

நான் நிச்சயமாக சொல்லிவிட்டுப்போகிறேன். 2024 மே தேர்தலில் ஒன்றியத்தில் ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படத்தான் போகிறது. காரணம் இந்தியா முழுவதும் மோடி ஏமாற்றியது மக்களுக்கு வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. எந்த மாநிலத்திலும் அவருக்கு செல்வாக்கு இல்லை. தென்னாட்டில் அவருக்கு இல்லை; மேற்குவங்கத்தில் இல்லை; ஏன் குஜராத்திலேயே இல்லை; உத்தரபிரதேசத்திலும் இல்லை; காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை அவருக்கு எதிர்ப்பலை வீசுகிறது. அதற்கு காரணம் அவர் செய்த துரோகம்.

### இலங்கையில் அதானிக்கு காண்ட்ராக்ட்!

34,000 கோடி ரூபாயை இலங்கை அரசுக்கு கொடுத்துவிட்டு, அவருடைய நண்பராக இருக்கும் அதானிக்கு அங்கே காண்ட்ராக்ட் வாங்கி கொடுத்திருக்கிறார். உண்டா? இல்லையா? பத்திரிகை வாயிலாக நான் இதை சவால் விடுகிறேன். மீனவர்களை சுட்டுக்கொன்ற இலங்கை அரசோடு கள்ளத்தொடர்பு வைத்துக் கொண்டு நம்முடைய வரிப்பணத்தில் 34,000 கோடி ரூபாயை தாரைவார்த்து கொடுத்து விட்டு எல்லா காண்ட்ராக்டையும் அதானிக்கு வாங்கி கொடுத்திருக்கிறார். அங்கிருக்கும் அனைத்து மின்சாரம் வாரியம், அதுபோல சிலோனில் இருக்கும் எல்லா மின்சார வாரியத்தையும் இன்றைக்கு அதானி வாங்கிவிட்டார். மோடி வாங்கி கொடுத்திருக்கிறார். நாம் என்ன செய்ய முடியும்? இலங்கை அரசாங்கத்திடம் மீனவர்களை பற்றி பேச முடியுமா?

### அமித்ஷா மகனுக்கு இலங்கையில் காண்ட்ராக்ட்!

நான் கேட்கிறேன், மோடியே... கிரிக்கெட் விளையாடுகிறோம் அல்லவா... அந்த கிரிக்கெட் சங்கத்திற்கு அமித்ஷாவின் மகன் ஜெய் ஷா இருக்கிறார். இங்கே இருந்து சென்று சிலோனில், அங்கே இருக்கும் கிரிக்கெட் கிளப்பை கைப்பற்றி கிரிக்கெட் சங்கங்கள் நடுவே போட்டி. அந்த வியாபாரத்தில் ஈடுபட்டு இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொண்டு, அந்த ஒப்பந்தத்தை அமித்ஷாவின் மகனுக்கு வாங்கி கொடுக்கிறார் மோடி.

இவ்வளவு செய்கிற மோடி, அந்த 19 பேரை விடுதலை செய்ய கேட்க முடியாதா? பிடிக்கப்பட்ட படகுகளை திருப்பிக் கொடு என்று கேட்க முடியாதா? இதை விட பெரிய துரோகம் என்ன செய்திருக்கிறார் என்றால், 2018இல் இலங்கை அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. 22 கிலோ மீட்டருக்கு மேல் தமிழ்நாட்டில் எல்லையில் இருந்து சென்று மீன் பிடித்தால் அந்த உரிமை உங்களுக்கு இல்லை என்று சொல்லி விட்டு அந்த காண்ட்ராக்ட் அந்த நிறுவனத்திற்கு வழங்கி இருக்கிறார் மோடி. மீனவ நண்பர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். 22 கிலோமீட்டர் தாண்டி, 30 கிலோ மீட்டர் 40 கிலோ மீட்டர் சென்றால்தான் மீன் கிடைக்கும். அந்த 22 கிலோமீட்டருக்கு இடையில் மீன் கிடைக்காது. லட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்த மீனவன், வங்கிகளில் கடன் வாங்கி போட் வாங்கி இருப்பவர்கள், திருப்பி கட்டுவதற்கு வழி இல்லை என்றால் மீன் பிடித்துதானே ஆகவேண்டும்; வருமானம் வந்துதானே ஆக வேண்டும். எனவே, எங்கே மீன் கிடைக்கிறதோ அங்கே சென்றால் அதற்கு ஒரு வரி.

எல்லாவற்றிற்கும் வரிபோடுகிற ஒரே ஒரு அரசாங்கம். மோடி அரசுதான். நாம் சாப்பிடும் இட்லிக்குகூட வரி. ஒரு ரூபாய் இட்லி வாங்கி கொடுத்தீர்கள் என்றால், 18 பைசா நிர்மலா சீதாராமனுக்கும், மோடிக்கும் கொடுக்க வேண்டும். அதே போல, 22 கிலோமீட்டருக்கு மேல் சென்று மீன் பிடித்தால் மோடி அரசாங்கத்திற்கு லைசென்ஸ் இல் பணம் கட்ட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கொடுமையான ஆட்சியை அவர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, இதற்கெல்லாம் முடிவு கட்ட வேண்டும் என்பதற்காகத்தான் 5 மாவட்டங்களில் இருக்கும் மீனவ நண்பர்கள் அத்தனை பேரையும் ஒரே நாளில் ஒன்று கூட்டி இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை நடைபெறுவதற்கு காரணமாக இருந்த முத்துராமலி ங்கத்தையும், இந்த அணியினை சிறப்பாக நடத்திச் செல்கின்ற அணியின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அவர்களையும் தலைமைக் கழகத்தின் சார்பில் பாராட்டுகிறேன்.

இந்த போராட்டம் - ஆர்ப்பாட்டம் என்பது எதற்காக என்று சொன்னால், 2024 மேயில் புதிய ஆட்சி ஏற்பட்டவுடன் ஜூன் மாதம் முதல் தமிழ்நாட்டில் இருக்கும் மீனவர்களுக்கு முழு பாதுகாப்பாக அந்த அரசு இருக்கும். அந்த அரசை அமைப்பவர் நம்முடைய தலைமை தளபதி மு.க.ஸ்டாலின் ஆகத்தான் இருப்பார்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

---


நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதியில்

# “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்”

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்!

நாமக்கல், பிப்.13- “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” பரப்புரைக் கூட்டம் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களைநேரடியாக கேட்டறிந்திட கழக முன்னணியினர் “விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்” என்ற



பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024இல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்போழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக, கழக முன்னணியினர் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில் வருகின்ற 16.02.2024 வெள்ளிக்கிழமை அன்று மாலை 05.00 மணிக்கு நாமக்கல் பூங்காசாலையில் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தமிழ்ச்சி தங்கபாண்டியன், எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம். மதுராசெந்தில், சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னு சாமி, நாமக்கல் நாடாளுமன்ற தொகுதிக்கு (நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம், பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய சட்டமன்ற தொகுதிகள்) உட்பட்ட நகர்மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், கிளை கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

---

கோயம்புத்தூர் மாவட்டத்தில்

# பொதுமக்களிடம் கோரிக்கை மனு!

## மாவட்ட வருவாய் அலுவலர் பெற்றுக் கொண்டார்!

கோவை, பிப்.13- கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று (12.02.2024) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர். மோ.ஷர்மிளா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் திருமதி.மு.கோகிலா, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம்சுரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை பொது மக்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் அளித்தனர். பொதுமக்களிடமிருந்து இலவச வீடு வேண்டி 86 மனுக்களும், வீட்டுமனைப் பட்டா வேண்டி 151மனுக்களும், வேலைவாய்ப்பு வேண்டி 8 மனுக்களும், 224 இதர மனுக்கள் என மொத்தம் 469 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.



கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட மகளிரணி சார்பில் அணி அமைப்பாளர் எம்.தவசுமணி ஏற்பாட்டில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஏ.ஐ.டி திருமண மண்டபத்தில் 500க்கும் மேற்பட்ட ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. கர்ப்பிணி தாய்மார்களுக்கு சடங்கு செய்து, சீதனமாக மாவட்ட மகளிரணியால் பரிசு பொருட்களை அளித்து, பல்வேறு வகை சாதம் பரிமாறப்பட்டது. நிகழ்வில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஸ்வரி, ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.பரமசிவம், மா.தமிழய்யா, மாவட்ட மகளிரணி தலைவரும் கரம்பக்குடி ஒன்றிய பெருந்தலைவருமான மாலா ராஜேந்திரதுரை, மாவட்ட மகளிரணி துணை தலைவரும் மாவட்ட ஊராட்சி குழு தலைவருமான ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், மாவட்ட கவுன்சிலர் நா.ஸ்டாலின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் செந்தாமரை பாலு, எம்.ராஜா, எஸ்.வி. ஆர்.ஸ்டாலின், ஜெயந்தி, செந்தாமரை, ரேணுகா, பெ.தெய்வானை, எழில் ராஜா, க.சுப்பிரமணியன், சண்முகம், ரவிச்சந்திரன், கோவிந்தன், கலியபெருமாள், கலைச்செல்வி நடேசன், அம்பிகாபதி, நியூஸ் ராஜேந்திரன், குஞ்சப்பா, கே.ராஜேந்திரன், ஆர்.முத்துக்குமார், ஆர்.முருகேசன், எஸ்.ஆர்.கலையரசன், வினோத், அர்ச்சுனன், ஜானகிராமன், வேலுமயில், க.அரங்கராஜன், எம்.பி.முருகேசன், ராமராஜன், ராமசாமி, பாண்டியன், செல்லபிள்ளை, ரெங்கசாமி, டாக்டர் மணிமாறன், க.ரேவதி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



மந்தைவெளி, புனித அந்தோணியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, +2 மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வு நேற்று தொடங்கியுள்ளதை முன்னிட்டு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்முறைத் தேர்வு நடைபெறும் ஆய்வகங்களைப் பார்வையிட்டு மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்தார். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மார்ஸ் உடனிருந்தார்.

### திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகள் - விடுதிகள்

# அமைச்சர்கள் அர.சக்கரபாணி - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆய்வு!

திண்டுக்கல், பிப்.13-

அமைச்சர்கள் அர.சக்கரபாணி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் திண்டுக்கல் நகர் பேகம்பூர், மேட்டுப்பட்டி, நத்தம் ரோடு ஆகிய பகுதிகளில் சிறுபான்மை யினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளி மற்றும் விடுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல் படுத்தி வருகிறார்கள். மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும், படித்த இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பெண்கள் உயர் கல்வி பெறுவதற்கான வழிவகைகள், வசதிகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மையின மக்களின் மேம்பாட்டிற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும் தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், அடக்க தலங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.10.00 நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். அந்த நிதியிலிருந்து சிறுபான்மையின மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினர் கல்வி மேம்பாட்டிற்காக சிறுபான்மையினர் சார்பில் செயல்படும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தவும், மாணவ, மாணவிகளுக்கான விடுதிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர் ஒரியண்டல் அமிருன்நிஷா உயர்நிலைப் பள்ளி, மேட்டுப்பட்டி புனித பிலோமினாள் நடுநிலைப் பள்ளி, நத்தம் ரோட்டில் அமைந்துள்ள அரசு பள்ளி சிறுபான்மையினர் நல விடுதி ஆகிய பள்ளி மற்றும் விடுதிகளில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கான குடிநீர் வசதி, வகுப்பறை, கழிவறைகள், பள்ளி உட்கட்டமைப்பு, தேவையான அடிப்படை வசதிகள், மாணவர்களின் வருகை பதிவேடு, ஆசிரியர்களின் வருகை பதிவேடு, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விடுதியில் தங்கியுள்ள மாணவிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, உணவு வசதி, படுக்கை அறை, கட்டில், பெட்சீட், கழிவறை வசதி, படிப்பதற்கு காற்றோட்டமான அறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலை, மதியம், இரவு ஆரோக்கியமான உணவு வழங்கப்படுவதுடன், பள்ளிக்கு மதிய உணவு சாப்பிடும் வகையில் மதிய உணவு எடுத்துச் செல்லவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், விடுதி கட்டடம், சமையலறை, சுற்றுப்புறச்சூழல், சுகாதார வசதிகள், குளியலறை, கழிவறை வசதிகள், விடுதியில் குப்பை, செடிகள், கொசுவினால் நோய் பரவாமல் இருப்பதற்கு விடுதியினை சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்தும், விடுதியில் மாணவிகளின் வருகை பதிவேடு, பொருள் இருப்பு பதிவேடு, காப்பாளர் வருகை பதிவேடு, சமையல் செய்யும் அறையின் சுத்தம், உணவு தரம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொல்லபட்டி வக்பு கபர்ஸ்தான் சுற்றுச்சுவர் கட்ட ரூ.5.00 இலட்சம், கொசவபட்டி ஜிம்மா பள்ள வாசல் வக்பு கபர்ஸ்தான் சுற்றுச்சுவர் கட்ட ரூ.6.75 இலட்சம், ஜவ்வாதுபட்டி புதூர் பள்ளிவாசல் மற்றும் மதரஸா பள்ளிவாசல் மராமத்துப்பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம், விருப்பாட்சி பள்ளிவாசல் வக்பு பள்ளிவாசல் மராமத்துப் பணிக்கு ரூ.3.00 இலட்சம், மார்க்கம்பட்டி பள்ளிவாசல் வக்பு பள்ளிவாசலில் கழிப்பறைக் கட்ட ரூ.3.00 இலட்சம் வழங்கிடும் பொறுட்டு, அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த பள்ளிவாசல்களின் தலைவர்கள் அல்லது முத்தவல்லிகள் விரைவில் மானியத்தை பெற்று பள்ளிவாசல் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும், என சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாநகர செயலாளர் ராஜப்பா திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் பிலால்உசேன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தேனி மாவட்டத்தில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான

# சிறப்பு கல்விக்கடன் முகாம் 15- ஆம் தேதி நடைபெறுகிறது!

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்!

தேனி, பிப்.13-

தேனி மாவட்ட நிர்வாகம் சார்பாக கல்லூரியில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் கல்விக் கடன் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிறப்பு கல்விக்கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட ஆட்சியரகம் அருகில் உள்ள தேனி அரசு தொழிற்பயிற்சி கல்லூரி வளாகத்தில் 15.02.2024 அன்று கல்விக்கடன் வழங்கும் முகாம் (Education Loan Facilitation Camp) நடைபெற உள்ளது.

இந்த கல்விக்கடன் வழங்கும் முகாமில் பொறியியல் கல்லூரி, மருத்துவ கல்லூரி, வேளாண் மற்றும் தோட்டக்கலை கல்லூரி, கால்நடை மருத்துவ கல்லூரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி தொழிற்பயிற்சி கல்லூரி, சட்டக் கல்லூரி போன்ற அனைத்து வகையான கல்லூரிகளில் படிக்கின்ற முதலாம் ஆண்டு முதல் இறுதி ஆண்டு வரை படிக்கும் அனைத்து மாணவ, மாணவிகள் தவறாமல் இந்த முகாமில் கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் இம்முகாமில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். மாணவர்கள் www.vidyalakshmi.co.in என்ற இணையதளத்தில் கல்விக்கடன் விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கும், ஏற்கனவே vidyalakshmi இணையதளத்தில் கல்விக்கடன் கோரி விண்ணப்பித்த மாணவ மாணவிகளின் மனுக்களை பரிசீலனை செய்து கடன் வழங்க நடவடிக்கை எடுப்பார்கள். எனவே மாணவர்கள் அனைவரும் தவறாமல் இந்த கல்விக்கடன் முகாமினை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.வி.ஷஜிவனா தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள வரும் மாணவர்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், முகவரிக்கான சான்று, ஆதார் கார்டு, பெற்றோரின் பான் கார்டு, வங்கிக்கணக்கு எண், Bonafide certificate உள்ளிட்ட தேவையான ஆவணங்களை எடுத்துவர வேண்டும்.

### கோடியக்கரை அருகே தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய

# இலங்கைக் கடற்படையினர் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் செ.இராமலிங்கம் கேள்வி !

புதுடெல்லி, பிப். 13-

“கோடியக்கரை அருகே தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய இலங்கைக் கடற்படையினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் திருவிடைமருதூர் செ.இராமலிங்கம் கேள்வி எழுப்பினார்.



இந்திய மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூடு குறித்து மயிலாடுதுறை மக்களவை உறுப்பினர் செ. இராமலிங்கம் அவர்கள் பாதுகாப்பு அமைச்சர் அவர்களுக்கு கீழ்காணும் வினாக்களை எழுப்பினார்.

அது வருமாறு:-

(அ) கோடியக்கரை அருகே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இந்திய கடற்படைக் கப்பல் அதிகாரியின் மீதான விசாரணையின் நிலை குறித்த விவரங்கள்; (ஆ) அத்தகைய குற்றமிழைத்த அதிகாரிக்கு எதிராக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செலுத்தப்பட்ட இழப்பீடு தொடர்பான விவரங்கள்; (இ) 22.10.2023 அன்று மாலத்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா மற்றும் INDTN12MM6376 என்ற பதிவு எண் கொண்ட இந்திய மீன்பிடிக் கப்பலுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை தள்ளுபடி செய்ததா, அப்படியானால், அதன் விவரங்கள்; (ஈ) 28.10.2023 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட INDTN10MM860, INDTN10MM985, INDTN10 MM915, INDTN10MM717 and INDTN10MM972 என்ற பதிவு எண் கொண்ட 5 மீன்பிடி படகுகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அதன் அடுத்த நடவடிக்கை என்ன?

அதற்கு பாதுகாப்பு அமைச்சகத்தின் மாநில அமைச்சர் அஜய் பட் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

(அ) &(ஆ) விசாரணை 18 டிசம்பர் 2022 அன்று நிறைவடைந்தது. இந்திய கடற்படை அதிகாரிக்கு எதிராக நிர்வாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.. இழப்பீடாக துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த மயிலாடுதுறை மாவட்டம் வானகிரியைச் சேர்ந்த காசிராஜன் மகன் வீரவேலுக்கு 2 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. சிறு காயங்களுக்கு உள்ளான மேலும் 6 மீனவர்களுக்கு ரூ.1.20 லட்சம் (ஒரு மீனவருக்கு ரூ. 20,000/ வீதம்) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது (இ): மாலத்தீவில் உள்ள இந்திய தூதரகத்தின் நெருக்கமான கண்காணிப்புக்குப் பிறகு, INDTN12MN6376 என்ற மீன்பிடிக் கப்பலில் இருந்த 12 இந்திய மீனவர்களும் பத்திரமாக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கப்பலுக்கு விதிக்கப்பட்ட அபராதம் தொடர்பாக மாலத்தீவில் உள்ள இந்திய தூதரகம் மூலம் மாலத்தீவில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஈ) கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்களில் 36 பேர் நவம்பர், 2023 இல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் மற்றும் 1மீனவர் 2022 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு மீண்டும் மீண்டும் IMBL ஐத்தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் 02 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இலங்கையில் உரிய அதிகாரிகளுடன் 05 மீன்பிடி படகுகளை விடுவிக்க தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அஜய் பட் பதிலளித்தார்.



தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் 09.02.2024 அன்று மாநிலத் துணைச் செயலாளர் அன்வர்கான் தலைமையில். கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் ஹுசைன் முன்னிலையில் கோவையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவசீலன், ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர் அயூப் அலி, மாநகர அமைப்பாளர் சந்தோஷ் டோமினிக், நீலகிரி மாவட்ட அமைப்பாளர் அன்வர், திருப்பூர் வடக்கு மாவட்ட அமைப்பாளர் நிசார் அகமது, மாநகர அமைப்பாளர் எஸ்.ஏ.பாக்கியராஜ் மற்றும் மாவட்ட தலைவர், துணைத் தலைவர் மற்றும் மாவட்ட, மாநகர, துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்

### பிப்ரவரி 13 (2009)



பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை கை. அங்கமுத்து

### பிப்ரவரி 13 (2014)



தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, குளித்தலை நகரக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றிருந்த இவர், தலைவர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

கல்லக்குடி போராட்டத்தின்போது குளித்தலையில் கைதாகி, தலைவர் அவர்களுடன் திருச்சி மத்திய சிறையில் இருந்ததோடு, ‘நங்கவரம்’ போராட்டத்திலும் தலைவர் அவர்களுடன் கலந்து கொண்டவர். அத்துடன் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

“மொழிப்போரில் பங்கேற்றது தனது கடமை” என்று சொல்லி, மொழிப்போர் தியாகிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ளாமல் மறுத்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# மாநிலங்களின் உரிமைக் குரல் : தேசம், வளர்ச்சி, கூட்டாட்சி!

இந்திய அரசியலில் மாநில அரசுகளுக்கும், ஒன்றிய அரசுக்குமான முரண்கள் முன்னெப்போதும் இல்லாத அளவு கூர்மைப்பட்டுள்ளது. கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டு அரசுகள் தலைநகர் டெல்லியில் போராட்டங்கள், தர்ணாக்கள் ஆகியவற்றை அறிவித்து மாநில முதல்வர்களே அதில் சென்று பங்கேற்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிப்பு, நிதி உரிமைகளை மட்டுப்படுத்துதல், பேரிடர் நிவாரண நிதியை வழங்காமை என பல முக்கியமான, தீவிரமான பிரச்சினைகளை மாநில அரசுகள் முன்வைத்துள்ளன. ஆளும் பா.ஜ.க. அரசு இவற்றுக்கு செவி சாய்க்காமல் இவற்றை பிளவுவாதம், தேசிய நலனுக்கு எதிரானது என்று சித்தரிக்க முயற்சி செய்வது மேலும் சிக்கலை தீவிரப்படுத்துகிறது.

இந்தப் பிரச்சினைகள் முற்றுவதற்குக் காரணம் பாரதீய ஜனதா கட்சியின் தவறான கொள்கை முன்னெடுப்புகளும், ஒன்றிய அரசில் அது ஆட்சி செய்யும் முறையுமதுதான். ஆனால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் குரல் கொடுத்தால் அவை தேசத்தின் ஒற்றுமைக்கு எதிராக இருப்பதாக சித்தரிக்கிறது பா.ஜ.க..

அதாவது, பாஜகதான் பிரச்சினையை உருவாக்குகிறது. அதுதான் மாநிலங்களுடன் பிரச்சினைகளை பேசித் தீர்க்க மறுக்கிறது. வேறு வழியின்றி, மாநில அரசுகள் பொதுவெளியில் போராடினால் அதனை பிளவுவாதம் என சித்தரிக்கிறது. தேச ஒற்றுமைக்கு நெருக்கடி ஏற்படுத்துவது பா.ஜ.க. ஆட்சியின் பிழையான அணுகுமுறைதான் என்ற உண்மையை மூடி மறைக்கிறது.

**ஆட்சியும், அரசியலும்**

**அரசியல் கட்சிகள்தான் பெரும்பான்மை மக்கள் பிரதிநிதிகளைத் தேர்தலில் பெறுவதன் மூலம் ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஆட்சிகளை அமைக்கின்றன. ஆனால் அரசாட்சி என்ற நிர்வாக வடிவம் வேறு. அரசியல் கட்சிகளின் முரண்பாடுகள் வேறு.**


அரசாட்சி என்பது சட்டத்தின் ஆட்சி; அரசியல் கட்சிகளின் முரண்பாடுகள் மக்களாட்சி களத்தில், தேர்தல் களத்தில் தீர்க்கப்பட வேண்டியவை. இந்த நடைமுறைகள் இந்தியாவில் எழுபதாண்டுகளுக்கும் மேலாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

உதாரணமாக, ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் கட்சியும், மாநிலத்தில் ஆட்சி செய்யும் கட்சியும் அரசியலில் எதிரெதிர் அணிகளை சேர்ந்தவையாக, கொள்கை வேறுபாடுகள் கொண்டவையாக இருக்கலாம். ஆனால், மாநில முதல்வர், பிரதமரைச் சென்று சந்திப்பார்: பிரதமர், மாநிலத்துக்கு வருகை புரிந்தால் வரவேற்பார்.

ஒன்றிய அரசு செயலர்களும், மாநில அரசு செயலர்களும் தொடர்ந்து கடிதப் போக்குவரத்தில் இருப்பார்கள். இரண்டு அரசுகளும் இணைந்துதான் மக்கள் நலன்களை பாதுகாக்க வேண்டும், வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். ஏனென்றால் இரண்டு அரசுகளும் பல்வேறு அதிகாரங்களை பகிர்ந்து கொள்கின்றன.

**"டபுள் இஞ்சின் சர்க்கார்" என்ற விபரீத சிந்தனை**

ஒன்றியத்திலும், மாநிலத்திலும் எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும், இரண்டு அரசுகளும் இணைந்துதான் பணி புரிய வேண்டும். அதுவே சட்டத்தின் ஆட்சி. உதாரண




மாக தமிழ்நாட்டில் அறுபத்தேழாம் ஆண்டே தி.மு.க. ஆட்சி உருவானது. ஒன்றியத்தில் காங்கிரஸ் ஆட்சி செய்தது. ஆனால், அது தமிழ்நாட்டின் வளர்ச்சியை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

உண்மையில் சொல்லப்போனால் ஒப்பீட்டு அரசியல் ஆய்வாளர்கள், பிரேர்ணா சிங் உள்ளிட்டவர்கள் எங்கே மாநில அடையாளம் அதிக தன்னுணர்வு கொண்டதாக உள்ளதோ அங்கே வளர்ச்சியும், வாழ்வாதாரம் மேம்படுதலும் அதிகம் இருப்பதாக ஆய்வுகளின் அடிப்படையில் கூறியுள்ளார்கள். தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள் இதற்கான முக்கிய உதாரணங்கள் என கூறியுள்ளனர்.

இந்த வரலாற்று உண்மையை மறுதலிக்கும் விதத்தில் கடந்த பத்தாண்டுகளில் பா.ஜ.க. ஒரு பிரச்சாரத்தை



மேற்கொண்டு வருகிறது. அது என்னவென்றால் மாநிலத்திலும், ஒன்றியத்திலும் ஒரே கட்சி ஆட்சி செய்தால்தான் அது வளர்ச்சிக்கு உதவும் என்ற கருத்தாக்கம்தான்.

அதை அவர்கள் 'டபுள் இஞ்சின் சர்க்கார்' என்று குறிப்பிடுகின்றனர். ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி செய்வதால் மாநிலத்திலும் பா.ஜ.க.வுக்கு வாக்களித்து ஆட்சியில் அமரச் செய்ய வேண்டும். அப்போதுதான் மாநிலம் வளர்ச்சியடையும் என்பதே இதன் உட்கிடக்கை.

**இது மக்களாட்சி தத்துவத்துக்கு முற்றிலும் எதிரானது அல்லவா? ஒரு நல்ல அரசியல் கட்சி என்ன சொல்ல வேண்டும்? மாநிலத்தில் எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் ஒன்றிய அரசு ஒத்துழைப்பை நல்கும் என்றுதானே சொல்ல வேண்டும்? அதற்குப் பதில் பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காவிட்டால் ஒன்றிய பா.ஜ.க. அரசு உங்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவாது என்று சொல்வது அரசியலமைப்பு சட்டத்தை அவமதிப்பதல்லவா? பிறகு ஏன் "டபுள் இஞ்சின் சர்க்கார்" என்ற கருத்தை பரப்புகிறார்கள்?**


**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*




**நிதிப் பகிர்வில் பாரபட்சம்!**

பா.ஜ.க. நாடு முழுவதும் ஒரே கட்சியாக தாங்களே ஆட்சி செய்ய வேண்டும் என்று விரும்புகிறது. அதனால் மாற்றுக் கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு நிதிப் பகிர்வில் பாரபட்சம் காட்டுகிறது. குறிப்பாக மறைமுக வரிகளும் ஜி.எஸ்.டி. என்ற பெயரில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டுக்குப் போன பிறகு, மாநிலங்களின் நிதியாதாரங்கள் மிகவும் குறுகிவிட்டது. அவை பெரும்பாலும் ஒன்றிய அரசின் பகிர்வுகளையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

**தற்போது பரவலாக பகிரப்படும் புள்ளி விவரத்தில் உத்தரப்பிரதேசத்துக்கு மிகப்பெரிய சலுகை காட்டப்படுவதையும், தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதையும் பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள். உத்தரப்பிரதேசம் ஒரு ரூபாய் வரி கொடுத்தால் அதற்கு இரண்டு ரூபாய்க்குமேல் நிதிப்பகிர்வு செய்யப்படுவதும், தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுத்தால் 24 காசுகள்தான் நிதிப் பகிர்வு செய்யப்படுகிறது என்பதும், கர்நாடகாவுக்கோ 16 காசுகள்தான் பகிர்வு செய்யப்படுகிறது என்பதும் சமூக ஊடகங்களில் தீயாகப் பரவுகிறது.**

இதற்குப் பதில் கூறும் சில பா.ஜ.க.காரர்கள், இந்தியா ஒரு குடும்பம் போல என்றும், ஒன்றிய அரசு பலவீனமாக இருக்கும் பிள்ளைக்கு அதிக உணவு அளிப்பதுபோல பின்தங்கிய மாநிலத்திற்கு அதிக நிதி உதவி செய்கிறது என்றும், அதைப் புரிந்துகொள்ளாமல் சுயநல நோக்கில் கேள்வி கேட்கக் கூடாது என்றும் பேசுகின்றனர்.

**ஒரு மக்கள் தொகுதி என்பது என்ன?**

சற்றே விசாலமான பார்வையில் சிந்தித்தால் உலக மக்கள் அனைவரும் மனித குலம்தான். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பது தமிழ் மூதுரை. அப்படியானால் வளர்ந்த நாடுகள் தங்கள் செல்வ வளத்தை வறிய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளுமா? குறைந்தபட்சம் கடன்களையாவது தள்ளுபடி செய்வார்களா?

செய்ய மாட்டார்கள். ஏனெனில் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியும் அதன் தனிப்பட்ட வரலாற்றால், முயற்சிகளால் பெறப்பட்டது என்று கூறுவார்கள். ஏதோ ஓரளவு உதவி செய்யலாமே தவிர, தங்கள் வருமானத்தையெல்லாம் அப்படியே கொடுக்க முடியாது என்றுதான் கூறுவார்கள்.

"பாரத நாடு பழம்பெரும் நாடு; நீரதன் புதல்வர்" என்றெல்லாம் சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஒட்டுமொத்த இந்தியாவும் காலனியாதிக்கத்திற்கு எதிராக போராடிய போது கூறப்பட்டது உண்டு. இந்தியர்கள் அனைவரும் பாரதத் தாயின் புதல்வர்கள் என்றெல்லாம் தேசியவாதம் பேசப்பட்டது உண்மைதான்.

ஆனால், இந்தியா சுதந்திரம் பெறும் தருணம் நெருங்கி வந்த போது, இந்தியாவை ஒற்றை அரசாகக் கட்டமைப்பது கடினம் என்ற உண்மையும் அனைத்துத் தலைவர்களுக்கும் தெரிந்திருந்தது. அதனால்தான் இந்தியாவை மாநில அரசுகளின் ஒன்றியமாக அரசியலமைப்பு சட்டத்தில் எழுதினார்கள். இது ஒரு கூட்டாட்சி அமைப்பு என்பதைத் தெளிவாக வரையறுத்தார்கள்.

குறிப்பாக நிலம் என்பது மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. ஒன்றிய அரசின் நேரடி கட்டுப்பாட்டில்தான் மிகவும் குறைவான நிலப்பகுதிகள்தான் உள்ளன. அவை யூனியன் டெர்ரிடரி, ஒன்றிய நிலப்பகுதி என்று அழைக்கப்படுகின்றன. உதாரணமாக, புதுச்சேரி ஒன்றிய நிலப்பகுதியாகும். புதுச்சேரி மக்கள் தங்களை தனி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.


அதே சமயம் சுதந்திரம் பெறும்போது வரையறுக்கப்பட்ட மாநிலங்களும் முன்னெப்போதும் ஒற்றை அரசாக இருந்தவை அல்ல. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்து நிர்வாக அலகுகளை ஒட்டியே அவை மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அதன்பின், மொழிவாரி மாநிலங்களாகப் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டன.

அவ்வாறு அமைக்கப்பட்ட மாநில மக்கள் கடந்த எழுபதாண்டுகளில் தனித்துவமிக்க மக்கள் தொகுதிகளாக உருவெடுத்துள்ளார்கள் என்பதே நாம் முக்கியமாக கருத வேண்டியது. அவர்களை "தேசிய இனங்கள்" என்று கூற வேண்டியதில்லை. அப்படிக் கூறினால், யார் அந்த அடையாளத்தினுள் வருவார்கள் என்ற கேள்விகள் எழும். ஆனால், அவர்கள் வரலாற்றின் போக்கில் கட்டமைக்கப்பட்டுள்ள மக்கள் தொகுதிகள் என்பதை மறுக்க முடியாது.

**மாநிலங்களின் வளர்ச்சியும், வரலாறும்**

ஒரு குடும்பத்தில் பல குழந்தைகள் இருக்கும்போது, பலவீனமான குழந்தைக்கு, உடல்நலமில்லாத குழந்தைக்கு பெற்றோர் அதிகம் செலவு செய்வது இயல்பானது. யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள். ஆனால், அந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும்போது, ஒரு சில குழந்தைகள் தங்கள் திறமையால் அதிக வருமானம் ஈட்டும் ஆற்றலைப் பெறுவார்கள். சில குழந்தைகள் பொறுப்பின்றி வளர்வதால், சோம்பலால், உற்சாகமின்மையால் வருமானம் ஈட்டும் திறனின்றி இருப்பார்கள்.

அவரவருக்கு திருமணம், குழந்தைகள் என்றான பிறகும், அதிக வருமானம் உள்ளவர்களின் செல்வத்தை எடுத்து, வருமானம் குறைந்தவர்களுக்குக் கொடுக்க



பெற்றோர் முயன்றால் நிச்சயம் முரண்பாடு வரும். யாருமே அதை கண்டிக்கத்தான் செய்வார்கள். அவரவர்கள் முயற்சிக்கு ஏற்ற பலாபலனையே பெற வேண்டும் என்பதே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்திய மாநில அரசுகள் ஒவ்வொன்றும் எழுபதாண்டுகளில் தமக்கே உரிய தனிப்பட்ட வரலாறு கொண்டவை. அந்தந்த மாநிலத்தின் மக்களாட்சி பெற்ற வளர்ச்சிக்கு ஏற்றவாறு, மக்கள்நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் சிறப்பான வளர்ச்சி ஒரு சில மாநிலங்களில் எட்டப்பட்டன. மக்கள் தொகை பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. பொருளாதார வளர்ச்சி சாத்தியமானது.

அப்படியாக அதிக வளர்ச்சியை சாதித்துள்ள மாநில மக்கள் மேலும் தங்கள் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என நினைப்பது இயற்கை. ஏனெனில் வளர்ச்சியில் அவர்கள் அனைவருக்கும் பங்குள்ளது. அந்த நேரத்தில் ஒன்றிய அரசு அந்த மாநிலத்தின் வரி வருவாயை பிறபின் தங்கிய மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பது என்றால் அது வளரும் மாநிலத்தின் வரலாற்றுப் பாதையில், அவர்கள் உரிமைகளில் குறுக்கிடுவதாகும்.

**இந்திய ஒன்றியம் ஒரு வலுவான கூட்டாட்சியாக இருக்க வேண்டுமானால், தனிப்பட்ட மாநிலங்களின் வளர்ச்சிப் போக்கில் ஒன்றியம் தலையிடக் கூடாது. நிதிப்பகிர்வில் அனைவருக்கும் ஒப்புதல் இருப்பதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். அதில் அரசியல் ரீதியான பாரபட்சம் காட்டப்படுவது நிச்சயம் கூட்டாட்சி தத்துவத்தைப் பெரிதும் பலவீனப்படுத்தி விடும். இது ஒட்டுமொத்த இந்தியாவின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.**

**குறுகிய அரசியல் நலனுக்காக செயல்படும் பா.ஜ.க.**

விருப்பு, வெறுப்பின்றி சிந்திக்கும் எவரும், பா.ஜ.க. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு பலவிதமான இடையூறுகள் தருவதை உணர்வார்கள். தமிழகத்துக்கு வெள்ள நிவாரணத்தை தேசியப் பேரிடர் நிதியிலிருந்து விடுவிக்காதது மிகத் துல்லியமான உதாரணம்.

**தமிழகம் வரலாறு காணாத மழை வெள்ளத்தை தலைநகரிலும், பல்வேறு மாவட்டங்களிலும் சந்திக்கிறது. இதனால் ஏற்பட்ட சேதம் மாநிலப் பேரிடர் நிதியாக ஒதுக்கப்ப**



**டும் நிதியைவிட பன்மடங்கு அதிகமானது. அதனால் தேசிய பேரிடர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கச் சொல்லி மாநில அரசு பலமுறை கோரியுள்ளது.**

**நிதி ஒதுக்காமல் இருப்பதுடன், வேண்டுமென்றே மாநிலப் பேரிடர் நிதிப் பங்கீட்டை கொடுத்தாகிவிட்டது என்று மக்களை திசை திருப்பும் நோக்கத்துடன் ஆணவமாகப் பேசினார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அனைவரும், தேசியப் பேரிடர் நிதி என்றால் என்ன என்பதை உடனே விளக்கிச் சொன்னார்கள்.**

**ஆனாலும் ஒன்றிய அரசு அசைந்து கொடுக்கவில்லை. எந்தக் காரணமும் இல்லாமல் தமிழ்நாட்டின் கோரிக்கையை உதாசீனப்படுத்தியுள்ளது ஒன்றிய அரசு. அதற்கான ஒரே காரணம் மாற்றுக் கட்சி ஆட்சி செய்யும் மாநிலம் என்பதால் காட்டப்படும் பாரபட்சம் என்றே அனைவரும் நினைக்கின்றனர்.**

தேர்தல் நேரத்தில் பா.ஜ.க. 'டபுள் இஞ்சின் சர்க்கார்' வந்தால்தான், அதாவது மாநிலத்திலும், ஒன்றியத்திலும் பா.ஜ.க.வே ஆட்சி செய்தால்தான் மாநிலத்துக்கு நல்லது என்று வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்வதையும், அவர்களது நிதிப்பகிர்வு நடவடிக்கைகளையும் இணைத்துப் பார்க்காமல் இருக்க முடியாது.

ஒன்றியத்தை ஒரு பேரரசாகவும், மாநிலங்களை கப்பம்கட்டும்சிற்றரசுகளாகவும்பா.ஜ.க. மாற்றத்துடிக்கிறதோ என்று எண்ணாமல் இருக்க முடியாது. அதற்கேற்றபடியே அவர்கள் நியமிக்கும் ஆளுநர்கள், மாநில அரசின் நிர்வாகத்திலும், மாநில அரசியலிலும் குறுக்கீடு செய்த வண்ணம் இருக்கிறார்கள்.

ஒட்டுமொத்த இந்திய தேசத்தின் நலனில் அக்கறை கொண்டோர், இந்தியாவின் கூட்டாட்சி அரசியலமைப்பே அதன் உயிர்மூச்சு என்பதை அறிவார்கள். பா.ஜ.க. முன்னெடுக்கும் எதேச்சதிகார போக்கு தேசத்தின் எதிர்காலத்தைக் கவலைக்குரியதாக மாற்றுவதைக் கண்டு அவர்கள் கண்டிக்காமல் இருக்க முடியாது.

**வரலாற்று ரீதியாக மக்களாட்சியைப் பண்படுத்தி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை சாதிக்க முற்படும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களைத் தண்டிக்க நினைப்பது ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சிக்கும் பின்னடைவையே ஏற்படுத்தும். இது கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கும், பொதுவாக தென்னிந்தியாவுக்கும் பொருந்தும்.**

மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி; மாநிலங்களின் தனித்துவமிக்க அரசியலே, மக்களாட்சிக் களமே தேசத்தின் அரசியல். மாநில அரசுகளின் ஒன்றியமே இந்திய அரசு. இந்த வரலாற்றின் திசையை மாற்ற முயற்சி செய்வது நல்லதல்ல.

நன்றி : **'மின்னம்பலம்'** இணையதளம்

---

## மதுரை இரயில்வே கோட்ட காலிப் பணியிடங்கள் கேரளாவுக்கு தாரை வார்ப்பு!

# தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய இரயில்வே துறை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, பிப். 13 –

மதுரை இரயில்வே கோட்ட காலி பணியிடங்கள் கேரளாவுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் ஒன்றிய இரயில்வே துறைக்கு கண்டனம் தெரிவித்து 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:–

ரயில்வே துறையில் உள்ள காலி பணியிடங்களில், அந்தந்த மாநிலத்தவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால், இன்று ரயில்வேயில் பல முக்கிய பதவிகள் தொடங்கி, முன்பதிவு கவுன்டர் ஊழியர்கள் வரை கேரள மற்றும் வடஇந்தியர்களே நீக்கமற நிறைந்திருக் கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்களில் பணியாற்றுவோருக்கு 'தமிழே தெரியாது' என்பது அவர் ஒன்றிய அரசின் ஊழியர் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. இந்தச் சூழலில் சமீபத்தில் மதுரை கோட்டத்தில் காணப்படும் காலி பணியிடங்களை நிரப்புவதிலும் கூட கேரளாவுக்கு தாரை வார்த்திருக்கிறது ஒன்றிய அரசின் ரயில்வே நிர்வாகம்.

கடந்த 2ம் தேதி ரயில்வே தேர்வு வாரியங்கள் மூலம் 1.5 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என ரயில்வேத் துறை அறிவிப்பு வெளியிட்டது. இதில் மதுரை கோட்டத்தில் உள்ள 750 காலி பணியிடங்கள் உள்பட தெற்கு ரயில்வேயில் சுமார் 10 ஆயிரம் காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. தெற்கு ரயில்வேயில்,


தினகரன்
பிப்ரவரி 12, 2024 திங்கட்கிழமை
கேரளாவுக்கு தாரைவார்ப்பு
ரயில்வே துறையில் உள்ள காலி பணியிடங்களில், அந்தந்த மாநிலத்தவருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால், இன்று ரயில்வேயில் பல முக்கிய பதவிகள் தொடங்கி, முன்பதிவு கவுன்டர் ஊழியர்கள் வரை கேரள மற்றும் வடஇந்தியர்களே நீக்கமற நிறைந்திருக்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்களில் பணியாற்றுவோருக்கு

சென்னை, சேலம், திருச்சி, மதுரை மற்றும் பாலக்காடு, திருவனந்தபுரம் என மொத்தம் 6 கோட்டங்கள் உள்ளன. சென்னை மற்றும் திருவனந்தபுரத்தில் ரயில்வே தேர்வு வாரியங்களும் செயல்பட்டு வருகின்றன. முன்பு மாநில பிரதிநிதித்துவம் அடிப்படையில் சென்னை, திருச்சி, சேலம் மற்றும் மதுரைக் கோட்டக் காலியிடங்கள், சென்னை தேர்வு வாரியம் மூலமும், பாலக்காடு மற்றும் திருவனந்தபுரம் கோட்ட காலியிடங்கள் திருவனந்தபுரம் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட்டு வந்தன. ஆனால், தற்போது மதுரைக் கோட்ட காலியிடங்களும் கூட திருவனந்த புரம் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட உள்ளது. ரயில்வே நிர்வாகத்தின் இந்த தவறான முடிவால் தமிழக இளைஞர் மற்றும் இளம்பெண்களுக்கு கிடைக்க வேண்டிய 750 காலி பணியிடங்கள் கேரள மாநிலத்திற்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது.

இதனால் கேரளத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமிழகத்தில் பணியமர்த்தப்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. 750 காலி பணியிடங்களை திருவனந்தபுரம் கோட்டம் கையில் திணித்தால், மதுரை கோட்டம் அக்காலத்து திருவிதாங்கூர் சமஸ்தானம் போலவே மாறும் அபாயம் உள்ளது.1990 கால கட்டங்களில் ஒன்றிய ரயில்வே அமைச்சராக ஜாபர் ஷெரீப் இருந்தபோது, மொழிவாரி மாநிலங்களின் அடிப்படையில் ரயில்வே தேர்வு வாரியங்கள் உருவாக்கப்பட்டன.

முன்பு கர்நாடக மாநிலம் ஹூப்ளி கோட்டமானது செகந்திராபாத்தை தலைமையிடமாகக் கொண்ட தெற்கு மத்திய ரயில்வேயின் கீழ் இருந்தது. ஆனால், அந்தக் கோட்டத்தின் காலியிடங்கள், தெற்கு ரயில்வேயில் இருந்த பெங்களூரு தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்பட்டு வந்தது. தமிழகத்திலும் இதுநாள் வரை இருந்த நிலை மாறி, திருவனந்தபுரம் ரயில்வே வாரியத்திற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அது தமிழர்களின் உரிமைகளை பறிப்பதாக அமையும். எனவே ரயில்வே துறை அந்த உத்தரவை திரும்ப பெறுவது நல்லது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




வேளச்சேரி, இராஜலஷ்மி நகர் ,சென்னை மேல்நிலைப்பள்ளி பதினைந்தாம் ஆண்டு விழாவில், கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளரும் சென்னை பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளருமான வேளச்சேரி பெ.மணிமாறன் மாணவர்களுக்கு ,பாராட்டு பத்திரம்,பரிசு பொருட்களை வழங்கினார். விழாவில் தலைமையாசிரியர் திருமதி ரெஜினா, ஆசிரியர்கள், மாவட்டப் பிரதிநிதி சி.முருகன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ந.நீலகண்டன், பகுதிப் பிரதிநிதி அ.வேல்முருகன், தா.மேகநாதன், என்.மணிமாறன், பெலிக்ஸ், ஆர்.ராஜேஷ் , பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



நாடாளுமன்றத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் கழகத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினரான கழக துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அண்ணா அறிவாலயத்தில் நேற்று மாலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., இரவிக்குமார் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச் செல்வன், பனையூர் பாபு, எஸ்.எஸ்.பாலாஜி, ஆளூர் ஷாநவாஸ் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

### தயாரித்துத் தந்த உரையில் சந்தேகம் கேட்டிருப்பின் விளக்கி இருப்போம்!

# ஜனநாயகத்தைக் கொச்சைப்படுத்தவே பேரவையிலிருந்து வெளியேறினார் ஆளுநர்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

**சென்னை. பிப். 13- கொடுத்த உரையில், ஆளுநர் ஆர்.என்.ரவி சந்தேகம் இருப்பதாக கேட்டிருந்தால் அதற்கான விளக்கத்தை சொல்லியிருப்போம். ஜனநாயகத்தைக் கொச்சைப்படுத்தவே சட்டப் பேரவையிலிருந்து கூட்டம் முடிவு முன்னரே அவர் வெளியேறியுள்ளார் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி அளித்துள்ளார்.**

சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரை தொடர்பாக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

ஆளுநர் உரையோடு சட்டமன்ற பேரவை தொடங்கப்படும் என்ற அறிவிப்பு தரப்பட்டு, ஜனநாயகத்தை மதிக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களை முறைப்படி அழைத்து இன்று சட்டமன்றத்தில் முதல் கூட்டத்தைக் கூட்டினார்கள். கேரள ஆளுநர் அவர்கள் இரண்டு வார்த்தைகள் மட்டும் பேசிவிட்டுச் சென்றுவிட்டார். நம்முடைய தமிழ்நாட்டின் ஆளுநர் அவர்கள், ஆளுநர் உரையிலிருந்து சில வார்த்தைகள் பேசாமல் தனது சில சொந்த கருத்துக்களை பேசிவிட்டு அமர்ந்துவிட்டார். தேசிய கீதம் இசைக்கப்படவில்லை என்றார். ஆனால், மரபுப்படி முதலில் தமிழ்த் தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் இசைக்கப்படும்.

இதனைக் கடந்த ஆண்டிலேயே நம்முடைய சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தென் மாநிலங்களில் இருக்கக்கூடிய ஆளுநர்களின் திருவிளையாடல்கள் எல்லாம் அங்கிருக்கக்கூடிய அரசாங்கங்களுக்கு எதிராக அமைந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் இந்திய மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நிச்சயமாக ஆளுநரின் நடவடிக்கைகள், வட மாநிலங்களிலும் இந்தியா கூட்டணிக்கு வலிமையை உருவாக்கும் வண்ணம் இன்று அவர் நடந்து கொண்டிருக்கிறார். ஜனநாயகத்தை கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறார். அவருக்கு கொடுத்த உரையில் சந்தேகம் ஏதேனும் இருந்தால் கேட்கலாம். உரையில், 'உண்மைக்கு மாறாக இருக்கிறது, சரியாக இல்லை' என்று அவர் கூறினால் அதற்கு விளக்கம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தமிழ்நாடு அனைத்துவிதத்திலும் முதலிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை புள்ளிவிவரங்களோடு நாங்கள் சொல்லுகின்றபோது, அதை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவமும், அதனைத் தாங்கிக் கொள்கிற சக்தியும் ஆளுநருக்கு இல்லை என்பதைத் தான் இது காட்டுகிறது. தான் ஒரு மாநிலத்தின் தலைவராக, தலைமைப் பொறுப்பில் இருக்கக்கூடிய ஒரு மாநிலம், இந்திய ஒன்றியத்தில் பல்வேறு துறைகளில் முன்னேறி இருக்கிறது, தேசிய அளவில், தமிழ்நாட்டின் GDP உயர்ந்திருக்கிறது, விளையாட்டுப் போட்டிகளில் ஐந்தாவது இடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறோம், பல துறைகளில் முதலிடத்திற்கு வந்துள்ளோம், இவற்றையெல்லாம் ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

அதை ஏற்றுக்கொள்ளவோ, படிக்கவோ மனமில்லாமல், இந்த அரசின் சாதனைகளை தான் வாசிக்கவிருப்பமில்லாமல், பொய்யான கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

தமிழகம் முதன்மையான இடத்தில் உள்ளது என்பதை புள்ளிவிவரத்தோடு நாங்கள் சொல்வதற்கு தயாராக இருக்கின்றோம். ஆளுநர் அவர்கள் விளக்கம் கேட்டிருந்தால் நிச்சயமாகக் கொடுத்திருப்போம். ஆனால், அவர் ஏதும் விளக்கங்கள் கேட்கவில்லை. அதனால்தான் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இந்த உரை எனது மனசாட்சிக்கு விரோதமாக இருக்கிறது என்று சொல்லி ஆளுநர் வராமல் இருந்திருக்கலாம். ஆனால், ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஆளுநர் என்ற அந்தப் பதவிக்கு ஜனநாயகத்தில நாம் உரிய மரியாதை தரவேண்டும் என்று மதிப்புக் கொடுக்கின்ற முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற காரணத்தினால் தான், இன்று நடைபெற்ற இத்தனை நிகழ்வுகளையும்



நாங்கள் தாங்கிக் கொண்டிருக்கிறோம்.

தேசிய கீதத்தை வாசிக்க வேண்டுமென்று சொல்கின்ற ஆளுநர் நம்முடைய சட்டப்பேரவைத் தலைவர் உரையை முழுவதும் படிக்கின்றவரை அங்கேயே பொறுமையோடு இருந்தவர் இன்னும் இரண்டு நிமிடங்கள் இருந்திருக்கலாம், பேரவைத் தலைவர் தமிழில் பேசுவது என்னவென்று அவருக்குத் தெரியாது, ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள் பேசும்போது, திடீரென்று ஆளுநர் எழுந்து சென்றுவிட்டார். இரண்டு நிமிடம் பொறுத்திருந்து, இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்பு உரிய மரியாதையோடு அவர் சென்றிருக்க வேண்டும். ஆனால், அவர் மரியாதையை அவரே தவறவிடுகிறார்.

**கேள்வி** - சாவர்கர், கோட்சே குறித்து சட்டமன்றப் பேரவை தலைவர் பேசியது தொடர்பாக..

**சட்டத்துறை அமைச்சர் ரகுபதி:-** அவை குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதாக சபாநாயகர் அவர்களே தெரிவித்துள்ளார்.

**கேள்வி** - அடுத்தகட்டமாக ஆளுநர் உரை இல்லாமல், தெலுங்கானா அரசு செயல்பட்டதுபோல...

**சட்டத்துறை அமைச்சர்** - தெலுங்கானா அரசு ஆளுநர் உரை இல்லாமல் தொடங்கியது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நாம் ஆளுநர் அவர்களுக்கு மரியாதை கொடுத்து ஆளுநர் உரையோடு தொடங்க வேண்டும் என்றும், ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கை உள்ளவர்கள் என்றும், எனவே அவ்வாறு தொடங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதன் அடிப்படையில் ஆளுநர் உரையோடு தொடங்கப்பட்டது. ஜனநாயகத்திற்கு எதிராக செல்கின்றவர் அல்ல, அதை மதிக்கின்றவர். ஆளுநர் பதவிக்கு மரியாதை தருகின்றவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

**கேள்வி** - குடியரசு நாள் தேநீர் விருந்தில் கலந்து கொண்டு சுமூகமான உறவு ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது, மீண்டும் இது போன்ற சூழ்நிலை உருவாகியுள்ளதே...

**சட்டத்துறை அமைச்சர்** - சுமூகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று தான் நாங்கள் நினைத்தோம். ஆனால் ஆளுநர்கள் எல்லாம் ரிமோட்கன்ட்ரோலால் இயக்கப்படுகிறார்கள். ரிமோட்டை இயக்குபவர்கள் எப்படி இயக்குகிறார்களோ அதன் அடிப்படையில் தான் இயங்குகிறார்கள். இவர்கள் சுயமாக இயங்க முடியாது.

**கேள்வி** - எங்கள் ஆட்சியில் இதுபோன்ற செயல்கள் நடைபெறவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறாரே..

**சட்டத்துறை அமைச்சர்**- அவர்கள் ஆட்சியில் புரட்சித் தலைவி அம்மா என்று பல இடங்களில் பல முறை இடம்பெற்றது, அதை எல்லாம் ஆளுநர்கள் வாசித்தார்கள். ஆனால் இந்த ஆளுநர் உரையை படித்து பாருங்கள், இந்த அரசு என்று தான் இருக்கும், இரண்டு மூன்று இடங்களில் மட்டும் தான் முதலமைச்சர் அவர்களின் பெயரே இருக்கும். அந்த அளவிற்கு எளிமையாக, விளம்பரம் இல்லாமல் நாங்கள் செய்கின்ற சாதனைகள் மக்களை சென்றடையும் என்ற நம்பிக்கையோடு, பெயருக்கு முக்கியத்துவம், விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சாதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த ஆளுநர் உரை தயாரிக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் இந்த உரையை வாசிக்க ஆளுநருக்கு மனமில்லை.

**கேள்வி** - உச்சநீதிமன்றம் ஆளுநரும், முதலமைச்சரும் கலந்து பேசி முரண்களை கலைந்து, சுமூகமாக செயலாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியது குறித்து...

**சட்டத்துறை அமைச்சர்** - இந்த நிகழ்வை பார்த்த பிறகு, உச்சநீதிமன்றம் என்ன முடிவுக்கு வரும் என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். நாங்கள் மரியாதையோடு அழைத்தோம். அந்த மரியாதையை அவர் காப்பாற்றிக் கொள்ளவில்லை என்பதை உச்சநீதிமன்றம் தெரிந்து கொள்ளும். எங்கள் வழக்கறிஞர்கள் அதை எடுத்துரைப்பார்கள்.

**கேள்வி** - இன்றைய நிகழ்வு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் கருத்து குறித்து...

**சட்டத்துறை அமைச்சர்**- இன்று சட்டமன்றத்தில் நடந்த நிகழ்வு குறித்தும் ஆளுநர் பற்றியும் எதிர்க்கட்சி தலைவர் ஏதாவது விமர்சனம் செய்தாரா. ஏன் என்றால் அவரால் முடியாது. கொத்தடிமை. விமர்சனம் செய்தால் அடுத்த நாள் அவர்களுக்கு ரைடு வரும். அதனால் பயந்து கொண்டுதான் பேட்டி கொடுக்க முடியும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பயந்து கொண்டு பேட்டி கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. அவர்கள் அடிமைகள் அதனால் அவர்கள் அப்படி தான் பேட்டி கொடுப்பார்கள். ஆளுநரின் நடவடிக்கை கண்டித்து அவர் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. பா.ஜ.க. குறித்தும், ஆளுநர் குறித்தும் சொல்லமாட்டார்கள். ஆளுநர் உரையில் அரசு என்ன செய்திருக்கிறது என்பதை சொல்லியிருக்கிறோம். அடுத்த வாரம் பட்ஜெட் வருகிறது. அதில் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை தெரிவிப்போம். நாங்கள் அதிகமாக செய்துள்ளதை ஆளுநர் உரையில் தான் எடுத்து சொல்லமுடியும்.

**கேள்வி** - விதி 17 தளர்த்தி தீர்மானம் கொண்டுவந்த போது அ.தி.மு.க. புறக்கணித்து, வெளிநடப்பு செய்யவில்லை, சென்ற முறையோடு ஒப்படும்போது, ஏதோ மாற்றம் வந்திருக்கிறதா...

**சட்டத்துறை அமைச்சர்** - அவர்கள் அதை புரிந்து கொள்வதற்குள் விதி 17 திருத்தம் முடிந்துவிட்டது, அதனால் அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

கேள்வி - ஆளுநர், முதலமைச்சர் உறவு தொடர்பாக உச்சநீதிமன்ற வழக்கு குறித்து..

**சட்டத்துறை அமைச்சர்**- உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீங்கள் சமரமாக செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். முதலமைச்சர் அவர்களும் அதற்கு தயாராக தான் இருந்தார். ஆளுநரை சென்று சந்தித்து, பேசினார். சுமூகமான உறவு வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இன்றைக்கு திரும்பவும் என்ன நடந்தது என்பதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்.

கேள்வி - தமிழ்நாடு அரசிற்கும் ஆளுநருக்கும் உறவு சரியில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிடுவது குறித்து...

**சட்டத்துறை அமைச்சர்**- அவர்களுக்கு டில்லி அன்று சாதகமாக இருந்தது. நினைத்ததை சாதித்து கொண்டு இருந்தார்கள். ஆனால் எங்களை பொறுத்தவரைக்கும், ஒன்றிய அரசிற்கு எதிராக இருக்கின்ற காரணத்தினால், சாதகமான சூழ்நிலை இல்லை என்றாலும்கூட, முதலமைச்சர் அவர்கள் ஆளுநரோடு அனுசரித்து செல்ல வேண்டும் என்று நினைத்தார், ஆனால் ஆளுநர் போக விரும்பவில்லை. அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும்.

தமிழகத்தில் தான் அமைதி நிலவுகின்றது, மத நல்லிணக்கம் நிலவுகின்றது. தமிழ்நாடு அமைதி பூங்காவாக திகழ்கிறது. எனவே, வெளிநாட்டிலிருந்து தொழில் முதலீட்டாளர்கள் அதிக அளவில் வருகின்ற முதல் மாநிலமாக தமிழ்நாட்டை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கின்றார் என்றால், அதற்கு இங்கு நிலவுகின்ற அமைதியான சூழ்நிலை தான் காரணம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

---

### ஜனநாயக மாண்புகளைச் சிதைத்து

# அரசியல் ஆதாயம் தேடுகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம்!

சென்னை, பிப். 13 - ஜனநாயக மரபுகளை சிதைத்து மலிவான செயலில் ஈடுபட்டு அரசியல் ஆதாயம் தேடுகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி என்று மாநில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: கடமைப் பொறுப்பை நிறைவேற்றாத ஆளுநர் மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி முறையில் ஆண்டு தோறும் சட்டமன்றப் பேரவையில் உரையாற்றி கூட்டத் தொடரை தொடங்கி வைப்பது அரசியலமைப்பு சட்டப்படி ஆளுநரின் கடமைப் பொறுப்பாகும். வரும் ஆண்டில் (2024 - 25) மக்கள் பிரச்சினைகள் மீதும், நிதி நிர்வாக முறையிலும் அரசின் கொள்கை நிலை என்ன? எந்த இலக்கை நோக்கி அரசு பயணிக்கும்?



என்பது போன்ற அரசின் கொள்கை நிலையை பேரவையின் கவனத்துக்கு கொண்டு, அதன் மீது எதிர் தரப்பின் கருத்துக்களை அறிவது என்பது அரசியலமைப்பு சட்டம் ஆளுநருக்கு வழங்கியுள்ள கடமையாகும்.

பேரவையில் உரையாற்றும் ஆளுநருக்கு பேரவையின் வாயிலாக "நன்றி தெரிவிக்கும்" தீர்மானம் நிறைவேற்றி அவருக்கு அனுப்புவது அவை வழியாக கடைப்பிடித்து வரும் மரபாகும். இந்த வழக்காறுகளுக்கும், மரபுகளுக்கும் மாறாக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி கடந்த ஆண்டு, நடந்து கொண்டது போலவே இந்த ஆண்டும் அவையில் மரபுகளை நிராகரித்து, மக்கள் பிரதிநிதிகள் உணர்வுகளையும் புறக்கணித்துள்ளார்.

கூட்டத் தொடக்கத்தில் தமிழ் தாய் வாழ்த்தும், நிகழ்ச்சி நிறைவில் நாட்டுப் பண் இடம் பெறுவதும் நீண்ட பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் நல் மரபாகும். இதற்கு மாறாக ஆளுநர் ஆர்.என்.ரவி, அரசுடன் இணைந்து தயாரித்த உரையை. வாசித்து பேரவைக்கு வழங்க மறுத்து அமர்ந்து விட்டதும், நாட்டுப் பண் இசைக்கும் முன்பு வெளியேறியதும் ஜனநாயக மாண்புகளை சிதைத்து, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலில் ஈடுபட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஊடகங்களின் குரலை மவுனமாக்கும்

# பா.ஜ.க.வின் செயலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, பிப். 13 - பத்திரிகையாளர்களுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர். பதிவு செய்வதன் மூலம் அவர்களது செயல்பாடுகளை மௌனமாக்க ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள். பா.ஜ.க.வின். செயலை ஒதுபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் பிரபல பத்திரிகையாளர் நிகில் வாக்லே




பா.ஜ.க. குண்டர்களால் தாக்கப்பட்டார். பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானிக்கு ஒன்றிய அரசு பாரத ரத்னா விருது வழங்குவதாக அறிவித்தது. இந்த அறிவிப்புக்கு நாடு முழுவதும் பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அத்வானிக்கு விருது அறிவிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து புனேயில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுவதற்காக மனித உரிமை வழக்கறிஞர் அசீம் சரோட், சமூக ஆர்வலர் விஸ்வம்பர் சௌத்ரி ஆகியோருடன் சென்று கொண்டிருந்த போது நிகில் வாக்லே தாக்கப்பட்டார். அவரது கார் கண்ணாடிகளும் சேதப்படுத்தப்பட்டன. காவல்துறை பாதுகாப்புடன் சென்ற போதும் இவர்கள்தாக்கப்பட்டனர்.

பா.ஜ.க.வில் மோடியால் ஓரங்கட்டப்பட்ட எல்.கே. அத்வானிக்கு ஆட்சியை விட்டு போகும் தருவாயில் உள் நோக்கத்துடன் மோடி, பாரத ரத்னா விருதை அறிவித்துள்ளார். இதை எதிர்த்து கருத்துச் சொல்ல அனைவருக்கும் உரிமை உண்டு. இந்திய அரசியலமைப்பின் பிரிவு 9(1)(ஏ) அனைத்து குடிமக்களுக்கும் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை உத்தர வாதப்படுத்தியுள்ளது. இதில் அரசியல் விமர்சனம் மற்றும் கருத்துக்களும் அடங்கும். பத்திரிகை சுதந்திரத்தின் அடிப்படையில் தான் ஆரோக்கியமான ஜனநாயகம் கட்டமைக்கப்படுகிறது.

வாக்லே மீது தாக்குதல் நடைபெறுவது இது முதல்முறையல்ல. ஏற்கனவே ஆறு முறை அவர் தாக்கப்பட்டுள்ளார். இது ஏழாவது தாக்குதலாகும். ஆனால், பா.ஜ.க. உள்ளூர் தலைவர் அளித்த புகாரின் பேரில் வாக்லே மீதே காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டில் ஏழு பெண் பத்திரிகையாளர்கள் உட்பட மொத்தம் 194 பத்திரிகையாளர்கள் இந்தியா முழுவதும் குறி வைக்கப்பட்டனர்.

பா.ஜ.க. ஆட்சியில் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் பல மடங்கு அதிகரித்துள்ளது. புலனாய்வு செய்து எதையாவது பத்திரிகையாளர்கள் கண்டுபிடித்து உண்மையை வெளியே சொல்லி விட்டால் அவர்கள் மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

தில்லியில் பணிபுரியும் கேரளத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் சித்திக் கப்பான் உள்பட சாதாரண பத்திரிகையாளர்கள் இந்த வழக்கை நடத்துவதற்கே தங்களது காலத்தைக் கழிக்கவேண்டிய நிலையில் உள்ளனர். இதனால்தான் உலக பத்திரிகை சுதந்திரக் குறியீட்டில் இந்தியா 150ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர். பதிவு செய்வதன் மூலம் அவர்களது செயல்பாடுகளை மௌனமாக்க ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள். இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தாலுகா வீடூர் அணையில் இருந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பாசன வசதிக்காக தண்ணீரை திறந்து வைத்தார். உடன் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார், பொதுப்பணித்துறை நீர்வளம் செயற்பொறியாளர் சோபனா, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன்,உதவி செயற் பொறியாளர் ரமேஷ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.




வேலூர் மேல்மொணவூரில் மொத்த வாணிப எஸ்டேட் வணிக வளாகம் அடிக்கல் நாட்டு விழா வேலூர் அரிசி மண்டி தலைவர் தர்மராஜ் தலைமையில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர்மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்கள். நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர்எம்.சுனில் குமார், ஒன்றிய குழு தலைவர் அமுதா,ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், நேதாஜி காய் – கனி வியாபாரிகள் சங்க தலைவர் பி.வாசு, மற்றும் கழக நிர்வாகிகள், வணிகர் சங்க தலைவர்கள், சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



நாடாளுமன்றத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் கழகத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினரான துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அண்ணா அறிவாலயத்தில் நேற்று மாலை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முஹம்மது அபுபக்கர், மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ.ஷாஜஹான்,, தேசிய செயலாளர் எச்.அப்துல் பாஸித், மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் ஆடுதுறை ஏ.எம்.ஷாஜஹான் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.



நாடாளுமன்றத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் கழகத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவினரான துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் அண்ணா அறிவாலயத்தில் நேற்று மாலை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ., ஆர்.சக்தி நடராஜன், ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி., கே.நித்தியானந்தம், எஸ்.சூரியமூர்த்தி, ஜி.அசோகன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

### தமிழ் வளர்ச்சித் துறை சார்பில்

# ஐந்து தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளும் நாட்டுடைமை!

## மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையை - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, பிப்.13-

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 174 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 13.97 கோடி நூலுரிமைத் தொகை தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 140 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு நாளிதுவரை 17 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரியையர்களுக்கு ரூ.2.50 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களால் இலக்கிய இலக்கணப் படைப்புக்களாகவும் ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் மறைந்த தமிழறிஞர்களான இலக்கியத் திறனாய்வர் இராவ் சாகேப் கு.கோதண்டபாணி பிள்ளை அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (33 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களான திருமதி ஜா.ரா. புனிதவதி, கோவிந்தசுவாமிநாதன் அவர்களுக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், பேராசிரியர் முனைவர் இரா.மோகன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (88 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் வாழ்விணையரான பேராசிரியர் நிர்மலா மோகன் அவர்களுக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், சொல்லாக்க அறிஞர்

கோ.முத்துப்பிள்ளை அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (8 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களான பா.எழிலரசு, பா.தமிழரசு, திருமதி த.அறிவரசி, திருமதி கோ.ஞானாம்பாள், திருமதி தே.தங்கம் ஆகியோருக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், இதழியல் வல்லுநர் மா.சு.சம்பந்தன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (10 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்களான மா.ச.இளங்கோவன், மா.ச.மணிவண்ணன், மா.ச.உதயகுமார், மா.ச வெற்றிவேல், மா.ச.செல்வகுமார் ஆகியோருக்கு நூலுரிமைக் கான தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையும், மகளிர் படைப்பாளராகிய திருமதி அம்சவேணி அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (36 நூல்கள்) நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் வாழ்விணையரான முனைவர் கோ.பெரியண்ணன் அவர்களுக்கு நூலுரிமைக்கான தொகை ரூபாய் ஐந்து இலட்சத்திற்கான காசோலையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இல.சுப்பிரமணியன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை அருள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

### முதிர்வடைந்த கடன் பத்திரங்களுக்கான

# முதிர்வைத் தொகை பெறுவதற்கான விதிமுறைகள்!

## அரசு நிதித்துறை முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, பிப். 13-

அரசு கடன் பத்திரங்களுக்கான முதிர்வைத் தொகை பெறுவதற்கான விதிமுறைகளை அரசு நிதித் துறை முதன்மைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

தமிழ்நாடு அரசு நிதித் துறையின் 07.03.2014 ஆம் நாளிட்ட 262(L)/W&MII/2014 அறிவிக்கையின் வரையறைகளின்படி வழங்கப்பட்ட 9.65% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2024 நிலுவைத் தொகையானது 12.3.2024 அன்று 11.3.2024 ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது.

யாதொரு மாநில அரசால், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகங்களால், முந்தைய அலுவலகப்பணிநாளில் திருப்பிச்செலுத்தப்படும். 12.03.2024 ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3) ஆம் துணை ஒழுங்குமுறை விதிகளின்படி, பொது துணை பேரேட்டுப் படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டுக் கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணுப் பதிவுமூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும்.

கடன் பத்திரங்களைப் பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரங்களை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள வங்கிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வங்கிக் கணக்கின் உரிய விவரங்களை அளிக்க வேண்டும்.

இருப்பினும், வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத/மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, '9.65% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன், 2024' தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், கீழேகுறிப்பிடப்பட்டுள்ளவாறு உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

**"சான்றிதழுக்குரிய அசல் தொகை பெறப்பட்டது"**

பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்றில் கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்பவேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்கின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

இவ்வாறு - நிதித்துறை அரசு முதன்மைச் செயலாளர் தெரிவிததுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி நகராட்சி. வளாகத்தில் சிறு தொழில் வியாபாரிகளுக்கு சாலையோர கடைகள் வழங்கும் நிகழ்ச்சி நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமையில் நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு விழாவை துவக்கி வைத்து தலா ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் 30 கடைகளை வியாபாரிகளிடம் வழங்கினார். உடன் நகரக் கழகச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர் மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதர், நகராட்சி ஆணையர் லதா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், நகரக் கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் நகராட்சி ஊழியர்கள் உள்ளனர்.

### த.ஜெயக்குமார் வரவேற்புரை! ச.பிரபு தலைமை! கழக இளைஞர் அணி மாநாடு - அரசின் சாதனைகளை விளக்கி

# பம்மல் வடக்குப் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - சைதை சாதிக் சிறப்புரை!

தாம்பரம், பிப். 13-

தாம்பரம் மாநகர தி.மு.க. இளைஞர் அணி - பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டு தீர்மானங்களையும் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13.2.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணியளவில் அனகாபுத்தூர், குளக்கரை தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிப் பொருளாளர் ச.பிரபு தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

ப.அன்பழகன், செ.சுதாகர், எம்.சுரேஷ்குமார், ஜெ.ஜெயகாந்த், டி. ரவிக்குமார், ஒய்.என்.ராஜேஷ், த.சரவணன், ஆர்.யுவராஜ், எம்.வினோத்குமார், டி. ஐயனார், எம்.சுரேஷ், சி.பி.வினோத்குமார், எஸ்.சுரேஷ்குமார், பி. சரத்குமார், மோ.சரவணன், ஜெ.சாந்தகுமார், எஸ். அருண்பாண்டி, டி.எம்.புருஷோத்தமன், எஸ். பாலாஜி, எஸ்.ராஜேஷ், எம்.மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தெற்கு பகுதிச் செயலாளர் வே. கருணாநிதி, இரா.நரேஷ் கண்ணா, எஸ்.கே.நெப்போலியன், கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, கே.சந்திரன், மு. ஸ்ரீதர், க.ஜெயசீலன், பப்பிதா, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், க.சுந்தரமூர்த்தி, இரா.பாபுஜி, மு. நித்தியானந்தம், வி. ரவிச்சந்திரன், பி.கே.ஏ. சத்தியபிரபு, கோ.ஜானகிராமன், ஜெ.இன்சமாம்,

க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ. பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜய குமார், சித்ரா தமிழ் குமரன், சண்முக சுந்தரி ஜெயக்குமார், சித்ராதேவி முரளிதரன், எஸ்.விமலா, கே.ரூத்மேரி, ஐ.பாத்திமா, ஐசக், எம்.கலையரசி, பி. வனராஜி, ஆர்.வேளாங்கன்னி, டி.சகுந்தலா, ஏ. ஜெயந்தி, எம்.யசோதா, வி. அமிர்தவள்ளி, எம்.செல்வி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், முன்னாள் ஊராட்சி மன்ற பிரதிநிதிகள், அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஏ.செந்தில்குமார், எம். புவனேஸ்வரி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டம் - ஓசூரில்

# நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் மனுக்களைப் பெற்றனர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்!

கிருஷ்ணகிரி, பிப்.13-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 2024 நாடாளுமன்றத் தேர்தலில் முன்னிட்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக கழகத் துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் 11 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது இந்த குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களிடம் கருத்துக்களை கேட்டு வருகிறார்கள். அதன்படி கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு, தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 2024 நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்து கேட்பு கூட்டம் ஓசூர் ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறது.

தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கருத்துக் கேட்பு கூட்டம் கழகத் துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறது. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு உறுப்பினர்கள் சட்டமன்ற கொறடா, மாநில வர்த்தக அணி துணை தலைவர் கோவி. செழியன் அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., சென்னை மேயர் திருமதி. பிரியா உள்ளிட்டோர் பங்கேற்று தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினரிடம் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல் கட்சியினர், பொதுமக்கள் மனுக்களை கொடுத்தனர்.

இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., செய்திருந்தார். இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., தர்மபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்பிரமணி, தர்மபுரி மேற்கு மாவட்ட செயலாளர் பழனியப்பன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அமைப்புசாரா தொழிலாளர்கள், மகளிர் சுய உதவி குழு பிரதிநிதிகள், சிறு குறு நிறுவனங்களின் உரிமையாளர்கள், பெண்கள் நல அமைப்பு நிர்வாகிகள், சமூக நல அமைப்புகள், நகர் நல சங்கத்தின் நிர்வாகிகள், ஓட்டல் உரிமையாளர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மாற்றுத் திறனாளிகள், அமைப்பு நிர்வாகிகள், வாகன ஓட்டுனர்கள், கழக நிர்வாகிகள், உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களுடன் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி., நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தமிழக முதல்வர் அவர்கள் எங்களை பணித்திருப்பதை தொடர்ந்து நாங்கள் ஒவ்வொரு மாவட்டமாக கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த சங்கங்கள் பொதுமக்களை நேரில் சந்தித்து அவருடைய கோரிக்கைகளை மனுவாக பெற்று வருகிறோம். இன்று கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களிடம் கோரிக்கைகளை பெற வந்திருக்கிறோம் இந்த பகுதியில் உள்ள தொழிலாளர்கள் விவசாயிகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் கோரிக்கைகளை எங்களிடம் கொடுத்துள்ளார்கள். இன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த பகுதியில் உள்ள மக்கள் அதிகப்படியாக ஜி.எஸ்.டி.யில் இருக்கிற பிரச்சினைகளை எடுத்து கூறியிருக்கிறார்கள். இங்கே சிறு, குறு தொழில் செய்பவர்களும், வியாபாரிகளும் இது குறித்து எடுத்துக் கூறியருக்கிறார்கள் இது அனைத்தையும் கொண்டு சென்று நாங்கள் தேர்தல் அறிக்கையாக தயார் செய்து முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க உள்ளோம். அவர்கள் அதனை தேர்தல் அறிக்கையாக வெளியிடுவார். தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்ற தொகுதியுடன் புதுச்சேரியையும் சேர்த்து 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி அமோக வெற்றி பெறும் அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மேலும் தூத்துக்குடி பகுதியில் மிகப் பெரிய அளவில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. பாலங்கள், சாலைகள் தற்காலமாக சரி செய்யப்பட்டுள்ளன நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஆயத்த பணிகள் நடக்கிறது. தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டத்தில் சேதமான சாலைகள் பாலங்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டுள்ளது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பைசா கூட மத்திய அரசிடம் இருந்து நிவாரண நிதி வரவில்லை ஆனால் மக்களுக்கான நிவாரண உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார் பாசிச ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் நிதி ஒதுக்கீடு இன்றி பாதிக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு மட்டுமின்றி பல மாநிலங்கள் முதல்வர்கள் களத்திற்கு வந்து போராட வேண்டிய நிலை உள்ளது என தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தாமரைச் செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன் ,மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன் , அரியப்பன், மாநில மகளிர் உரிமை ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் பி.எஸ்.

சீனிவாசன், கிருஷ்ணகிரி கிழக்கு,மேற்கு ,தர்மபுரி கிழக்கு, மேற்கு மாவட்டத்தை சார்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள்,

நகராட்சி பேரூராட்சி, ஊராட்சி தலைவர்கள், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



சென்னை–தலைமைச் செயலகத்தில், நேற்று (12.02.2024) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இலக்கிய இலக்கணப் படைப்புகளாகவும், ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த ஐந்து தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் மறைந்த தமிழறிஞர்களான சாகேப் கு.கோதண்டபாணி பிள்ளை, பேராசிரியர் முனைவர் இரா. மோகன், அறிஞர் கோ.முத்துப்பிள்ளை, இதழியல் வல்லுநர் மா.சு. சம்பந்தன், மகளிர் படைப்பாளராகிய திருமதி அம்சவேணி ஆகியோரது குடும்பத்தார்களுக்கு நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் ஆகியோர் உடனிருந்தனர்.




தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் இயங்கும் சமூகப் பாதுகாப்புத்துறை, யூனிசெப் (UNICEF) மற்றும் சியாப் (SIAPP) அமைப்பும் இணைந்து குழந்தைகள் பெற்றோருடன் ஒரு குடும்பமாக வளர்வதன் முக்கியத்துவத்தை பற்றியும், வளர்ப்புப் பராமரிப்பு சேவையைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் குடும்ப அமைப்பில் வளர்வதை உறுதிப்படுத்த உருவாக்கப்பட்டுள்ள ”விதை மற்றும் ”நிழல் ஆகிய இரு குறும்படங்களை வெளியிட்டார். இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசுச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர் திருமதி இரா.சீதாலட்சுமி, இணை இயக்குநர் .தனசேகர பாண்டியன் மற்றும் சியாப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் முனைவர் சியாமளா நடராஜ், திட்ட இயக்குநர் முனைவர் கே.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கொரோனா காலத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்த

# 977 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, பிப்.13-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.02.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் தற்காலி அடிப்படையில் பணிபுரிந்த 977 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கி விழா பேரூரையாற்றினார்.

அவை பின்வருமாறு :

977 தற்காலிக செவிலியர்களுக்கு பணிநியமன ஆணை

2020ம் ஆண்டு கோவிட்19 பெருந்தொற்று காலத்தில் நோயாளிகளின் நலன்கருதி தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் கோவிட் தனிமைப்படுத்தும் மையங்களில் 4,570 செவிலியர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது. இப்பணியிடங்களை நிரப்புவதற்கு சுமார் 8,136 செவிலியர்களுக்கு தற்காலிக பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இதில் 3,780 செவிலியர்கள் மட்டும் பெருந்தொற்று காலத்தில் தற்காலிக செவிலியர்களாக ஒப்பந்த அடிப்படையில் பணியில் இணைந்தனர். பணியில் இணைந்த செவிலியர்களில் 3,184 செவிலியர்கள் மட்டும் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர்.

கோவிட் 19 பெருந்தொற்று படிப்படியாக குறைந்த காரணத்தினால் கடந்த 31.03.2022 மற்றும் 31.12.2022 ஆகிய தேதிகளில் பணிவிடுவிப்பு செய்யப்பட்ட ஒப்பந்த செவிலியர்கள் மீண்டும் தங்களுக்கு பணிவழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். மேலும் இவ்வழக்கில் உயர்நீதிமன்றம் மனுதாரர்களான 977 பணிவிடுவிப்பு செய்யப்பட்ட தற்காலிக செவிலியர்களுக்கு மீண்டும் பணிநியமனம் வழங்கிட உத்தரவிடப்பட்டது. தற்போது மேற்கண்ட செவிலியர்களுக்கு பணிநியமனம் செய்ய தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே மனுதாரர்களான 977 பணிவிடுவிப்பு செய்யப்பட்ட தற்காலிக செவிலியர்களுக்கு மீண்டும் பணிநியமனம் வழங்கிட ஏதுவாக 10.02.2024 அன்று சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் விருப்பப்பட்ட பணியிடங்களை தேர்வு செய்ய கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ பணியாளர்கள் நலனுக்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கொரோனா காலத்தில் தற்காலிகமாக பணிபுரிந்த மருத்தவர் மற்றும் செவிலியர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஊக்க மதிப்பெண் வழங்கப்பட்டு அரசு பணியில் சேர முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், கொரோனாவில் பணிபுரிந்த மருத்துவர் உள்ளிட்ட 1,05,168 மருத்துவ பணியாளர்களுக்கு ரூ.197 கோடி செலவில் ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு, மருத்துவத்துறையில் உள்ள பல்வேறு காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 1,884 பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 06.02.2024 அன்று மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,021 புதிய மருத்துவர்களுக்கு பணிநியம ஆணை வழங்கப்பட்டுள்ளது. மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் விரைவில் கிராம சுகாதார செவிலியர்கள் - 2,250, மருந்தாளுநர்கள் 986, சுகாதார ஆய்வாளர்கள் 1,076 மற்றும் மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்கள் 798 என 5,100 பணியிடங்கள் நிரப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 1,257 மருத்துவ பணியிடங்களுக்கான அறிவிப்பாணை வெளியிடப்பட உள்ளன. மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடமாற்றங்களுக்கு வெளிப்படையாக கலந்தாய்வு நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் அரசாணை எண் 293 & 354 மூலம் அரசு மருத்துவர்கள் ஊக்கப்படிகளுடன் கூடிய பணப்பலன் தருவதில் இருந்த பாரபட்சங்கள் நீக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது. மருத்துவ சேமநல நிதி கடந்த அரசில் ரூ.50 இலட்சமாக இருந்தது, அது தற்போது முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு ரூ.1 கோடியாக உயர்த்தப்பட்டு 12 குடும்பங்களுக்கு மருத்துவ சேமநலநிதி ரூ.1 கோடி என்கின்ற வகையில் 5 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்னமும் 7 குடும்பங்களுக்கு மிக விரைவில் மருத்துவ சேமநல நிதி வழங்கப்படும். பல்வேறு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் புதியதாக திற க்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மருத்துவர் மற்றும் செவிலியர் குடியிருப்புகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டிற்கென “தனி அறை“ அமைத்து தரப்பட்டுள்ளது. தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் சுமார் 47,000 ஒப்பந்த பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**ஒப்பந்த பணியாளர்களுக்கு உயர்த்திய ஊதியங்கள்**

முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டதன் அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்களுக்கான ஊதியம் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது. சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவர்கள் பெற்று வந்த பழைய மாத ஊதியம் ரூ.26,000/ தற்போது இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு அவர்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.34,000/ பல் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.26, 000/ தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.34,000/ தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.16,500/ தற்போது உயர்த்தி வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் ரூ.21,000/ தாய் சேய் நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.15,000/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.19,000/ ஒப்பந்த செவிலியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.14,000/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.18,000/ மருந்தாளுநர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.12,000/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.15,000/ துணை செவிலியர்களுக்கு வழங்கப்பட்ட மாத ஊதியம் ரூ.11,000/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.14,000/ இயன்முறை சிகிச்சையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.10,000/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.13,000/ ஆய்வக நுட்புநர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஊதியம் ரூ.10,000/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.13,000/ பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட மாத ஊதியம் ரூ.6,500/ தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் ரூ.8,500/ என மாத ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தாய் சேய் நலப்பணியாளர்களுக்கு (RCH) மாதம் சொற்பத் தொகையாக ரூ.1,500 வழங்கப்பட்டு வந்தது, தற்போது பத்து மடங்காக உயர்த்தப்பட்டு மாதம் ரூ.15,000/ வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மலைக்கிராமங்கள் மற்றும் தொலைதூர கிராமங்களில் பணிபுரியும் 2,650 ஆஷா பணியாளர்களுக்கு சொற்பத் தொகையே வழங்கப்பட்டு வந்தது, தற்போது மாதம் ரூ.5,100/ ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு. இளங்கோ மகேஸ்வரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி மற்றும் துறை சார்ந்த இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

### நாட்டில் ‘செமி கண்டக்டர் துறை’ மேம்பட

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?


## நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.13-

நாட்டில் குறைக்கடத்தி (Semiconductor) உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் மேற்கொண்ட ஒப்பந்தம் குறித்தும், குறைக்கடத்தி உற்பத்திக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்கள் எவை மற்றும் அதன் காரணங்கள் என்ன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

குறைக்கடத்தி (Semiconductor) ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு தொடர்பாக இந்தியாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்(MoU) விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்



குறைக்கடத்தியின் உற்பத்தி திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலங்கள் எவை என்றும் எந்த அடிப்படையில் அந்த மாநிலங்கள் தேர்வு செய்யப்பட்டது என்றும் கேள்வி எழுப்பினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவைகளை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்றும் மேலும் ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் மேற்கொன்டு வரும் மின்னணு பொருட்கள் உற்பத்திக்கு இந்த ஒப்பந்தம் எந்த வகையில் பொருந்தும் எனவும் கேள்வி எழுப்பினார்.

குறைக்கடத்தித் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்புக்கான இந்தியாவின் மேலான வியூகத்திற்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒத்துப்போகிறதா என்றும், அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

குறைக்கடத்தித் துறையில் அத்தொழில் சார்ந்தவர்களுக்கும் கல்வி நிலையங்களும் அதன் மீதான திறனை வளர்த்துக் கொள்ள ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி

# அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஜெனரேட்டர் வசதி செய்து தரப்படும்!

## பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ அறிவிப்பு

பல்லவபுரம், பிப். 13 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பழைய பல்லாவரம், அஸ்தினாபுரம், அனகாபுத்தூர், குரோம்பேட்டை , பல்லாவரம் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, மண்டல தலைவர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன இந் நிகழ்ச்சிகள் கலந்து கொண்டு சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி கூறியதாவது:-

பழைய பல்லாவரம் பொன்னியம்மன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி அஸ்தினாபுரத்தில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் இப் பகுதிகளில் உள்ள தனியார் பள்ளிக்கு நிகரான பள்ளியாக கல்வியில் தரம் உயர்ந்து நிற்கின்றன. நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து அரசு பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகரான பள்ளியாக திகழ பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றார் அதன் பயனாகவே இப்பள்ளிகள் என்று தனியார் பள்ளிகளுக்கு போட்டியிட்டு 98 சதவீத தேர்ச்சிகள் பெற்று மாணவ மாணவிகள் திகழ்ந்து வருகிறார்கள் இப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்காக என்னிடத்தில்மேயர் இடத்தில் இருந்து பரிந்துரை கடிதம் பெறும் அளவிற்கு உயர்ந்திருப்பது கண்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆகவே இப்பள்ளிகளில் போதிய வகுப்பறைகள் இல்லை என்ற குறையைப் போக்கு வண்ணம் 2.10 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டும் பணிகள் அடிக்கல் நாட்டில் துவங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த மாணவர் மாணவிகள் ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளனர். ஏற்கனவே இப்பள்ளியில் வகுப்பறைக்கு முன்பு நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல் பழைய பல்லாவரம் பொன்னியம்மன் கோவில் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளும் நிழற்குடை அமைக்க தொகுதி மேம்பாட்டின் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும் மின்தடை ஏற்படும் காலங்களில் மாணவர்களுக்கு பிரச்சனை இன்றி கல்வியை தொடர தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் பள்ளிகளிலும் ஜெனரேட்டர் வசதி ஏற்பாடு செய்யப்படும்.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும் ஆண்டுதோறும் பத்தாம் வகுப்பு 12 ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 10000, 7000, 5000 என எனது சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் இவ்வாறு வழங்கப்படும்.

எனவே அரசு உங்களுக்கு அனைத்து உதவிகளையும் பள்ளிகளுக்கு செய்ய தயாராக உள்ளன நீங்கள் உங்கள் படிப்பை எந்தவித இடர்பாடும் இன்றி தொடர்ந்து மருத்துவராகவும் இன்ஜினியர் ஆகவோ உயர்ந்து இந்த பள்ளிக்கும் உங்கள் பெற்றோர்களுக்கு நல்ல மதிப்பை தேடித் தர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சயில் பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார், ஏ.கே கருணாகரன், பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியை , ஆசிரியர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் கொத்தகுப்பம், அத்திவாஞ்சேரி, கார்லப்பாக்கம், தாங்கல் காலனி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற மற்றும் பொது ஆகிய நிதியிலிருந்து ரூபாய் 1 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம் தொடக்கப்பள்ளி கட்டிடம் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கலையரங்க கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. பணிகளை துவக்கி வைத்து புதிய பள்ளி கட்டடத்தை திறந்து வைத்தார். உடன் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் பிடி சந்திரன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஒன்றிய குழு துணை தலைவர் பொன்சு பாரதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, திருமலை லோகநாதன் கதிரவன், கோவர்தன், மோகன், குமரேசன், சிவக்குமார், வி.வி.மணி, சுப்பிரமணியம் , தேவராஜன், சுரேஷ் , செல்வம் , ரகுவரால் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



பூவிருந்தவல்லி தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் காக்களூரில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றமேம்பாட்டு நிதிமற்றும் மாவட்ட நூலக நிதிலிருந்து ரூபாய் 67.50 லட்சம் மதிப்பீட்டில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு புதிய கிளை நூலக கட்டிடம் திறப்பு விழா ஒன்றிய கவுன்சிலர் த.எத்திராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கட்டிடத்தை திறந்து வைத்து ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. முன்னிலையில் நூலகத்தை பார்வையிட்டார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், மாவட்ட கவுன்சிலர் டி.தென்னவன், ஞானசம்பந்தம், தங்கவேலு, கே.கே. சொக்கலிங்கம், சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.எம்.ராமச்சந்திரன், டி.டி.தயாளன், எஸ்.சௌந்தரராஜன், வி.தியாகராஜன், த.சுகுமார், வழக்கறிஞர் வினோத், ஏ.கே.அபினேஷ், ஆர்.பிரபு, வி.சங்கர், கே.சரவணன், வேலுதம்பி, ஜி.சரவணன்,கே.சி.சூரியபிரபு, ராஜி, கா.ரோ.கார்த்திக், கே.பி.மணி, மிரசா, எம்.டி.பாலஜி உள்பட பலர் உள்ளனர்.

## வரவிருக்கின்ற

# நாடாளுமன்றத் தேர்தல் "இந்தியாவையே காப்பாற்றும் தேர்தல்"!

## கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

**சென்னை, பிப்.13-**

**"வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் இந்தியாவையே காப்பதற்கான ஒரு தேர்தல்" என்று கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு கழகத்தின் சார்பில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்' என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதிவாரியாக தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்கள் வரும் 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளன.

இந்த பொதுக்கூட்டங்களை மிகச் சிறப்பாக நடத்துவது குறித்து நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு குழு, அனைத்து மாவட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பொறுப்பு அமைச்சர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தியது.

இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்பு குழு உறுப்பினருமான அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

"மக்களவைத் தேர்தல் நெருங்கிவிட்டது. வரவிருக்கின்ற இந்த நாடாளுமன்றத் தேர்தல் என்பது மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். இதனை இன்னொரு தேர்தல் போல நாம் கடந்து விட முடியாது. இந்தத் தேர்தல் இந்தியாவையே காப்பதற்கான ஒரு தேர்தல்.

### மிக மிக முக்கியமான தேர்தல்!

மாநில உரிமைகளை மீட்பதற்கான இந்தத் தேர்தல் நமக்கு மிக மிக முக்கியமான தேர்தல். எனவேதான் நம் மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவரின் ஆணைப்படி வருகின்ற 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு முழுக்க மக்களவைத் தொகுதி வாரியாக உரிமைகளை மீட்க தலைவரின் குரல் 'பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும்' என்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

நம் கழகத்தின் மூத்த முன்னணியினர் இந்தக் கூட்டங்களில் பங்கேற்றுப் பேச இருக்கிறார்கள். இந்தக் கூட்டங்களை மிக மிக வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த ஆலோசனைக் கூட்டம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது.

எப்படி கடந்த சட்டமன்றத் தேர்தலில் `விடியலை நோக்கி தலைவரின் குரல்' என்று நாம் அனைவரும் பிரச்சாரம் செய்தோமோ, அதே மாதிரி இந்த முறை `உரிமைகளை மீட்க, தலைவரின் குரல்' என்ற முழக்கத்தோடு நாம் தேர்தல் களத்தைக் காண இருக்கிறோம்.

மிக முக்கியமான ஒரு கட்டத்தில் இந்தத் தேர்தலை நாம் சந்திக்கிறோம். அந்த விழிப்புணர்வோடு தான் நாம் இனி வருகிற ஒவ்வொரு நாளும் தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட பத்து நாட்களாக நம் அண்ணா அறிவாலயத்தில் அமர்ந்து கழகத்தின் சார்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு சார்பாக நாடாளுமன்றத் தொகுதிகள் சார்பில், ஆய்வுக் கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். அந்தக் கூட்டங்களின்போது கழகம் சார்ந்தும், தேர்தல் சார்ந்தும் பல்வேறு கருத்துகளைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்திருக்கிறீர்கள்.

அவற்றையெல்லாம் நம் முதலமைச்சரின் கவனத்துக்கு நாங்கள் எடுத்துச் சென்றுள்ளோம். முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்துகளுக்கெல்லாம் நிச்சயம் சரியான ஒரு தீர்வை அளிப்பார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது.

### திட்டங்களைக் கொண்டாடும் தமிழ்நாட்டு மக்கள்!

இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு இந்திய ஒன்றியம் முழுவதும், மிகப் பெரிய வரவேற்பு இருக்கிறது. நம் தமிழ்நாட்டு மக்கள் நம் திட்டங்களையெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நம் கழக அரசுக்கு மிகப்பெரிய அளவில் ஆதரவும் வரவேற்பும் மக்கள் மத்தியில் இருக்கிறது.

குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு மிகப்பெரிய வரவேற்பு உள்ளது. இதுவரை ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் பயனடைந்து இருக்கிறார்கள். அதாவது தகுதியுள்ளவர்களில் 85லிருந்து 90 சதவிகித மகளிருக்கு உரிமைத் தொகை சென்றடைந்துள்ளது.

விண்ணப்பித்தவர்கள் ஒரு கோடியே 60 லட்சம் நபர்கள். நாம் ஏற்கெனவே ஒரு கோடியே 15 லட்சம் நபர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். நான்கைந்து மாதங்களாக இந்தத் திட்டத்தில் பயன் பெற்று வருபவர்களை அவர்களை எல்லாம் சந்தித்து, நம் அரசின் சாதனைகளை, ஒன்றிய அரசின் பாசிசப் போக்கை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

தேர்தல் மேற்பார்வை ஒருங்கிணைப்புக் குழு ஆலோசனைக் கூட்டத்தின் போது தகுதி இருந்தும் மகளிர் உரிமைத் தொகை கிடைக்காத மகளிர் விவரங்களைக் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வருமானச் சான்று உள்ளிட்ட ஆதாரங்களோடு எங்களிடம் கொடுக்கச் சொல்லி இருந்தோம். அதை முழுமையாகக் கொடுத்து விட்டீர்கள் என்றால், அதைச் சரிசெய்வதற்கான பணிகளை நாம் மேற்கொள்ளலாம்.

### கடுமையான நிதி நெருக்கடி!

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை எப்படி எல்லாம் ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறது என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். அப்படி இருந்தும் கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையில்தான் இந்த மகளிர் உரிமைத் திட்டம், மகளிருக்குக் கட்டணம் இல்லா பேருந்து வசதி போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மகளிருக்குக் கட்டணம் இல்லா பேருந்துத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் கிட்டத்தட்ட 900 ரூபாய் சேமிக்கிறார்கள்.

இரண்டு லட்சத்து 71 ஆயிரம் மாணவிகள், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் இந்த இரண்டரை வருடங்களில் பயனடைந்து இருக்கிறார்கள். அதேபோல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இதில் தினமும் 17 லட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகிறார்கள். 'நான் முதல்வன்' திட்டம் வாயிலாக இதுவரைக்கும் 12 லட்சம் மாணவர்கள் பயன் பெற்று இருக்கிறார்கள்.

### நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு துரோகம்!

எனவே, இப்படிப் பல்வேறு திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நிதி ஒதுக்கீட்டில் மிகப்பெரிய துரோகத்தை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குச் செய்து வருகிறது.

கடந்த ஐந்து வருடத்தில் மட்டும் நாம் ஆறரை லட்சம் கோடி ரூபாய் வரி கட்டியிருக்கிறோம். ஆனால், ஒன்றிய அரசு நம் தமிழ்நாட்டுக்குத் திருப்பிக் கொடுத்தது எவ்வளவு என்று பார்த்தால், வெறும் ஒன்றரை லட்சம் கோடி ரூபாய்.

இதை மக்களிடம் எடுத்துக் கொண்டு சென்று பேசுங்கள். இதை ஒரு பேசு பொருளாக்குங்கள். நம் தமிழ்நாட்டு மக்கள் ஒரு ரூபாய் கொடுத்தால், நமக்குத் திருப்பி ஒன்றிய அரசு டெல்லியில் இருந்து நமக்குக் கொடுப்பது வெறும் 29 பைசா. மக்களிடம் தொடர்ந்து இதைப் பேசிக் கொண்டே இருங்கள்.

புயல், மழை, வெள்ளம் என எது வந்தாலும் ஒரு பைசா கூட நிவாரணமாகத் தர மறுக்கிறார்கள். எல்லோரும் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். ஒன்றிய அமைச்சர்கள் எல்லாம் வந்தார்கள். ஆனால், நிதி மட்டும் இதுவரைக்கும் வரவே இல்லை. நிதி உரிமை மட்டுமல்ல, கல்வி உரிமை, மொழி உரிமை என மாநிலத்தின் அத்தனை உரிமைகளையும் ஒன்றிய அரசு பறிக்கிறது.

### இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு!

சேலத்தில் கடந்த ஜனவரி 21ஆம் தேதி மிகப்பெரிய எழுச்சியோடு நடைபெற்ற கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் சிறப்பான 25 தீர்மானங்களை நிறைவேற்றினோம். தமிழ்நாடு அரசின் திட்டங்களைப் பாராட்டியும், மாநில உரிமைகளைப் பறிக்கின்ற ஒன்றிய அரசின் பாசிசப் போக்கை கண்டித்தும்தான் நாம் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பினோம். அந்தத் தீர்மானங்களில் உள்ள அம்சங்களை, நீங்கள் படித்துப் பார்த்து தமிழ்நாட்டின் பட்டித் தொட்டியெங்கும் அதைப் பரப்ப வேண்டும்.

**இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு இந்திய ஒன்றியம் முழுவதும், மிகப் பெரிய வரவேற்பு இருக்கிறது. நம் தமிழ்நாட்டு மக்கள் நம் திட்டங்களையெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நம் கழக அரசுக்கு மிகப்பெரிய அளவில் ஆதரவும் வரவேற்பும் மக்கள் மத்தியில் இருக்கிறது.**

### உரையைப் படிக்க மறுத்த ஆளுநர்!

இன்றைக்குக் காலையில் கூட சட்டசபையில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அரசு கொடுத்த அறிக்கையையே கவர்னர் வாசிக்க மறுத்துவிட்டார். அதனால் ஒன்றும் நடந்துவிடவில்லை. நம் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையை முழுவதையும் வாசித்தார்கள். அவை அப்படியே அவைக் குறிப்பில் ஏறின.

ஆனால், உரையை படிக்காததற்கு ஆளுநர் என்ன காரணம் சொன்னார். 'தேசிய கீதம் பாட வேண்டும். தேசிய கீதத்தை அவமரியாதை செய்கிறோம்' என்ற தப்பான செய்தியைப் பரப்புகிறார்.

எப்போதும் நடப்பதுபோல் காலையில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி ஆரம்பிப்போம், நிகழ்ச்சியை முடிக்கும்போது தேசிய கீதம் பாடுவது தான் வழக்கம். அது அவருக்கும் தெரியும். இருந்தாலும், இதை ஒரு பிரச்சினையாக்கினார்.

இதற்காகத்தான் ஆளுநர் என்ற பதவியே தேவையில்லை என்று, இளைஞர் அணி மாநாட்டில் நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். இப்படி எல்லா பக்கமும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இதையெல்லாம் மக்களிடம் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒன்றிய பா.ஜ.க அரசு 2014 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோது என்ன சொன்னார்கள்.

`புதிய இந்தியா பிறக்கப் போகிறது' என்று சொன்னார்கள். `புதிய இந்தியாவை உருவாக்குவோம்' என்று சொன்னார்கள். ஏற்கெனவே, இருந்த இந்தியாவைச் சிதைத்ததுதான் இவர்களின் ஒரே சாதனை. அதேபோல் ஆட்சிக்கு வரும்போது, `2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவோம்' என்று சொன்னார்கள். ஆனால், இதுவரைக்கும் இரண்டு லட்சம் பேருக்குக் கூட அவர்கள் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவில்லை.

2017இல் இந்தியா வல்லரசு ஆகிவிடும் என்று பிரதமர் அப்போது சொன்னார். இப்போது என்ன சொல்கிறார் 2047இல் இந்தியாவை வல்லரசு ஆக்கி விடுவோம் என்று திரும்பவும் அதே கதையைச் சொல்கிறார். `ஊழலை ஒழிப்போம், கறுப்புப் பணத்தை மீட்போம்' என்றார்கள். பண மதிப்பிழப்பைக் கொண்டு வந்து ஆயிரக்கணக்கான மக்களைச் சாகடித்தார்கள். ஆனால், எதுவுமே நடக்கவில்லை.

### ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்த ஒன்றிய அரசு!

ஊழல் ஒழிப்பு பற்றிப் பேசிய ஒன்றிய அரசு ஏழரை லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்திருக்கிறது. இதனை நாம் சொல்லவில்லை, சி.ஏ.ஜி அறிக்கையே அம்பலப்படுத்தி இருக்கிறது. இந்த அரசால் பயனடைவது கார்ப்பரேட் கம்பெனிகள் தான். அதானி மட்டும்தான். இதுவரை கார்ப்பரேட் கடன்கள் மட்டும் 14 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால், விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய மறுக்கிறார்கள்.

இன்றைக்குக் கூட டெல்லியில் விவசாயிகள் திரண்டு வந்து ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கு, இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் தேர்தலுக்குள் கொண்டு வருவோம் என அமைச்சர் கூறுகிறார்.

நீட் தேர்வைத் திணித்து நம் வீட்டு பிள்ளைகள் 21 பேர் இதுவரைக்கும் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கொடுமைகளையும் செய்துள்ள பா.ஜ.கவிடம் இன்னொரு முறை நம் நாட்டைக் கொடுத்துவிட்டோம் என்றால், இந்தியாவே இல்லாமல் போய்விடும். மாநிலங்கள் எல்லாம் முனிசிபாலிட்டி அளவுக்கு ஆக்கிவிடுவார். இதையெல்லாம்தான் நாம் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காகத்தான் 'உரிமைகளை மீட்க, தலைவரின் குரல்' என்ற பெயரில், மிகப்பெரிய பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நாம் நடத்த இருக்கிறோம்.

### பா.ஜ.க. எதிரி என்று நாடகம் ஆடும் அ.தி.மு.க.!

உரிமைகளைப் பறித்தவர்கள் மட்டுமல்லாமல், பறிப்பதற்குத் துணை போன அடிமைகளையும் நாம் மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும். இன்றைக்கு அ.தி.மு.கவினர் ஏதோ பா.ஜ.க கூட்டணியை விட்டு வெளியே வந்துவிட்டோம் என்று திடீரென சிறுபான்மையினர் மீது, திடீர் பாசத்தைப் பொழிகிறார்கள். ஒரே நாளில் புனிதன் ஆகிவிட்டது போல ஒரே நாளில் நாங்கள் பா.ஜ.க.வுக்கு எதிரி என்று நாடகம் போடுகிறார்கள். ஆனால், மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை.

வேளாண் விரோதச் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தபோது அதை ஆதரித்தவர்கள் யார் என்றால், இதே அடிமை அ.தி.மு.கவினர்தான். நீட் தேர்வை பா.ஜ.க திணித்தபோது அதை அனுமதித்தது யார் என்று பார்த்தால், இதே அடிமை அ.தி.மு.கதான். குடியுரிமைத் திருத்தச் சட்டம் வந்தபோது மாநிலங்களவையில் அ.தி.மு.க எம்.பிக்கள் ஆதரவு கொடுத்ததால் தான் அந்தச் சட்டமே நிறைவேறியது.

அந்தச் சட்டத்தால் யாருக்கும் பாதிப்பு இல்லை என்று பா.ஜ.கவுக்கு வக்காலத்து வாங்கியவர்தான் நம் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். ஆனால், இன்றைக்கு அவர்கள் பா.ஜ.க.வுக்கு எதிரானவர்கள் போல வேஷம் போடுகிறார்கள். இதை மக்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை. பத்தாண்டு காலம் பா.ஜ.க தமிழ்நாட்டைச் சீரழித்தது என்றால், நேரடியாக அவர்கள் வந்து செய்யவில்லை. அ.தி.மு.கவின் உதவியோடுதான் எல்லாவற்றையும் நமக்கு எதிராகச் செய்து முடித்தார்கள்.

இதையெல்லாம்தான் நாம் மக்களிடம் எடுத்துச் செல்லவேண்டும். நம் பிரச்சாரம் வெற்றிப் பிரச்சாரமாக அமைந்திட வேண்டும். வருகின்ற 16, 17 மற்றும் 18ஆம் தேதிகளில் நடைபெற உள்ள இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் நான் 17ஆம் தேதி இராமநாதபுரத்தில் உங்களையெல்லாம் சந்திக்க இருக்கிறேன்.

ஒவ்வொரு மக்களவைத் தொகுதிக்கும் மையமாக உள்ள இடத்தில், நமது கழக முண்ணனியினர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்ற இருக்கிறீர்கள். இந்த மூன்று நாட்களில் சென்னை நீங்கலாக 37 மக்களவைத் தொகுதிகளில் இந்தக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

### தலைவர் பிறந்த மார்ச் 1-இல் சென்னையில் பிரமாண்டக் கூட்டம்!

தென் சென்னை, மத்திய சென்னை, வடசென்னை ஆகிய மூன்று தொகுதிகளுக்கான மிகப்பெரிய, ஒரு பிரமாண்டக் கூட்டம் நம் தலைவரின் பிறந்த நாளான மார்ச் 1 அன்று நடைபெற இருக்கிறது. எனவே, இந்தக் கூட்டங்களையெல்லாம் மிகப்பெரிய வெற்றி அடையச் செய்ய வேண்டியது நம் கடமை.


விடியலை நோக்கி தலைவரின் குரலாக நாம் 2021இல் தமிழ்நாடு எங்கும் எதிரொலித்தோம். தமிழ்நாட்டுக்குப் புதிய விடியல் கிடைத்தது. அதேபோல் இப்போது உரிமைகளை மீட்க தலைவரின் குரலாக எதிரொலிப்போம். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் விடியல் கிடைக்கும் நாள் தூரத்தில் இல்லை. கலைஞர் நூற்றாண்டில் 'பாசிசம் வீழ்ந்தது, இந்தியா வென்றது' என்ற வரலாற்றைப் படைத்திடுவோம் என்று கூறி விடைபெறுகிறேன்."

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அனைவரையும் வரவேற்று பேசினார். கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையுரை நிகழ்த்தினார். அமைச்சர் எ.வ.வேலு அனைவருக்கும் நன்றி கூறினார்.


இந்தக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர்கள், மாவட்டக் கழக செயலாளர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் உரையாடினார்.

# இயங்கியல் கோட்பாட்டில் கலைஞர்



■ நீரை.மகேந்திரன்

காலமாற்றங்களையும் வரலாற்று மாற்றங்களையும் இயங்கியல் என்கிற அறிவியல் கண்ணோட்டத்தில், அதாவது பொருள் முதல்வாத கண்ணோட்டத்தில் பகுக்க முடியும். அந்தத் தத்துவத்தின்படி தனிநபர்களை, அதாவது வரலாற்றில் பங்களிப்புச் செய்து கொண்டிருக்கும் மக்களை அணுகும் போது 'வரலாற்றில் தனிநபர்களின் பாத்திரம்' என்பதை வரையறை செய்கிறார் ஏங்கெல்ஸ். அதே நேரத்தில் பெருந்திரளான மக்களைத் தலைமை ஏற்று வழிநடத்தும் தலைவர்களும் தனிநபர்களே எனவும் குறிப்பிடுகிறது இயங்கியல் தத்துவம்.

அதாவது, மக்கள்தான் வரலாற்றைப் படைக்கிறார்கள் என்று கூறுகிற தத்துவம், இவர்களைத் தலைமை தாங்கும் தலைவர்களும் தனிநபர்களே என்கிறது. இந்தத் தனிநபர்கள் முதன்மைப் பாத்திரத்தை வகிப்பதற்கு அவர்கள் தனித்த திறமை பெற்றிருக்க வேண்டும். அதற்கு சாத்தியமான சூழ்நிலைகள் இருந்தால் மட்டுமே, இந்தத் திறமை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்தச் சூழ்நிலைகள் இல்லாதபோது அவர்களின் திறமைகள் வெளிப்படுவதில்லை. ஆக இந்தத் திறமை என்பது சூழ்நிலைகளை அறிந்து செயற்படுவதில் அடங்கியிருக்கிறது.

இந்தத் தனிநபர்கள் பிறக்கும்போதே சிறப்பியல்புகளோடு பிறக்கவில்லை. தான் பிறந்த சமூகத்தில் காணப்படும் நாகரீகத்தைத் தனது செயற்பாடுகளால் தன்வசப்படுத்திக் கொள்ளும் போது தனது சிறப்பியல்புகளை வளர்த்துக் கொள்கிறார். சமூக வளர்ச்சிப் போக்கில் தனிநபர் தமது சிறப்பியல்புகளை, சமூகச் செயற்பாட்டின் ஊடே பெற்றுக் கொள்கிறார் என மார்க்சிய விளக்கம் கொள்ளலாம்.

மார்க்சியம் முன்னிறுத்தும் பொருள் முதல்வாத இயங்கியல் விதிகளின்படி தமிழ்நாட்டுச் சூழலை, தமிழ் நிலப்பரப்பின் தலைவர்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம் எனில், அதில் மேலோங்கி நிற்பவராகக் கலைஞரை நாம் அறியலாம்.

## இரட்டைத் தலைவர்கள்

சமீபத்தில், சமூக வலைத்தளங்களில் ஒரு கருத்தினை வாசித்தேன். கியூபா நாட்டின் விடுதலைக்கு இணைந்து நின்று செயல்பட்ட ஃபிடல் காஸ்ட்ரோ, சே குவேராவைப் போல இந்திய ஜனநாயக அரசியல் சூழலுக்கு ஏற்ப, தமிழ்நாட்டின் அரசியல் களத்தை வசப்படுத்தி மாற்றங்களைக் கண்டவர்கள் பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞரும் என அதில் வாசித்தேன். அந்த ஒப்பீடு சரியானது, சரியானது அல்ல என்றும் விவாதங்கள் அதில் நடைபெற்றன. ஆனால், அதிலிருந்து நான் புரிந்துகொண்டது அல்லது நாம் புரிந்துகொள்ள வேண்டிய இடம் என்பது "அந்த இரட்டை ஆளுமைகளில், ஒருவரின் கனவை மற்றொருவர் தொடர்ந்து எடுத்துச் சென்று நிறைவேற்றினார்" என்பது. இது கியூபா சூழலுக்கும் தமிழ்நாட்டுச் சூழலுக்குமான பொருத்தப்பாடு.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் அதன் மூலம் ஒடுக்கப்பட்ட சமூகத்துக்கான உரிமையினை நிலைநாட்ட வேண்டும் என தனது தம்பியரோடு பேரறிஞர் அண்ணா தனி இயக்கம் கண்டார். அந்த இயக்கத்தினை ஆட்சிப் பொறுப்பில் ஏற்றி, ஒரு வரலாற்றினை உருவாக்கு கிறார். அந்தக் கனவினை அடுத்தக் கட்டத்திற்கு, இன்னும் நூறு ஆண்டுகளுக்கு அந்த அரசியல் உரிமையினை வலுப்படுத்தி நின்றவர் கலைஞர்.

அதாவது இயங்கியல் விதிகளின்படி, சூழ்நிலைகளை அறிந்து சமூக நீதிக் கொள்கையிலான மாற்றங்களைத் தொடர்ச்சியாக வகுத்துக் கொண்டே இருந்தவர் கலைஞர். அந்த வகையில் ஃபிடல் காஸ்ட்ரோ, சேகுவேராவைப் போல பேரறிஞர் அண்ணாவையும் முத்தமிழறிஞர் கலைஞரையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மிகையானது அல்ல.

ஃபிடல் காஸ்ட்ரோ இல்லையென்றால், கியூபா என்னவாகி இருக்கும்? இதற்குத் திட்டவட்டமாக ஒரு பதில் சொல்ல முடியாது. தலைமை ஏற்கும் தனிநபர்களால் புதிய வரலாறு உருவாக்கப்பட்டிருக்கலாம் அல்லது தனித்த ஆளுமைகள் இல்லாமல் கியூபா சிதறடிக்கப்பட்டிருக்கக்கூடும். அதேபோன்ற நிலைமையைத் தமிழ்நாட்டில் ஒப்பிடலாம். அண்ணாவுக்குப் பின் ஆட்சிக்கும் கட்சிக்கும் கலைஞர் தலைமை ஏற்றிருக்கவில்லை என்றால், என்ன நடந்திருக்கும்? இந்தக் கேள்வி தொடர்ச்சியாகக் கேட்கப்பட்டு வருவதுதான்.

> **'வர்க்க சமூகத்தில் அனைவருக்கும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை, அதேநேரத்தில் வாய்ப்புக் கிடைப்பவர்களே தனிச்சிறப்பைப் பெற்றவராக இருக்கின்றனர்!'**

அண்ணாவுக்கு அவரைக் காக்கத் தம்பிகள் பட்டாளம் இருந்தது. அண்ணாவின் காலத்தில், அவரது மாபெரும் கனவின் முன்னால் அவர் மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் கடுகளவாகவே இருந்தன. ஆனால், கலைஞர் காலம் அப்படியாக இல்லை என்பதை வரலாற்றில் அறியலாம். ஆனாலும், தனது தனிச்சிறப்பான தலைமைப் பாத்திரத்தின் மூலம் வரலாற்றில் வாழ்பவராக இயங்கியல் கோட்பாட்டில் பொருந்துகிறார் கலைஞர்.

## வாய்ப்பும் தனிச்சிறப்பும்

இயங்கியல் கருத்துக்குப் பொருந்தும் கலைஞரின் தலைமைப் பண்பினை, இயங்கியலை மறுக்கவும் முன்வைக்க முடியும். அதாவது 'வர்க்க சமூகத்தில் அனைவருக்கும் வாய்ப்புகள் கிடைப்பதில்லை, அதேநேரத்தில் வாய்ப்புக் கிடைப்பவர்களே தனிச்சிறப்பைப் பெற்றவராக இருக்கின்றனர்' என்கிறது மார்க்சிய அறிவியல். கலைஞரை வியப்பவர்கள் இந்தக் கருத்துடன் நிச்சயம் மாறுபட முடியும். கலைஞரின் தனிச்சிறப்பான தலைமை ஏற்கும் பண்பு என்பது, அவரது சிறுவயதில் திருக்குவளை கிராமத்திலோ அல்லது திருவாரூர் நகரத்திலோ அன்றைக்கு இருந்த சமூகச் சூழலில் இருந்து அவர் உருவாக்கிக் கொண்டது வியப்பானது. ஏனென்றால், கலைஞர் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றுத் தனிச்சிறப்பை உருவாக்கிக் கொண்டவரல்ல, தானே வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு தனக்கான தனிச்சிறப்பை உருவாக்குகிறார் என்பதை அவரது சிறார் பருவ வரலாற்றில் இருந்தே நாம் காண முடியும்.

## கலைஞரிடம் இடம்

இயங்கியல் விதியின்படி, கலைஞரை ஒப்பிட்டு நான் முரண்படும் மற்றொரு இடமும் உள்ளது. தனித் திறமை கொண்டு தலைமை ஏற்கும், தனிநபர் மட்டுமே வரலாற்றில் முக்கியக் கடமையினை நிகழ்த்த முடியும் என்பதை மறுக்கிறது மார்க்சியம். அதாவது, அந்த வரலாற்றுக் கடமையை இந்தப் பெயர் கொண்ட நபர் நிறைவேற்றியிராவிட்டால், வேறொரு பெயர் கொண்ட நபர் இதனை நிறைவேற்றியிருப்பார் என்கிறது. இதனைக் குறிப்பிடும் ஏங்கெல்ஸ், "நெப்போலியன் இருந்திராவிட்டால், அவனுடைய பாத்திரத்தை வேறு ஒருவன் நிறைவேற்றியிருப்பான், இம்மாதிரி மனிதர்கள் தேவைப்படுகிற போதெல்லாம் சமூகத்துக்குக் கிடைத்து வந்திருக்கிறார்கள் என்பதே இதற்குச் சான்று" என்கிறார். இந்த வரலாற்றுச் சான்றுகள் உண்மையென நிறுவப்பட்டாலும், கலைஞரை வாசிப்பவன் என்கிற முறையில் நான் முரண்படுகிறேன்.

ஏனென்றால், சமூகப் பங்களிப்பு மட்டுமல்ல தலைமை ஏற்கும் தனிநபர் ஆளுமையிலும் கலைஞர் யாருடனும் ஒப்பிட முடியாத இடத்தில் இருக்கிறார். அதாவது கலைஞருக்குப் பின் மற்றொரு கலைஞர் உருவாக முடியும் என்பதை ஏற்க முடியாத அளவுக்கு, வரலாற்று இயங்கியலை மீறும் வரலாற்றினை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் கலைஞர்.

## திராவிட இயக்க இதழ்கள் - 'தென்புலம்'



அன்றைய வட ஆற்காடு மாவட்டம், வேலூரிலிருந்து வெளி வந்த இதழ், 'தென்புலம்'. இதன் ஆசிரியர், தோப்பூர் திருவேங்கடம் என்பவர். இவர் பேரறிஞர் அண்ணாவின் நெருங்கிய நண்பர். அண்ணாவின் ஆட்சி காலத்தில் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திராவிட இயக்கச் சிற்றிதழாக அறியப்பட்ட இந்த இதழ், மாத இதழாக வெளிவந்தது.

இந்த இதழில், உலக வரலாறு தொடர்பான கட்டுரைகள், கல்வித் துறை குறித்த கட்டுரைகள், அறிஞர் திரு.வி.க. போன்றோரின் கருத்துரைகளின் மறுபிரசுரம், சிறுகதைகள் மற்றும் துணுக்குகள் போன்றவை வெளியிடப்பட்டன. அவ்வப்போது மரபுக்கவிதை, புத்தக மதிப்புரை ஆகியவையும் இடம்பெற்றன.

எழுத்தாளர் வல்லிக் கண்ணன் அவர்கள், இந்த இதழின் சிறப்பு அம்சமாக அம்பலவாணக் கவிராயர் எழுதிய 'உண்ணாமுலையும் மங்களம் மாமியும் உரையாடுகிறார்கள்' என்ற பகுதியைச் சொல்லியிருக்கிறார். அந்தத் தொடரில், படித்த, நாகரிகமான, அனுபவ ஞானம் பெற்ற மங்களம் மாமி என்பவரும், கிராமத்திலிருந்து நகரத்துக்கு வந்த உண்ணாமுலை என்பவரும் நாட்டு நடப்புகள், செய்திகள் பற்றி உரையாடுவது போல் எழுதப்பட்டது என்று தனது, 'தமிழில் சிறுபத்திரிகைகள்' எனும் நூலில் வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார்.

## :ப்ளாஷ்பேக்





முத்துராமலிங்கம்

### தூள் தூளான நெருக்கடி!

1993-ஆம் ஆண்டு கழகத்தில் ஏற்பட்ட பிரிவின்போது, மதுரை புறநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக தலைவர் கலைஞர் அவர்களால் நான் நியமனம் செய்யப்பட்டேன். அதைத் தொடர்ந்து, மதுரை புறநகர் மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர் கூட்டத்தை, திருமங்கலத்தில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தற்போதைய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தேன். அந்தக் கூட்டத்தில் "இந்த சிறு நெருக்கடியைத் தூள் தூளாக நொறுக்கிவிட்டு, மதுரை புறநகர் மாவட்ட இளைஞர் அணி வீர நடை போட்டு செயல்படட்டும்" என தளபதி அவர்கள் கொடுத்த ஊக்கம்தான், இப்போதும் உற்சாகத்துடன் இயங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

**-எம்.முத்துராமலிங்கம்**
**முன்னாள் எம்.எல்.ஏ.**
**மாநில இணைச் செயலாளர்,**
**கழக விவசாய அணி**
**மதுரை .**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### கைத்தறி ஆதரவு!

**1953-ஆம் ஆண்டு, கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக கைத்தறி விற்பனைப் பிரச்சாரத்தினை தி.மு.க நடத்தியது. திருச்சியில் பேரறிஞர் அண்ணா கலந்துகொண்டு பொது மக்களிடம் துணி விற்பனை செய்தார். அதற்காக, திருச்சி 'திராவிடப் பண்ணை' யில் தங்கி இருந்த அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. துணிகளைத் தோளில் சுமந்தபடி, 'கைத்தறித் துணிகளை வாங்குவீர்' என முழங்கிச் சென்றார் அண்ணா. அன்று ஒரு நாள் மட்டும் திருச்சியில் 5 ஆயிரம் ரூபாய்க்கு கைத்தறித் துணிகள் விற்பனை ஆயின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 387




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131